janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi




புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2023 ஜனவரி 08 - ஜனவரி 14 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 40






விழிப்புணர்வூட்டுவதில் முனைப்புடன் செயல்படுவோம் — ப 02

மக்களை காலில் போட்டு மிதிக்கும் மோடி அரசு! — ப 03

EPS-95 கூடுதல் ஓய்வூதியம்! யாருக்குப் பொருந்தும்? — ப 05








- 240 நாட்கள் வேலை செய்தால் பணி நிரந்தரம் செய்
- ரூ.21,000திற்கு குறையாத ஊதியம் வழங்கிடு
- ரூ.6,000க்கும் குறையாத ஓய்வூதியம் வழங்கிடு

# ஜனவரி 24ல் தமிழ்நாடு முழுவதும் மறியல் போர்!

## தமிழ்நாடு ஏஐடியுசி பொதுக்குழு முடிவு




தமிழ்நாடு ஏஐடியுசி பொதுக்குழு கூட்டம் ஜனவரி 3 இல் திருச்சி பி.எச்.இ.எல். அலுவலகத்தில் எஸ்.காசிவிஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது. அகில இந்திய துணைத்தலைவர் கே. சுப்பராயன் எம்பி, கொடியேற்றி வைத்தார். தேசிய செயலாளர்கள் டி. எம். மூர்த்தி, வஹிதாநிஜாம், ஆகியோர் அகில இந்திய,மாநில மாநாட்டு முடிவுகளை விளக்கிப் பேசினர். மாநில பொதுச்செயலாளர் ம. இராதாகிருஷ்ணன் அறிக்கை வைத்தார். 47 தோழர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். கீழ்க்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

- 240 நாட்கள் பணிபுரிந்தால் பணி நிரந்தரம்
- எந்தத் தொழிலில் பணிபுரிந்தாலும், ரூபாய் 21,000க்கு குறையாத மாத ஊதியம்
- EPS 95 மற்றும் நலவாரியங்களில் மாதம் 6000/– ரூபாய்க்கு குறையாத ஒய்வூதியம்
- நலவாரியப்பதிவுகளை எளிமைப்படுத்தி தாமதம் இல்லாமல் நிதிப்பயன்களை உயர்த்தி வழங்குதல்

உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும், மோடி அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளையும், நான்கு சட்டத் தொகுப்புகளையும் எதிர்த்தும் 2023 ஜனவரி 24ஆம் தேதி அன்று தமிழ்நாடு முழுவதும் மறியல் போராட்டத்தை மேற்கொள்வது என்று தமிழ்நாடு ஏஐடியுசியின் 20வது மாநாடு ஒருமனதாகத் தீர்மானித்தவாறு 150 க்கும் மேற்பட்ட மையங்களில் 50,000 பேர் மறியலில் ஈடுபட முடிவு செய்யப்பட்டது.

### ஜனவரி 30 அனைத்து தொழிற்சங்க தேசிய மாநாடு டெல்லி:

ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத கொள்கைகளை எதிர்த்து போராட திட்டமிட டெல்லியில் ஜனவரி 30 அன்று மத்திய தொழிற்சங்கங்கள், வங்கி, தொலை தொடர்பு உள்ளிட்ட 200 க்கும் மேற்பட்ட தொழில்வாரி தேசிய சம்மேளங்கள், அரசுப்பணியாளர், ஆசிரியர் அமைப்புகள் இணைந்து நடத்தும் தேசிய தொழிலாளர் மாநாட்டில் தமிழ்நாட்டில் இருந்து திரளாக பங்கேற்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

### மாநில நிர்வாகக்குழு தேர்வு:

மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்களாக கீழ்காணும் தோழர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

எஸ்.காசி.விஸ்வநாதன், கே.சுப்பராயன் எம்.பி, டி.எம்.மூர்த்தி, இரா.முத்தரசன், எம். செல்வராசு எம்.பி, நா.பெரியசாமி முன். எம்எல்ஏ, ஏ.எஸ்.கண்ணன் முன்.எம்எல்ஏ, மீனாள் சேதுராமன், என்.செல்வராஜ், எம்.சங்கையா, சி.தங்கவேல், மூர்த்தி (மின்சார வாரியம்), ஆர்.சடையப்பன் நெல்லை,கே. மணி தருமபுரி, எம்.ஜஹாங்கீர் செங்கல்பட்டு, ம.இராதாகிருஷ்ணன், கே.இரவி, வகிதா நிஜாம், எம்.ஆறுமுகம், எஸ். சந்திரகுமார், ஆர்.ஆறுமுகம், எஸ். சின்னசாமி, என்.சேகர், ஆர்.தில்லைவனம், ஆ.பாஸ்கர், வி.ஆதிமூலம், பி.பீட்டர் துரைராஜ், அருள் தாஸ்(மின்சார வாரியம்) கே.எம்.செல்வராஜ், பி.ஆர். நடராஜன், எம்.நந்தாசிங், எம்.முனுசாமி, டாக்டர் சாந்தி, வே..நடராஜா, ஆர்.துரைசாமி, அ.சாமிக்கண்ணு, டி.தனசேகரன், எம்.எஸ். மாதேஸ்வரன், மு.சம்பத், க.சுரேஷ், இ.அருணாசலம் (ஏஐபிஇஏ) கே.நடராஜன் (என்எப்டிஇ) எஸ்.எஸ்.சரவணன், ஏ.வளர்மதி, பி.சின்ன தம்பி, மதுரை கே.சேது, ஜெ.அருள், ஈ.கிருஷ்ணராஜ், சேலம் முருகன், ஆர்.பி.முத்துமாரி, எம்.கே. மாதையன் உள்பட 53 தோழர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

அகில இந்திய துணைத்தலைவர் சி.எச். வெங்கடாசலம், செயலாளர் ஸ்ரீ குமார், அரசுப்பணியாளர், பொதுக் காப்பீட்டு ஊழியர் சங்க தோழர்கள் நிரந்தர அழைப்பாளர்களாக முடிவு செய்யப்பட்டது.

மாலையில் கே.டி.கே. தங்கமணி நினைவு தினம் கருத்தரங்கம் "பாஜகவை அகற்றி தேசத்தை காப்போம்" என்ற தலைப்பில் எஸ். காசிவிஸ்வநாதன் தலைமையில், ச.ராஜ்குமார், க.சுரேஷ் எம்.சி. முன்னிலையில் நடைபெற்றது. வே.நடராஜா வரவேற்றார். டி.எம்.மூர்த்தி, வஹிதாநிஜாம் கருத்துரை வழங்கினர். ம. இராதாகிருஷ்ணன் நன்றி கூறினார்.



## தோழர் பி.எம். படங்களைத் தந்து உதவுக!

ப.மாணிக்கம் அவர்களின் நூற்றாண்டு மலர் தயாராகிறது. மலர் பொலிவு பெற, அவர் பங்கேற்ற நிகழ்வுகளின் புகைப்படங்களை வைத்துள்ள தோழர்கள்,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 'பாலன் இல்லம்' செவாலியே சிவாஜி கணேசன் தெரு தி. நகர், சென்னை 600017 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்து உதவ வேண்டுகிறோம். அவை பத்திரமாகத் திருப்பித் தரப்படும் என உறுதி அளிக்கிறோம்.

அலைபேசி வழியாக அனுப்ப விரும்பும் தோழர்கள், தரமான அலைபேசியில் சரியாகப் படம் எடுத்து, murthi.aituc@gmail.com என்ற இமெயில் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். தயவுசெய்து வாட்ஸ்ஆப்பில் அனுப்ப வேண்டாம்.

telegram செயலியில் 94443 60869 என்ற எண்ணிலும் (MURTHI TM AITUC) படங்களை அனுப்பலாம், உடையாது கிடைக்கும்.

இந்தப் பணியில் ஈடுபட விரும்பும் தோழர்கள், உங்களிடம் படம் இல்லை என்றாலும், வேறு தோழர்களிடம் இருப்பதைத் தேடிச் சேகரித்து அனுப்புங்கள். உங்களது சமூக ஊடகக் குழுக்களிலும் பகிர்ந்து உதவி செய்க!

**டி.எம்.மூர்த்தி**
மலர்க்குழுவிற்காக

கட்சிக் கடிதம்

# விழிப்புணர்வூட்டுவதில் முனைப்புடன் செயல்படுவோம்



பேரன்புமிக்க தோழர்களே!

**கடந்துபோன 2022 ஆம் ஆண்டின் இறுதி வாரத்தில், தலைநகர் சென்னையில், ஆயிரமாயிரம் ஆண்களும், பெண்களும் செங்கொடி தாங்கிய செம்படையாக அணி வகுத்து, "அதிகார அத்துமீறலில் ஈடுபடும் ஆளுநர் ரவியை திரும்பப் பெறு" என எழுப்பிய போர் முழக்கம் இடியோசை என எதிரொலித்தது.**

ஆம், டிசம்பர் 29ம் நாள், சென்னை பெருநகரின் அண்ணா சாலையில் உள்ள சைதாப்பேட்டை குயவர் வீதி, சேசாசலம் வீதி, ஜோன்ஸ் சாலை முழுவதும் மக்களின் செங்கடல் நுழைந்தது போல், செஞ்சேனையின் அணி வகுப்பால் நிரம்பி வழிந்தது.

செங்கொடி தாங்கிய அணி வகுப்பில், குழந்தைகளோடு தாய்மார்கள், இளைஞர்கள் அதிகம் பங்கேற்றிருந்தனர்.

தமிழக ஆளுநரின் அத்துமீறிய, அராஜக நடவடிக்கையை கண்டித்து, மோடியின் ஒன்றிய அரசு, ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் முனைப்போடு உழைக்கும் மக்களின் எழுச்சிப் பேரணி ஆர்ப்பரித்து சென்றது.

குயவர் வீதியில், முற்றுகைப் போராட்டப் பேரணி புறப்படும் நிகழ்வுக்கு தென் சென்னை மாவட்டக்குழு சிறப்பான ஏற்பாடு செய்து கொடுத்தது. , அழகான மேடை அமைத்து, அருமையான ஒலி பெருக்கி வசதிகள். தலைவர்கள் அமரும் இருக்கைகள் என ஒவ்வொன்றும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முற்றுகைப் பேரணி செல்லும் பாதைகள் செங்கொடிகளாலும், செந்தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர்கள், நிர்வாகக் குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், ஒன்றிய, கிளைச் செயலாளர்கள், கட்சியின் செயல்வீரர்கள், வர்க்க, வெகுஜன அரங்குகளில் பொறுப்பேற்று செயல்படும் நிர்வாகிகள், முன்னணித் தோழர்கள் என பேரணியில் பங்கேற்ற அனைவரும் காவல்துறையால், வழிமறித்து கைது செய்யப்பட்டனர்.

பேரணியாக அணிவகுத்த அனைவரும், ஒருவர் பாக்கியில்லாமல் கைதானார்கள். கைது செய்யப்பட்ட அனைவரும் அருகில் இருந்த ஒய்எம்சிஏ வளாகத்திற்கு கொண்டு சென்று, அங்கு வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டத்தினை வெற்றி பெறச் செய்திட்ட அனைத்து தோழர்களுக்கும், அமைப்புகளுக்கும், மாநிலக்குழு நன்றி பாராட்டி, வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

மாநில உரிமைகள், கூட்டாட்சி கோட்பாடு என்று முன்னெடுக்கப்பட்ட நமது அரசியல் போராட்டம் மென்மேலும் தீவிரமாக நடைபெற வேண்டும்.

நாட்டு மக்களின் நலனுக்காக நாம் தொடர்ந்து போராடுவோம். சமரசமின்றி நமது போராட்டம் தொடரும், இறுதி வெற்றி பெறும் வரை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

நமது போராட்டம் அரசியல் களத்தில் மட்டுமல்ல, சமூகக் களத்திலும் தொடர வேண்டியது அவசியமாகும். இந்தக் களத்தில் நடைபெறும் சாதிய அடக்குமுறைகள், தீண்டாமை செயல்களுக்கு எதிராக, நமது போராட்டம் தொடர வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி மலையில், "முருகன்" குடியேறி இருப்பதாக " ஆன்மிக " வாதிகள் வணங்கி வரும், அந்த "அருள்மிகு" பூமியில் சித்தரேவு என்ற கிராமம் உள்ளது. இங்கு செல்வ விநாயகர் கோவில் மற்றும் உச்சிமா காளியம்மன் கோவில் என இரண்டு கோயில்கள் உள்ளன.

இந்தக் கோயில்களில் பட்டியலின மக்களை "சாமி" கும்பிட அனுமதிக்க மாட்டோம் என சாதிவெறி ஆதிக்கம் பல, பல ஆண்டுகளாக அடக்கி வந்தது.

சாதிவெறி ஆதிக்கத்தை எதிர்த்து, அதன் அடக்குமுறை, அடாவடித்தனத்தை எதிர்த்து, நமது கட்சியின் மாவட்டக் குழுவும், ஒன்றியக் குழுவும் களப்போராட்டத்தை நடத்தி வந்தது. இத்துடன் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் வழக்கு தொடர்ந்து, சட்டப் போராட்டத்தையும் மேற்கொண்டது.

இருநிலைப் போராட்டத்தின் இறுதியில் சாதிவெறி ஆதிக்க சக்திகளின் அடாவடித்தனம் முறியடிக்கப்பட்டது.

இந்த வெற்றிச் செய்தியை பகிர்ந்து கொள்ள எண்ணிய போது, புதுக்கோட்டை மாவட்டத்தில், வேங்கைவயல் கிராமத்தில் நிலவும் தீண்டாமை செயல்கள் வெளிச்சத்துக்கு வந்தது.

கோவிலுக்குள் நுழையாதே என்ற தடை மட்டும் அல்ல,





டீக்கடையில் இரட்டை குவளை முறை நீடிப்பது மட்டும் அல்ல. பட்டியலின மக்களின் குடிநீரில் மனித மலம் கலக்கப்பட்ட குரூர வக்கிரமும் சேர்ந்து வெளிவந்தது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்காடு ஊராட்சிக்குட்பட்ட வேங்கை வயல் கிராமத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்கள் என அனைவரும் கூடி வாழ்ந்து வருகின்றனர்.

பட்டியலின மக்களின் பயன்பாட்டுக்கு என ஒரு மேல்நிலை குடிநீர் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குடிநீர் தொட்டியில்தான் மனித உருவில் வாழும், சாதி மிருகங்கள் மனித மலத்தை கலந்துள்ளன.

இந்தக் கொலைவெறி பாதகச் செயலை அறியாத அப்பாவி குழந்தைகள், அந்த மலம் கலந்த தண்ணீரை குடித்து, வாந்தி, பேதி என நோய்த் தொற்றிய நிலையில் அரசு மருத்துவ மனைக்கு சென்றுள்ளனர்.

ஒரு கிராமத்தில் வாழும் குழந்தைகள், சிறுவர்கள் கொத்துக் கொத்தாக பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் செய்தி, மாவட்ட கட்சிக்கு எட்டியவுடம், மனிதகுலம் வெட்கப்படத்தக்க இழி செயல் செய்த குற்றவாளிகளை கைது செய்து, தண்டிக்க வேண்டும் என போராடத் தொடங்கியுள்ளது. காலத்தில் தலையிட்டு போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்களை வாழ்த்திப் பாராட்டுகிறோம்.

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும் மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதாராமு, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே இருவரும் போர்க்கால வேகத்தில் செயல்பட்டதும், கிராமத்திற்கு சென்று விசாரணை நடத்தி மக்களின் உள்ளக்குமுறலை கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை மற்றும் மற்றும் குடிநீருக்கான ஏற்பாட்டை செய்தததுடன், உங்களுக்கு வேறு ஏதேனும் பிரச்சனைகள் உள்ளதா? என பொறுமையாக கேட்டு, அவைகளுக்கும் தீர்வு கண்டுள்ளனர்.

"ஆணுக்குப் பெண் இங்கு இளைப்பில்லை காணென்று கும்மியடி" என்று கும்மியடித்து குலவி எழுப்பி, மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் இருவரையும் மக்கள் பாராட்டி மகிழ்கின்றனர்.

இறையூர் கிராமத்தில் டீக்கடையில் இரட்டை குவளை பயன்படுத்துவதாக மக்கள் கூறியும், அந்த தீண்டாமை அரங்கேறும் டீக்கடைக்கு சென்று, அதன் உரிமையாளர் மூக்கையாவிடம் விசாரித்து, உண்மையை உறுதிபடுத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து டீ கடைக்காரர் வன்கொடுமை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

அய்யனார் கோவில் கதவுகள் பட்டியலின மக்களுக்கு திறக்கப்படுவதில்லை. அவர்கள் அய்யனாரை வணங்கும் உரிமைக்கும் இடமில்லை என்ற புகார் கூறப்பட்டதும், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள் அய்யனார் கோவிலை திறந்து வைத்து, பட்டியலின மக்களின் நீண்ட, நெடுநாள் வேண்டுதலை நிறைவேற்றியுள்ளனர்.

தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களில் செயல்படும் ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும், மாவட்ட அதிகாரிகளும், புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகத்தின் நடவடிக்கையை பின்பற்றுவார்களா?

தஞ்சாவூர் தெற்கு மாவட்டம் ஆம்பலாப்பட்டு கிராமத்தில் டீக்கடையில் இரட்டை குவளைமுறை பின்பற்றப்படுவது அறிந்து ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் பொதுச் செயலாளரும், கட்சியின் மாநில துணைச் செயலாளருமான தோழர்.மு.வீரபாண்டியன், கட்சியின் மாவட்டச் செயலாளர் முத்து. உத்திராபதி உள்ளிட்டோர் சம்பவ இடத்திற்கு அதிகாரிகளின் துணையோடு நேரில் சென்று, பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்..

தோழர்களே, நமது தேசம் பெரியது. மக்கள் தொகையும் அதிகம், அதுபோல் இங்கே சாதிகளும், மதங்களும், கடவுள்களும் அதிகம்.

மூடநம்பிக்கை, பழக்க வழக்கங்களில் மூழ்கி நிற்கும் இவர்களை ஆதிக்க சக்திகள் தங்களுக்கு அடிமைப்படுத்திக் கொண்டு தங்களின் சுயதேவைகளை பூர்த்தி செய்துகொள்கிறார்கள்.

தொடர்ச்சி 4ம் பக்கம்



அமர்ஜித் கௌர்

**விலைவாசி உயர்வு விழி பிதுங்குகிறது! முதலாளிகளை வாழ வைப்பதில்தான் மோடி அரசின் முழுக் கவனமும் உள்ளது! போராடிப் பெற்ற தொழிலாளர் உரிமைகள் எல்லாம் பறிபோகிறது. தொழிற்சங்கங்கள் தான் மக்களுக்கு நம்பிக்கை தர வேண்டும்" – ஏ.ஐ.டி.யூ.சி அகில இந்திய பொதுச் செயலாளர் அமர்ஜித் கௌரின் பேட்டி!**

# மக்களை காலில் போட்டு மிதிக்கும் மோடி அரசு!



நூற்றாண்டைக் கடந்த, இந்தியாவின் பழம் பெரும் தொழிற்சங்கமான ஏஐடியுசியின் (அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ்), அகில இந்திய மாநாடு கடந்த வாரம் கேரளாவின் ஆலப்புழாவில் நடந்தது.

''இந்திய தொழிற்சங்கங்கள் ஒன்றாக இணைய வேண்டும்; – அரசாங்கத்தின் பிடியிலிருந்து, முதலாளிகளின் பிடியிலிருந்து, அரசியல் கட்சிகளின் பிடியிலிருந்து தொழிற்சங்கங்கள் விடுபட்டு சுயேச்சையாக செயல்பட வேண்டும்'' என ஏஐடியுசி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதன் பொதுச் செயலாளராக அமர்ஜித் கௌர், இரண்டாம் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார். ஒரு பெண்மணி தொழிற்சங்க செயல்பாட்டில் தொடர்ந்து தலைமை ஏற்பது மகிழ்ச்சிக்குரியதாகும். நம் நாட்டில் உள்ள தொழிலாளர்களின் நிலை, புதிய தொழிலாளர் சட்டம், விலைவாசி உயர்வு, வேலை நிறுத்தங்கள் குறித்து இந்த நேர்காணலில் அவர் கூறுகிறார்.

◆ **விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன. விலைவாசி குறைவது சாத்தியமா?**

விலைவாசியைக் குறையுங்கள் என்று கோரிக்கை விடுப்பது வெற்று முழக்கம் அல்ல; சாத்தியமான ஒன்றுதான். அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தில், ஒருசில மாற்றங்கள் ஏற்கனவே கொண்டு வரப்பட்டுள்ளன. அதனை மீண்டும் கொண்டு வரவேண்டும். அப்படிச் செய்தால் விலையைக் கட்டுப்படுத்த இயலும். பொது விநியோகத்திட்டத்தை அனைவருக்கும் விரிவுபடுத்த வேண்டும். விவசாயிகளின் விளைபொருட்களுக்கு, குறைந்தபட்ச ஆதார விலையை உறுதி செய்ய வேண்டும். சந்தையில் இருந்து, இடைத்தரகர்களை நீக்கும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

உலகச் சந்தையில் பெட்ரோலிய பொருட்களின் விலை குறைந்துகொண்டே போனாலும், இந்தியாவில் பெட்ரோல், டீசல், சமையல் வாயு இவைகளின் விலைகளை உயர்த்திக் கொண்டே போகிறார்கள். இதனால் மற்ற பொருட்களின் விலையும் உயர்ந்து கொண்டே இருக்கிறது.

◆ **கொரோனாவைப் பற்றி பேசும்போதெல்லாம் உணர்ச்சிப் பூர்வமாக பேசுகிறீர்களே !**

ஒரு சேமநல அரசு மக்களுக்கு என்ன செய்யவேண்டுமோ, அதை இந்த அரசு செய்யவில்லை. உலக சுகாதார நிறுவனமானது, கோவிட் தொற்றை சுகாதார நெருக்கடியாகத்தான் (health emergency) அறிவிக்கச் சொன்னது. அப்படி செய்தால், மக்களுக்கு வேண்டிய மருத்துவ வசதி, தடுப்பூசி உள்ளிட்ட அனைத்தையும் இலவசமாக செய்ய வேண்டி இருந்திருக்கும். ஆனால், மோடி அரசாங்கமானது 'சுகாதார நெருக்கடி' என அறிவிக்காமல், வெள்ளையர் காலச் சட்டமான தேசியப் பேரிடர் சட்டத்தினை (National Disaster Management Act) அமலாக்கியது. இதனால், அனைத்து நடைமுறைகளுக்கும் மக்களே பொறுப்பேற்க வேண்டும் என்ற நிலையை அரசு ஏற்படுத்தி விட்டது. கொரோனாவை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு, மக்களுடைய போராட்டங்களுக்கு தடை விதித்து கருத்துரிமையை கட்டுப்படுத்தியது. அதன் மூலம் தமது அரசின் மீதான விமர்சனத்தை வளர விடாமல் மோடி அரசு பார்த்துக்கொண்டது.

ஊரடங்கை அறிவிக்க வெறும் நான்கு மணிநேரமேஎடுத்துக்கொண்டார். இதனால் வெளியூரில் இருந்த மாணவர்கள், மருத்துவ சிகிச்சை எடுத்த நோயாளிகள், புலம்பெயர் தொழிலாளர்கள் அவதிப்பட்டார்கள். இவர்கள் ஆயிரக்கணக்கான மைல்கள் கால்நடையாகவே தங்கள் ஊர்களுக்கு திரும்ப வேண்டியதாயிற்று. பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக மோடி தனது வாயைக்கூட திறக்கவில்லை.

இப்படி ஒரு வெளியேற்றம் (mass exodus), இந்திய விடுதலை காலத்தில்தான், பாகிஸ்தானுக்கும், இந்தியாவிற்கும் நடந்தது. கொரோனா காலத்தில், மாநிலங்களுக்கு இடையிலான எல்லைகள், அந்நிய நாட்டு எல்லைகள் போல கருதப்பட்டு மூடப்பட்டன. பல குறுந்தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டன. வருமானவரி செலுத்தாத குடும்பங் களுக்கு, தலா ரூ.7,500 தர வேண்டும் என தொழிற்சங்கங்கள் விடுத்த வேண்டுகோளை மோடி கண்டு கொள்ளவில்லை.

அதே நேரம் இந்த வாய்ப்பைக் பயன்படுத்திக் கொண்டு, பொதுத்துறை நிறுவனங்களை விற்பதில் முனைப்புக் காட்டினார். அதானி, அம்பானி போன்ற தனது நண்பர்களின் நிறுவனங்களுக்கு, வரிக்குறைப்பாகவும், கொரோனா கால சலுகைகளாகவும் கோடிக்கணக்கான ரூபாய்களை தள்ளுபடி செய்தார். அந்த நேரத்திலும் இசுலாமிய மக்கள் மீது வெறுப்பை உமிழச் செய்யும் வேலைகளில் அவரது கட்சியினர் ஈடுபட்டனர். இசுலாமிய வியாபாரிகள் தாக்கப்பட்டனர். அப்போது, நரேந்திர மோடியின் குரூரமான முகம் வெளிப்பட்டது. உலகம் முழுவதிலும், கொரானா காலத்தில் முதலாளித்துவ அரசுகள் அம்பலப்பட்டு போயின. ஒரு சில மக்கள் நலன் சார்ந்த அரசுகள்தான் சிறப்பாக செயல்பட்டன.

◆ **மற்ற தெற்காசிய நாடுகளில் தொழிற்சங்க இயக்கம் எப்படி உள்ளது ?**

இலங்கை, நேபாள நாடுகளில் இருந்து கேரளாவில் நடைபெற்ற எங்கள் மாநாட்டை வாழ்த்திப் பேச பிரதிநிதிகள் வந்திருந்தனர். பாகிஸ்தான் நாட்டிலிருந்து தொழிற்சங்கத்தினர் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு கோரியிருந்த விசாவைத் தர இந்திய அரசு மறுத்து விட்டது.

**இலங்கையின் பொருளாதார நெருக்கடியையும், போராட்டத்தையும் நீங்கள் அறிவீர்கள். இந்த நிலையில் இந்தியா என்ன செய்கிறது, தொழிற்சங்கங்கள் என்ன செய்கின்றன என்பதை மற்ற நாடுகளில் உள்ள தொழிற்சங்கங்கள் பார்க்கின்றன. போராடி வருகின்ற மக்களுக்கு நம்பிக்கை தர வேண்டியது தொழிற்சங்கங்களின் கடமையாகும். அந்தக் கடமையை இந்திய தொழிலாளி வர்க்கம் நிறைவேற்றும். அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் இணைந்து போராடி வருகிறோம். நிலக்கரி, மின்சாரம், வங்கி என அரங்கம் வாரியாகவும் தொழிலாளர்கள் போராடி வருகின்றனர்.**

◆ **புதிய தொழிலாளர் சட்டங்களை ஏன் தொழிற்சங்கங்கள் எதிர்க்கின்றன ?**

சம்பளப் பட்டுவாடாச் சட்டத்தை மாற்றியுள்ளனர். இதனால் தொழிலாளர்களுக்கு சம்பளம் குறையும். பணிக்கொடை தொகை குறையும். முன்பெல்லாம் 100 பேருக்கு மேல் வேலை செய்யும் நிறுவனங்களை மூட வேண்டும் என்றால், அதற்கு அரசாங்கத்தின் அனுமதி தேவை. அதனை, இப்போது 300 பேருக்கு மேல் உள்ள தொழிற்சாலையை மூடுவதற்குதான் அரசாங்கத்தின் அனுமதி தேவை என்று மாற்றி விட்டார்கள். ஒரு ஆலையை எப்போது வேண்டுமானாலும் முதலாளி மூடிவிடலாம் என்றால், பெரும்பான்மையான தொழிலாளர்களின் வேலை இழப்பிற்கு புதிய தொழிலாளர் சட்டம் வழி வகுக்கிறது.

**நிரந்தர வேலை என்பதே இல்லாமல் 'குறித்த கால வேலை' என்பதாக ஒப்பந்த முறையில் தொழிலாளர்கள் பணி அமர்த்தப்படுகிறார்கள். இது, வேலை குறித்த நிச்சயமின்மையால் தொழிலாளியை அச்சத்திலேயே வைத்திருக்கும் சூழ்ச்சியாகும். இத்தகைய சட்ட மாற்றங்கள் முதலாளிகளுக்கு ஆதரவாக செய்யப்பட்டுள்ளன. புதிய சட்டத்தினால் தொழிலாளர்களின் பாதுகாப்பான சூழலும், பணித்தள சுகாதாரமும் கேள்விக்குறி ஆக்கப்பட்டுள்ளது.**

ஏற்கனவே, கட்டடம், பீடி, ஆட்டோ போன்ற அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு நல்ல திட்டங்கள் உள்ளன. ஒரு சில மாநில அரசுகள், அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு சிறப்பான திட்டங்களை அமலாக்கி வருகிறார்கள். ஆனால், அமைப்புச்சாரா தொழிலாளர்களின் நலனுக்கு என, எந்த நிதி உத்தரவாதத்தையும் மோடி அரசு புதிய சட்டத்தில் கொடுக்கவில்லை. மாறாக அமைப்புச்சாரா தொழிலாளர்களின் எல்லா நிதியையும் ஒன்றாக்க உள்ளது. இதனால் ஏற்கனவே சிறப்பாக செயல்பட்டு வரும் திட்டங்கள் கூட முடமாக்கப்படும்.

தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்யும் குழுவில் தொழிற்சங்க பிரதி நிதிகள் இருக்கிறார்கள். அத்தகைய குழுக்களில் வல்லுநர் இடம் பெறுவார்கள் என மாற்றி உள்ளனர். அதாவது, அரசாங்கத்திற்கு ஆதரவாக உள்ளவர்களைக் கொண்டு இக்குழுவை நிரப்புவார்கள். இதனால் தொழிலாளர்கள் பாதிப்புக்கு உள்ளாவார்கள். தொழிற் தகராறுகளை தீர்க்க இப்போது உள்ள தொழிலாளர் ஆணையர்கள், இனிமேல் இருக்க மாட்டார்கள். தொழிலாளர் நீதிமன்றங்களை அகற்றிவிடுவார்கள். வெள்ளைக்கார ஆட்சியில் தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமைகளைக் கூட பறிக்கும் வகையில் மோடி அரசாங்கம் இப்போது சட்டம் இயற்றி உள்ளது.

◆ **வேலைநிறுத்தம் செய்வதால், உங்கள் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றி விடும் என நம்புகிறீர்களா ?**

பேச்சுவார்த்தைகளிலும், உரையாடலிலும் நம்பிக்கையில்லாத அரசாக மோடி அரசாங்கம் உள்ளது. 2014ல் இருந்ததை விட, 2019ல் மோடி அரசாங்கம் மூர்க்கத்தனமாக செயல்பட்டு வருகிறது. லாபகரமான பொதுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்கு விற்கிறது. மத்திய அரசு அலுவலகங்களிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் 15 இலட்சம் பணி யிடங்கள் காலியாக உள்ளன. மக்களுக்கு சேவை தரும் கல்வி, மருத்துவம், இரயில் போன்ற நிறுவனங்களை நடத்த, அரசு தயாராக இல்லை.

தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பு மக்களையும் இந்த அரசு காலில் போட்டு மிதிக்கிறது. பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை இப்போது மேலெழும்பி வருகிறது. மத்திய தர வர்க்கத்தினரும் இப்போது மோடியை எதிர்க்க ஆரம்பித்துள்ளனர். வேறு வழியில்லாமல்தான் வேலை நிறுத்தங்களைச் செய்கிறோம். எங்களுடைய எதிர்ப்புகளினால் தான் புதிய தொழிலாளர் சட்டத்திற்கான விதிகள் உருவாக்கத்தையும், அவைகளின் அமலாக்கத்தையும் அரசு தாமதப்படுத்தி வருகிறது. இத்தகைய எதிர்ப்புகள் இல்லையென்றால் நிலைமைகள் இன்னமும் மோசமாக இருக்கும்.

**நேர்காணல்: பீட்டர் துரைராஜ்**
**நன்றி: அறம் ஆன்லைன்**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 40

## மனுஸ்மிருதியை பகவத் கீதையாக்கிய போக்கிரிகள்!

ராஜஸ்தான் மாநிலத்தில், பார்மர் மாவட்டத்தில் உள்ள பகாசர் எனும் ஊரில், 2022 டிசம்பர் 25ம் தேதியன்று, மனுஸ்மிருதியின் நகலை எரிக்க வந்தனர்.

இது ஒன்றும் புதிதல்ல. 95 ஆண்டுகளாக இங்கு நடப்பது தான்.

1927ம் ஆண்டு டிசம்பர் 25ல் இதே இடத்தில் பாபா சாகேப் அம்பேத்கர் மனுஸ்மிருதியை எரித்தார். "இது மதத்தின் அடையாளம் அல்ல, மாறாக சமத்துவமின்மை, கொடுமை மற்றும் அநீதியின் அடையாளம். தலைமுறை தலைமுறையாக துன்பங்களுக்குக் காரணமான மனுஸ்மிருதியை பகிரங்கமாக எரிக்க வேண்டும்" என்று அப்போது தீர்மானம் கொண்டு வந்தவர் பிராமணரான சஹஸ்ரபுத்தே ஆவார்.

தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் இந்த "மனுஸ்மிருதி தஹன் திவஸ்" எனும் பெயரில் அதே இடத்தில் மனுஸ்ருதி எரிக்கப்பட்டு வருகிறது. விடுதலைக்கு முன்பும், பின்பும் சென்ற ஆண்டு வரையில் இதை யாரும் தடுத்ததில்லை.

ஆனால் சென்ற டிசம்பர் 25ஆம் தேதி எரிக்கக் கூடாது என பார்மர் மாவட்ட காவல்துறை தடுத்தது. அந்த மாவட்டத்தில் உள்ள பல்வேறு இந்துத்துவ அமைப்புகளின் அழுத்தத்திற்கு பணிந்து, 'மத நம்பிக்கைகளை இழிவு படுத்துதல், வழிபாட்டு தளத்தில் கலகம் செய்தல், வழிபாட்டுக்காகத் திரண்டு இருந்தவர்களை அவமதிக்கும் வகையில் நடந்து கொள்ளுதல்' உள்ளிட்ட குற்றங்களின் கீழ் அஜ்மல், அம்ருத் ராம், ரவ்தா ராம் மற்றும் ஷங்கர்லால் மேக்வால் என்ற நான்கு இளைஞர்களை கைது செய்துள்ளது.

இந்திய அரசியல் சாசனம் சமத்துவத்தை வலியுறுத்துகிறது. பிறப்பால் உயர்வு தாழ்வு பேசுகிற மனுஸ்மிருதி அரசியல் சாசனத்திற்கு நேர் எதிரானதாகும். அதனை எரிக்க முயன்றதைக் குற்றமாக கருதி, காவல்துறை கைது செய்வது இந்தியாவிலேயே இது முதல் முறையாகும்.

பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் 1927 அதை எரிக்கும் போது 'பல நூற்றாண்டுகளாக இந்துக்களை வர்ணங்களாகப் பிரித்து, சூத்திரர்களை அடிமட்டத்தில் வைக்கும் 'சட்ட விதியாக' ஆதிக்க சாதியினர் கருதுகின்றனர். எனவே இதை எரிக்கிறோம்' என்று பேசினார். இப்போதும் அந்த ஆதிக்கம் உயிரோடு இருக்கிறது. ஆர்எஸ்எஸ்–பிஜேபி ஆட்சியில் அது இன்னும் கூடுதல் அதிகாரம் பெறுகிறது.

வழக்கம்போல இயல்பாகவே இந்த நிகழ்வு தொடங்கியது. ஆனால் திடீரென சங்க பரிவார அமைப்புகள் இந்துக்களின் புனித நூல்கள் எரிக்கப்படுவதாக சமூக ஊடகங்களில் கட்டமைக்கப்பட்ட முறையில் சரமாரியாக வதந்திகளைப் பரப்பினார்கள். பூரா சிங் என்ற பிஜேபி தலைவர், ஏராளமானவர்களை அழைத்து வந்து அங்கு பதட்ட நிலையை உருவாக்கினார்.

எரிப்பதற்காக கொண்டுவரப்பட்டது மனுஸ்மிருதியின் நகல் என்று நன்கு தெரிந்திருந்தும் கூட, பகவத் கீதை எரிக்கப்பட்டதாகத் திரித்து, போலீஸ் தனது சட்டவிரோதச் செயலை நியாயப்படுத்த முயல்கிறது. எந்தச் சான்றும் இல்லாத நிலையில் இந்துத்துவ அமைப்புகளின் கட்டளைக்கு அடிபணிந்து நடக்கிறது.

கர்நாடகாவில், 2023 ஜனவரி 2ம் தேதியன்று, மாநில பிஜேபி தலைவர் நளின் கத்தீல், தனது கட்சி வாக்குச்சாவடி ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக நடந்த கூட்டத்தில் பேசும்போது "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் சாலை, குடிநீர், சாக்கடை போன்ற சின்னச் சின்னப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பேசாதீர்கள்.

உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்றால், நீங்கள் 'லவ் ஜிஹாதை' நிறுத்த விரும்பினால், அதற்கு பாஜகவைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றுதான் பரப்புரை செய்யவேண்டும்'' என, சாவடி அளவிலான பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்.

இந்துப் பெண்களை, முஸ்லிம் இளைஞர்கள் வலிந்து காதலித்து தமது மதத்துக்கு கடத்திச் செல்கின்றனர் என்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. 'லவ் ஜிஹாத்' என்று திட்டமிட்டு இருப்பது போல மிரட்டி, பாதுகாப்பற்றவர்களாக இந்து மக்களை போலியாக உணரவைத்து, என்னை விட்டால் உனக்கு வேறு வழியே இல்லை என அச்சுறுத்தும் உத்தி மட்டுமே!

அதே ஜனவரி 2ல், சட்டீஸ்கர் மாநிலத்தின் நாராயண்பூரில், மதமாற்றம் செய்வதாக வதந்தி பரப்பி, கிறித்தவ தேவாலயத்துக்குள் பிஜேபி கும்பல் நுழைந்து அடித்து நொறுக்கியது. தடுக்க முயன்ற, காவல்துறை மாவட்ட கண்காணிப்பாளர் சதானந்தா குமாரை பின்பக்கமிருந்து தாக்கி மண்டையை உடைத்துள்ளது.

தேசம், வளர்ச்சி, மேம்பாடு, முன்னேற்றம் என்று பேசுவதெல்லாம் ஆளை ஏய்க்கும் தந்திரம். வெறுப்பை விதித்து, மக்களைப் பிரிப்பதே வெற்றி பெறுவதற்கு அவர்கள் கையாளும் மந்திரம்! வினை விதைத்தவன் தினை அறுக்க முடியாது.

# குடும்பத்தில் ஒருவருக்கு தகுதிகேற்ப அரசு வேலை வழங்கிட வேண்டும்

## விவசாய தொழிலாளர் சங்க மாநாட்டில் தீர்மானம்




தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் கோட்டூர் ஒன்றிய 29 வது மாநாடு எம்.பக்கிரிசாமி, கே.சீனிவாசன், சி.இளங்கதிர், சி.மனோகரன் ஆகியோர் நினைவரங்கத்தில் சங்கத்தின் தலைவர் சிவ. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. இம் மாநாட்டினை விவசாய தொழிலாளர் சங்க மாவட்டச்செயலாளர் அ.பாஸ்கர் தொடங்கி வைத்து பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய குழு உறுப்பினர் வை.சிவப்புண்ணியம் மு.எம்எல்ஏ, மாநிலக் குழு உறுப்பினர் கே. உலகநாதன், மாநில நிர்வாக குழு உறுப்பினர் க.மாரிமுத்து எம்.எல்.ஏ, சங்கத்தின் மாவட்டத் துணைத் தலைவர் என்.மகேந்திரன் கட்சியின் ஒன்றிய செயலாளர் எம்.செந்தில்நாதன் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் மணிமேகலை முருகேசன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

வேலை அறிக்கையை ஒன்றிய செயலாளர் ஜெ.ஜெயராமன் முன்மொழிந்து பேசினார்.

தலைவராக பி.சுப்பிரமணியன், செயலாளராக எம்.சிவசண்முகம், பொருளாளராக வி.எம்.கணேசன், துணைத் தலைவர்களாக என்.ராஜமாணிக்கம், எஸ்.மாரியம்மாள், பி.மகாலிங்கம், துணை செயலாளர்களாக எஸ்.ஜி.தேவதாஸ், டி.தமிழ்மணி, ஆர்.ஞானசேகரன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

700க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

குடும்பத்தில் ஒருவருக்கு தகுதிக்கேற்ப அரசு வேலை வழங்கிட வேண்டும், மாணவர்களின் கல்விக் கடன்களை தள்ளுபடி செய்து விட வேண்டும், கோவில் மனைகளில் குடியிருப்பவர்களுக்கு குடிமனை பட்டா வழங்கிட வேண்டும்.

நூறு நாள் வேலை ஆண்டு முழுவதும் வழங்கிட வேண்டும்.

நீர் நிலை புறம்போக்குகளில் தலைமுறை தலைமுறையாக குடியிருந்து வருபவர்களை நீதிமன்ற உத்தரவை காட்டி வீடுகளை இடிக்காமல் புதிய வீடுகள் கட்டி கொடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

2 ம் பக்கத் தொடர்ச்சி

சமூக ஆதிக்க சக்திகள் சுயநல நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பச்சை அயோக்கியதனத்துக்கு, இந்த கேடு கெட்ட சாதிகளும், கடவுள்களும் துணைபோகின்றன என்கிற பேருண்மையை உணர வேண்டும். உணர்த்தப்பட வேண்டும்.

மக்கள் உணர்வில் பகுத்தறிவு சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது நமது கடமை பொறுப்பு என்பதனை நாம் உணர்ந்து கடமையாற்ற வேண்டும்.

சமூக ஒடுக்குமுறையும், சாதிய தீண்டாமையும் நிகழும் போது, இடதுசாரிகள் மட்டுமே அந்த சம்ப இடத்தை சமூகநீதி போராட்டக் களமாக்கி, நீதி கேட்டு போராடத் தொடங்குகிறார்கள்.

இதில் ஜனநாயக சக்திகளும், மனிநேயம் கொண்டோரும், நல்லிணக்கம் பேணுவோரும் கண்டு கொள்ளாமல் இருப்பது கவலைக்குரியது.

சமூக நீதி காக்க, சமூக மாற்றத்திற்காக நாங்கள் தான் இருக்கின்றோம். எங்களை விட்டால் வேறு யார்? நெஞ்சு விரித்து நிற்போர் சாதிய பிரச்சினை எழும் போது ஏன் ஓடி ஒளிய வேண்டும்?

கோவை பகுதியில் ஜக்கி வாசுதேவ் என்கிற ஒரு நவீன போலிச் சாமியார் (?!) ஈசா யோகா மையம் என்கிற பயிற்சி நிறுவனம் உள்பட பல நிறுவனங்களை நடத்தி வருகிறார்.

இந்த சாமியர் நடத்தும் விழாவிற்கு நாட்டின் பிரதமர் மோடியும், உயர் அதிகாரிகளும், தொழில் அதிபர்களும் அழைக்கப்படுகின்றனர். அவர்களும் வருகிறார்கள். சாமியாருடன் சேர்ந்து நடனமாடுகின்றார்கள்.

பாரதிய ஜனதா கட்சியின் அகில இந்திய தலைவரான ஜெ.பி.நட்டா வருகின்றார். இப்படி பல வகையிலும் ஈசா யோகா மையம் செல்வாக்குமிக்க நிறுவனமாக இருக்கின்றது

இந்நிறுவனம் நடத்துகின்ற பயிற்சி முகாமிற்கு ஏராளமான பெண்களும் வருகின்றார்கள். வாரக் கணக்கில் அங்கே தங்க வைக்கப்படுகின்றார்கள். அவர்களில் பலர் மாயமாகிவிடுகின்றனர்.

தற்கொலைக்கும் நெட்டித்தள்ளப்படுகின்றார்கள். இதுவரை இவ்வாறு ஐம்பதுக்கும் மேற்பட்ட பெண்கள் பலியாகியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈசா யோகா நிறுவனம் நடத்துகின்ற அமைதி முகாமில் சேர்ந்து பயிற்சி பெற சென்ற சுபஸ்ரீ என்கிற பெண், காணாமல் போனார். 15 தினங்களுக்கு பின்னர், அழுகிய நிலையில் கிணற்றில் இருந்து பிணமாக எடுக்கப்பட்டுள்ளார்.

சுபஸ்ரீ யோகா வகுப்பில் சேர்ந்தது டிசம்பர் 11ல் டிசம்பர் 18ம் நாள் அங்கிருந்து தப்பிக்கின்றார். உடைகளைக் கூட மாற்றிக் கொள்ளாமல், காலில் செருப்பும் இல்லாமல், உயிர் பிழைக்க தலைதெறிக்க தப்பி ஓடுகிறார்.

சுபஸ்ரீயின் கணவர் பழனிகுமார் டிசம்பர் 18ம் நாளன்று புகார் கொடுக்கின்றார். எவ்வித பயனும் இல்லை.

என்ன நடந்தது, ?

இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறதே என கோவை மாநகர காவல்துறை, மாவட்ட நிர்வாகம் கவலைப்பட வேண்டாமா? அதன் உண்மை கண்டறியப்பட வேண்டாமா? மோடியும், நட்டாவும் இங்கே வருவதால் ஒன்றிய ஆட்சியின் செல்வாக்கு பெற்று இருப்பதால் எத்தனை கொலைகள் வேண்டுமானாலும் நடக்கலாமா?

சாமியாரை விசாரிக்க காவல்துறை தயங்குவது ஏன்? கைகட்டி, வாய்ப்பொத்தி நிற்பது ஏன்? ஏன் சட்டம் அனைவருக்கும் சமம் என்பது உண்மையா? அல்லது ஜக்கி சாமியாரைக் கண்டு வளைந்து நெளியுமா?

ஈசனின் பெயரால் வனத்திற்கு சொந்தமான நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை வனத்துறையும், அரசும் கண்டும் காணாமல் கைகட்டி, வாய்ப்பொத்தி மௌனம் காப்பத்தின் மர்மம் எவ்வளவுநாள் நீடிக்கும்.?

ஈசனைக்காட்டி மக்களையும், அரசையும் அப்பட்டமாக ஏமாற்றி வரும் ஜக்கி வாசுதேவ் என்ன சட்டத்திற்கு மேலானவரா?

ஈசன் சிலையை வைத்து ஜக்கி ஆடுவது மட்டுமல்ல, அவர் பிரதமரையும் ஆட வைக்கும், வலிமை பெற்றவர் என்பதை காட்டத்தானே?

பாஜக தலைவர் ஜெ பி நட்டாவுடன் சாமியார் நடத்தும் ஆலோசனைக் கூட்ட முடிவுகள் என்ன?


தோழர்களே, இத்தகைய பித்தலாட்ட போர்வழிகள் கடவுளைக் காட்டி மனுதர்ம அரசியலை முன்னெடுத்து வருகின்றனர்.

இவைகளையெல்லாம் தயவுதாட்சனமின்றி தோலுரித்துக் காட்டி, பொதுமக்களுக்கு உண்மையை உணரச் செய்திட, இடைவிடாது விழிப்புணர்வு இயக்கங்களை மேற்கொள்ள வேண்டும். கிராமம் தோறும், நகரம் தோறும், வார்டுகள் தோறும் மட்டுமல்ல, இல்லம் தோறும் ஜனசக்தியை கொண்டு சேர்த்து, இதன் மூலம் நமது அரசியல் கடமையை நிறைவேற்ற முனைப்புடன் செயல்படுவோம்.

மீண்டும் சந்திப்போம்.

வணக்கம்

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



டி.எம்.மூர்த்தி

# EPS-95 கூடுதல் ஓய்வூதியம்! யாருக்குப் பொருந்தும்?

**வருங்கால வைப்பு நிதியின் கீழ் அமைக்கப்பட்ட தொழிலாளர் ஓய்வூதிய திட்டம் 95 (EPS-95) ன் கீழ் ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியர்களுக்கு, கூடுதல் ஓய்வூதியம் யாருக்கு, எவ்வளவு கிடைக்கும் என்பது பற்றி பலவிதமான தகவல்கள் தொடர்ச்சியாகப் பரப்பப்பட்டு வருகின்றன. பொதுவாக, ஓய்வூதியம் பெறுவோர் அனைவருக்குமே கூடுதல் தொகை கிடைக்கும் என்ற பரவலான எண்ணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

2022 நவம்பர் 4ம் தேதி வெளியிடப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்பில், 2014 செப்டம்பர் 1 ஆம் தேதி வரையில் தொழிலாளர் ஓய்வூதிய திட்டம் 95ல் உறுப்பினர்களாக உள்ளவர்கள், ஓய்வூதியம் வழங்குவதற்கான சம்பள உச்சவரம்பு ரூ.15,000க்குப் பதிலாக, தமது உண்மைச் சம்பளத்தில் 8.33 சதவீதத்தை ஓய்வூதியம் பெறுவதற்கான பங்களிப்பாக செலுத்தலாம் என்று கூறப்பட்டது.

மேலும் உச்சபட்சத் தொகையான ரூபாய் 15ஆயிரத்துக்கும் அதிகமாக செலுத்தப்படும் தொகைக்கு வேலையளிப்பவர்கள் 1.16 சதவீதத்தைக் கூடுதலாகச் செலுத்த வேண்டும் என்ற வருங்கால வைப்பு நிதி திட்டத்தின் திருத்தத்தை அது தள்ளுபடி செய்துவிட்டது

கூடுதல் ஓய்வூதியம் கோரி விருப்பம் தெரிவிக்க, தீர்ப்பு வெளிவந்த தேதியிலிருந்து 4 மாத கால அவகாசத்தை தொழிலாளர்களுக்கு உச்ச நீதிமன்றம் தந்திருந்தது.

ஆனால் தீர்ப்பு வெளியிடப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்த பின்னும், தொழிலாளர்கள் எந்த வகையில் விண்ணப்பத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதல்களை கூட வெளியிடாமல் அரசு காலதாமதம் செய்து வந்தது.

### பினாய் விஸ்வம் கடிதம்

இதனைக் கண்டித்து ஏஐடியுசி செயல் தலைவரான பினாய் விஸ்வம் எம்.பி. அரசைக் கடுமையாகச் சாடி, ஒன்றிய அரசின் தொழிலாளர் துறை அமைச்சர் பூபேந்திர யாதவுக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார்.

அந்த கடிதத்தில் “தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக நவம்பர் 4, 2022 தேதியிட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்துவது குறித்து உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். உச்சநீதிமன்றம் அந்தத் தீர்ப்பில், அதிக ஓய்வூதியத்தை தேர்வு செய்ய ஊழியர்களுக்குத் தீர்ப்புத் தேதியிலிருந்து 4 மாத கால அவகாசம் அளித்துள்ளது உங்களுக்குத் தெரியும்.

தீர்ப்பு வழங்கப்பட்டு 55 நாட்கள் ஆகியும், அது தொடர்பான வழிகாட்டுதல்களை ணிறிதிளி இன்னும் வெளியிடவில்லை. இது உச்சநீதிமன்றம் அனுமதித்த நேரத்தில் சரிபாதியாகும். இது நாட்டுத் தொழிலாளர்களின் நலனில் அரசாங்கத்தின் அலட்சியப் போக்கை அப்பட்டமாக காட்டுகிறது. இத்தகைய அளவுக்கதிகமான காலதாமதம் ஏற்றுக்கொள்ள முடியாதது. இதனை விரைவில் சரிசெய்ய வேண்டும். இந்தக் கடிதத்தை மிகவும் அவசரமாக கருதி, தொழிலாளர்களின் நலன் கருதி தேவையான வழிகாட்டுதல்களை வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவித்திருந்தார்.

### நாடாளுமன்றத்தில் ஓய்வூதியர் குரல்:

நாடாளுமன்றத்திலும் உச்சநீதிமன்ற தீர்ப்பை அமுல் நடத்துமாறும், அனைத்து ஓய்வூதியர்களும் கூடுதல் தொகை பெறும் வகையில் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை உயர்த்துமாறும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் கே.சுப்பராயன், பினாய் விஸ்வம், சந்தோஷ் குமார் உள்ளிட்ட பல கட்சிகளின் உறுப்பினர்கள் அழுத்தமாக வலியுறுத்தினர்.

இரண்டு மாதங்கள் கழித்து, இப்போதுதான் வழிகாட்டுதல்கள் தரப்பட்டுள்ளன. அதாவது தொழிலாளர்களுக்கு உச்சநீதிமன்றம் தந்த 4மாத கால அவகாசத்தை, 2 மாதகாலமாக இபிஎஃப் வெட்டிக் குறைந்துவிட்டது.

முதலில், அந்த வழிகாட்டுதல்கள் என்ன என்பதைப் பார்ப்போம்.

### வருங்கால வைப்பு நிதி வழிகாட்டுதல்கள்:

உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு பிறகு, கூடுதல் ஓய்வூதியம் பெறுவதற்காக வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்கள் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளது.

தீர்ப்பின்படி 8 வாரங்களுக்குள் அமல்படுத்த வேண்டும் என்றும் அது தெளிவுபடுத்தியுள்ளது.

வருங்காலவைப்புநிதிசந்தாதாரர்,கூடுதலானஓய்வூதியம் பெறுவதற்கான நிபந்தனைகள் அதன் சுற்றறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன. மேலும் கூடுதல் ஓய்வூதியத்தை பெறுவதற்கு உறுப்பினர் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்பதும் அதில் விளக்கப்பட்டுள்ளது. 1995ம் ஆண்டின் ஓய்வூதியத் திட்டத்தின் 11(3) விதியில் கூறப்பட்டுள்ளவற்றுக்கு உட்பட்டு, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை நிதி அதிகாரிகள் செயல்படுத்த வேண்டும் என்று அதில் வழிகாட்டப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு, அதிக ஓய்வூதியம் பெறத் தகுதியான EPFO சந்தாதாரர்கள் குறித்து தெளிவுபடுத்தும் வகையில், EPFO சுற்றறிக்கையில், “1995 திட்டத்தின் 11(3) வது விதியின் கீழ் விருப்பம் தெரிவித்து, செப்டம்பர் 1, 2014க்கு முன் ஓய்வு பெற்ற ஊழியர்கள்தான், 2014 ஆம் ஆண்டின் திருத்தத்திற்கு முன் இருந்த ஓய்வூதியத் திட்டத்தின் 11(3) விதியின்படி நலன்களைப் பெறமுடியும்“ என்று தெளிவுபடுத்தி சொல்லப்பட்டுள்ளது

வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்களில் பின் வருபவர்கள் மட்டுமே உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புப்படி, கூடுதல் ஓய்வூதியம் பெற தகுதி உள்ளவர்கள் என EPFO கூறியுள்ளது:

1) ரூபாய் 5000 அல்லது ரூ 6500 என உச்சவரம்பு இருந்தபோது, அதைவிடக் கூடுதலான தொகைக்குரிய பங்களிப்பைச் செலுத்தியவர்கள்
2) தொழிலாளர் ஓய்வூதிய விதிகள் திருத்தப்படுவதற்கு முன்பாக, தொழிலாளர் ஓய்வூதிய திட்டம்95ன் உறுப்பினர்களாக இருந்து, கூடுதல் தொகை பங்களிப்பு




செலுத்துவதற்கு தொழிலாளியும் முதலாளியும் இணைந்து கூட்டாக விருப்பம் தெரிவித்திருந்தவர்கள்.

3) மேற்சொன்ன வகையில் விருப்பம் தெரிவித்தும், ஏற்க இயலாது என EPFOவால் நிராகரிக்கப்பட்டவர்கள். இவர்கள் கூடுதல் ஓய்வூதியம் பெற எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

மேற்சொன்ன தகுதிகளைப் பெற்ற தொழிலாளர் ஓய்வூதிய திட்ட உறுப்பினர்கள், வருங்கால வைப்பு நிதி அலுவலகத்துக்குச் சென்று, சரியான ஆவணங்களை இணைத்து விண்ணப்பத்தை தாக்கல் செய்ய வேண்டும்.

1) கூடுதல் ஓய்வூதியத்தை கோருவதற்கான விண்ணப்பம், ஆணையரால் குறிக்கப்படும் படிவத்தில், அது சொன்னபடி பூர்த்தி செய்யப்பட்டுத் தரப்பட வேண்டும்
2) அவ்வாறு பூர்த்தி செய்து தரப்படும் விண்ணப்பத்தில், மேற்சொன்ன அரசு அறிவிக்கைக்கு மாறாக இருந்தால் பரிசீலிக்கப்படாது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும்.
3) கூடுதல் ஓய்வூதியம் பெறுவதற்கு, ஏற்கனவே தந்த பங்களிப்புத் தொகையை விட அதிகமாக செலுத்த வேண்டிய தொகையை வருங்கால வைப்பு நிதியிலிருந்து ஓய்வூதிய நிதிக்கு மாற்றிக் கொள்ளவும், அவ்வாறு நிதி இல்லாவிட்டால் அந்தத் தொகையை நேரடியாகச் செலுத்தவும் ஓய்வூதியர் வெளிப்படையான ஒப்புதலை அந்தப் படிவத்திலேயே தெரிவிக்க வேண்டும்.
4) விலக்கு அளிக்கப்பட்ட வருங்கால வைப்பு நிதி டிரஸ்ட் நிதியிலிருந்து, கூடுதல் பங்களிப்பு தொகையை வருங்கால வைப்பு நிதிக்கு மாற்ற வேண்டி நேரிட்டால், அதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் டிரஸ்டிகளிடம் இருந்து ஒப்புதல் கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த ஒப்புதலில், அந்தத் தொகையை செலுத்தும் தேதி வரை செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகையையும் அதற்கான வட்டியையும் சேர்த்து குறிப்பிடப்படும் காலத்துக்குள் செலுத்துவதற்கு உறுதி தரப்பட வேண்டும்.
5) இந்த வகைகளில், நிதியைச் செலுத்துவதற்கான வழிமுறைகள் பற்றி, தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் வழியாகத் தெரிவிக்கப்படும்.

### பொருந்துவோர் விண்ணப்பிக்கவும்:

மேற்சொன்ன மூன்று வகைகளில் ஏதாவது ஒன்றில் பொருந்தும் தொழிலாளர்கள், தாமதிக்காது உடனடியாக தமக்குரிய வருங்கால வைப்பு நிதி அலுவலகத்துக்கு நேரடியாகச் சென்று, அவர்கள் தரும் படிவத்தைப் பெற்று அங்கேயே நிரப்பித் தந்து, பெற்றுக் கொண்டதற்கான சான்றையும் அந்த அலுவலகத்திலிருந்து தவறாமல் பெற வேண்டும்.

2023 மார்ச் 3ம் தேதியுடன் நான்கு மாத காலம் முடிவடைவதால், அதன் பின்பு தரப்படும் விண்ணப்பங்களை கால அவகாசம் முடிந்து விட்டதால், ஏற்க முடியாது என இபிஎஃப் சொல்லிவிடும். அதற்குப் பின் கால தாமதத்திற்கு காரணம் கூறிக் கொண்டு, நொந்து புலம்புவதில் பொருளில்லை. இந்த வழிகாட்டலில் கூட, எந்தெந்த ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும் என்று அறுதியிட்டுச் சொல்லப்பட்டு விடவில்லை.

எனவே அவர்கள் கோரும் ஆவணங்களைச் சேகரிக்க அதிக நாட்கள் தேவைப்படலாம். இன்னும் 2 மாதம் இருக்கிறது என அலட்சியம் கூடாது; உடனடியாக இன்றே இபிஎஃப் அலுவலகம் சென்று படிவம் பெறுங்கள்.

### கூடுதல் ஓய்வூதியம் பெற இயலாதவர்கள் என்ன செய்வது?

2014ஆம் ஆண்டுக்கு முன்பு வருங்கால வைப்பு நிதி உச்சவரம்பு ரூபாய் 6500, அதற்கு முன்னர் ரூபாய் 5000 என்றிருந்த சமயத்தில், அந்த தொகைக்கும் மேலாக தமது முழு சம்பளத் தொகைக்கும் வருங்கால வைப்பு நிதி பங்களிப்பு செலுத்தும் வாய்ப்பிருந்தது. அவ்வாறு செலுத்தியிருக்காதவர்களுக்கும் அல்லது அவ்வாறு பங்களிப்பு செய்கிறோம் என வருங்கால வைப்பு நிதியிடம் விண்ணப்பிக்காதவர்களுக்கும் இந்த தீர்ப்புப்படி கூடுதல் ஓய்வூதியம் கிடைக்க வாய்ப்பில்லை.

ஆனால், வழக்கு நடந்து கொண்டிருக்கிறது, உங்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் கிடைத்துவிடும் என்ற வாக்குறுதிகளை அள்ளி வீசி, வழக்கு நிதி வசூலிப்பதில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூபாய் 1000 என்பது, அனைத்து தொழிற்சங்கங்கள் சேர்ந்து நடத்திய வேலை நிறுத்தத்தின் விளைவாகக் கிடைத்ததாகும். இப்போது குறைந்தபட்ச ஓய்வூதியத்தை 6000 ஆக உயர்த்த வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் போராடி வருகின்றன. அண்மை காலத்தில் நடந்த நான்கு பொது வேலை நிறுத்தங்களில் இது முக்கியமான கோரிக்கையாக இருந்தது. வேலை நிறுத்தத்திற்கு முன்பாக நடத்தப்பட்ட ஆயத்த மாநாடுகள். ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள் ஆகியவற்றில் ஓய்வூதியர்கள் அனேகமாகப் பங்கேற்கவில்லை.

ஓய்வூதியம் உயராததற்கு, ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளே முக்கிய காரணமாகும்.

நடந்து முடிந்த வழக்கிலும் கூட, தொகைகளை உயர்த்த முடியாது என ஒன்றிய அரசு வாதாடியது. குறைந்தபட்ச ஓய்வூதியத்தை அதிகரிக்கக் கூடாது என ஒன்றிய அரசின் பொருளாதார ஆலோசனைக் குழு கருத்து தெரிவித்திருக்கிறது.

மோடி அரசு வந்த பின்பு தான் மொத்த சம்பள தொகைக்கும் வருங்கால வைப்பு நிதி பங்களிப்பு செலுத்த முடியாது என்ற திருத்தம் வந்ததையும் நினைவில் கொள்ள வேண்டும்.

### வீதிகளில் சந்திப்போம்

இந்தத் தீய கொள்கைகளை எதிர்த்துப் போராடி முறியடிக்காமல், கூடுதல் ஓய்வூதியம் பெறுவதற்கு வாய்ப்பில்லை. போராடி உடைக்க முடியாத தடை என்று ஏதும் இல்லை.

மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து விவசாயிகள் போராடி, திரும்பப் பெற வைத்தது அண்மைக் கால எடுத்துக்காட்டாகும்.

மோடி அரசு ஓய்வூதியத்தை உயர்த்த மறுக்குமானால், அந்த அரசாங்கத்தையே மாற்றுவது தொழிலாளி வர்க்கத்தின் கடமையாகும்.

வருகிற ஜனவரி 24ஆம் தேதி தமிழகம் முழுமையிலும் ரூ.6000 குறைந்தபட்ச ஓய்வூதியமாக அறிவிக்க வேண்டும் என மறியல் போராட்டம் நடத்தப்படுகிறது.

ஓய்வூதியத்தை உயர்த்த மறுக்கும் ஆட்சியாளர்களை வீதியில் சந்திக்க ஓய்வூதியர்கள் தயாராக வேண்டும்.

# தன்னலமற்ற மருத்துவ சேவை வணிக மயமாகலாமா?



சி.பாஸ்கர்

**நவீன மருத்துவத்தின் தந்தை ஹிப்போகிரேட்டஸ் கி.மு. 460ல் கிரேக்கத்தில் பிறந்தார். தத்துவத் துறையில் இருந்து மருத்துவத்தை பிரித்து தனித் துறையாக வளர்த்தார். ஐரோப்பிய வரலாற்றின் முதல் அறிவியல் மருத்துவர் இவர்தான். நோய் பாவத்தால் மனிதனுக்கு ஏற்படுகிறது என்ற மூடநம்பிக்கையை உடைத்து எறிந்தவர்.**

நோய் இயற்கையாய் ஏற்படுகிறது. மனித உடலுக்கே நோயை குணப்படுத்தும் ஆற்றலும், தற்காத்துக் கொள்ளும் சக்தியும் உண்டு. அதற்கேற்ற முறையில்தான் நோய்க்கு சிகிச்சை அளிக்க வேண்டும். தீவிர சிகிச்சையை மிகுந்த ஜாக்கிரதையாகவும், தவிர்க்க முடியாத சூழலிலுமே அளிக்க வேண்டும் என்பது அவரது அடிப்படை கண்டுபிடிப்புகள்.

அவரது காலத்தில் வலிப்பு நோயால் அதிக அளவில் மனிதர்கள் மாண்டு போனார்கள். ஹிப்போகிரேட்டஸ் இந்த நோய்க்கு வெற்றிகரமாக சிகிச்சை அளித்து நோயாளிகளை காப்பாற்றினார். போர்களில் ஈடுபட்டு படுகாயம் அடைந்தவர்களை தனது சிகிச்சை முறையால் காப்பாற்றினார். பெரும் புகழடைந்த அவருக்கு சிகிச்சை கட்டணமாக பொன்னையும், பொருளையும் கொண்டுவந்து கொட்டினார்கள். காசு வாங்காமல் இலவச சிகிச்சை அளிப்பது தான் தனது லட்சியம் என்று கூறினார்.

நவீன மருத்துவ படிப்பை முடித்து பட்டம் பெற மருத்துவர்கள் ஹிப்போகிரேட்டஸ் பெயரில்தான் சத்திய பிரமாணமும், உறுதி மொழியும் எடுத்துக் கொள்கிறார்கள். அவரைப் போல் தன்னலமில்லாமல், தியாக உணர்வோடு மருத்துவ சேவை செய்ய வேண்டும் என்பதே அதன் பொருள்.

அவர் நிறுவிய மருத்துவப் பள்ளி பண்டைய கிரேக்கத்தில் மருத்துவப் புரட்சியைஏற்படுத்தியது. அதுவேமருத்துவப் படிப்பிற்கென தனி கல்வி நிறுவனத்தை உருவாக்கும் முன்னோட்டத்தை மனித குலத்திற்கு பங்களிப்பதாக வழங்கியது.

மனித குலத்தை கொடிய நோய்களிலிருந்து காப்பாற்ற கடுமையாக உழைத்து, தன் வாழ்வை, தன் சுகத்தை தொலைத்தவர்கள் எண்ணற்றவர்கள். தங்கள் உழைப்பிற்காக எந்த பிரதிபலனையும் அவர்கள் அடையவில்லை. அலெக்சாண்டர் பிளமிங் 'பென்சிலின்' மருந்தை கண்டுபிடித்தார். அந்த மா மருந்து பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைக் காப்பாற்றியது. வெறிநாய் கடிக்கு லூயிபாஸ்டர் மருந்து கண்டுபிடித்தார். இன்றுவரை அது மனிதனை மரணத் திலிருந்து காத்து வருகிறது. எட்வர்டு ஜெர்மன் பெரியம்மை எனும் மகா கொடிய அரக்கனிடமிருந்து மானிடம் பிழைக்க ஆற்றல்மிக்க சிகிச்சை முறையை கண்டுபிடித்தார்.

உலக மாந்தரை எல்லை கடந்து நாசம் விளைவித்து வந்த டி.பி. என்னும் அராஜக பிணியை ஒழித்து கட்ட சென் மேன், வேகிஸ் மேன் என்ற இரு பெரும் மருத்துவ வல்லுநர்கள் மருந்து கண்டுபிடித்தார்கள். 'ரான்ஜென்' எக்ஸ்ரே எனும் மருத்துவ தொழில்நுட்பத்தை கண்டார். 'மேரி கியூரி' மற்றும் அவர் கணவர் 'பைரிக்யூரி' பெரு முயற்சி செய்து உழைத்ததால் கதிர்வீச்சு சிகிச்சை முறை மருத்துவ உலகிற்கு கிடைத்தது. புற்று நோயால் சொல்லொணா துயரம் அடையும் நோயாளிகளை காப்பாற்ற அதுவேகைவாளாக மருத்துவர் காரங்களில் திகழ்கிறது.

இந்த உலகம் உள்ளவரை மானுடம் கை குவித்து வணங்கக்கூடிய மருத்துவத் தொண்டு புரிந்தவர்கள் இந்த மாமேதைகள், மாமனிதர்கள்.

நாம்வாழும்சகாப்தம்மருத்துவத்துறையை எங்கு போய் சேர்த்துள்ளது. மருத்துவக் கல்வியை, மருத்துவ சேவையை, சமூகத் திருடர்களிடமும், சமூகத்தை அடுத்த கட்ட சமதர்ம வடிவத்தை எட்ட முடியாமல் நசுக்கும் நாசகரமான கார்ப்பரேட் கொள்ளையர்களிடமும் சேர்த்துள்ளது.



புதிய புதிய உயிர்காக்கும் மருந்தை கண்டுபிடிப்பவர்களும், மருத்துவ தொழில் நுட்பத்தை கண்டுபிடிப்பவர்களும், மூலதனத்தின் முரட்டுப் பிடியில் சம்பள அடிமைகளாக உழைக்கிறார்கள்.

அவர்களின் சாதனைகள் சாமானிய மனிதனை அடைய முடியவில்லை. பெரும்பான்மை மக்கள் உரிய சிகிச்சை இல்லாமல் செத்து மடிகின்றார்கள். உயர்தர சிகிச்சையும், பாதுகாப்பும் பணம் படைத்தவர்களுக்கே ஏகபோகமாக கிடைக்கிறது.

பெரிய நகர்ப்புறங்களில் பெரிய முதலீட்டில் பிரம்மாண்டமான மருத்துவமனைகள் பெருகி வருகின்றன. அரசியலில் ஊழல் செய்து சமுதாயத்தை கொள்ளையடித்தவர்களோ அல்லது அவர்களது பினாமிகளோ இவற்றை செய்கிறார்கள் அல்லது பெரும் கார்ப்பரேட் முதலாளிகள் இவற்றின் சொந்தக் காரர்களாக இருக்கிறார்கள்.

தமிழகம் பெரிய மருத்துவ தலைநகராக வளர்ந்து வருகிறது என்று பெருமை பேசுகிறார்கள். அந்த மருத்துவமனைகளில் ஆசியா மற்றும் ஆப்பிரிக்க கண்டத்தில் இருந்து வசதி படைத்தவர்கள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள். இதற்கென்று ஏஜென்ட் நிறுவனங்கள் செயல்படுகின்றன. இதற்கு 'மெடிக்கல் டூரிசம்' என்று கௌரவ பெயர் சூட்டி உள்ளார்கள்.

மருத்துவக் கல்வியை, மருத்துவத் துறையைதங்கள்கட்டுப்பாட்டில்வைத்துள்ள சின்னஞ்சிறிய நாடுகள் கோவிட் 19 கொள்ளை நோயை வெற்றிகரமாக சமாளித்து கரை சேர்ந்தன. அதற்கு ஒரு நல்ல உதாரணம் கியூபா. மிக மோசமான விளைவை எதிர்கொள்ள முடியாமல் பெரிய இழப்பை கண்டு திகைத்த நாடு அமெரிக்கா. இவ்வளவு பெரிய விஞ்ஞான சகாப்தத்தில் நோய் தடுப்பு மருந்தையும் காலத்திலேயே கண்டுபிடிக்காமல் பெரிய இழப்பை ஏற்படுத்தினர். அதன் மூலம் பெரிய வணிக சந்தையை உலகம் முழுவதும் ஏற்படுத்தி அளவிட முடியாத பெரும் கொள்ளையான மருத்துவ வணிகம் செய்து லாபம் பார்த்தார்கள். தாங்க முடியாத சோக நிகழ்விலும் மொய் வாங்கிய மகானுபானவர்கள் தான் கார்ப்பரேட் முதலாளிகள்.

மருத்துவ விஞ்ஞானம் பெரிய அளவில் வளர்ந்திருந்தும், முதலாளித்துவம் மக்களை பேராபத்தில் கைவிட்டு விட்டது. பெரிய முதலாளித்துவ நாட்டு மக்கள் அச்சத்தில் உறைந்து போனார்கள்.

தமிழ்நாட்டின் பிரம்மாண்ட கட்டமைப்பை கொண்ட அப்போலோ, ராமச்சந்திரா, மியாட், மீனாட்சி மிஷன், குளோபல் போன்ற மருத்துவமனைகள் மக்களுக்கு அபயக்கரம் நீட்டி காத்ததா? மிகப்பெரிய கோடீஸ்வரர்கள், பிரமுகர்கள், திரையுலக நட்சத்திரங்கள் அங்கே சிகிச்சை பெற்றார்கள். அதையும் தங்கள் திறமைக்கு விளம்பரமாக்கிக் கொண்டார்கள்.

அரசு மருத்துவமனைகளில் பணியாற்றிய மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் தங்கள் உயிரை துச்சமாக நினைத்து அரும்பாடு பட்டார்கள். ஏராளமானோர் இராணுவ வீரர்கள் போல் போராடி உயிர் நீத்தார்கள் என்பது நம் காலத்தில் பார்த்த நெஞ்சை நெகிழ வைக்கும் சோகமான வரலாறு.

ஆல்பர்ட் ஸ்வைட்சர் ஜெர்மனி நாட்டில் பிறந்தவர். இயல்பாகவே மனிதநேயமும், கருணையும் கொண்ட சத்தியசீலர். தத்துவம், இசை, சமயவியல், இலக்கியம் என அனைத்திலும் உயர்கல்வி கற்றுத் தேர்ந்த பேரறிஞர். இந்தியாவில் சமண மதத்தின் மனித நேயத்தையும் தாண்டிய ஜீவகாருண்யம் அவரை ஈர்த்தது.

ஆப்பிரிக்காவில் வாழ்ந்த போது காண்டா மிருகங்களின் வாழ்வை உற்றுநோக்கினார். இயற்கை அன்னையின் படைப்பில் விலங்குகளும், மனித குலத்தின் ஓர் நிறை, உயிர், பன்மையின் அங்கம் என உணர்ந்து நெகிழ்ந்து போனார்.

பன்முகத்தன்மை கொண்ட பெரிய மேதையாக திகழ்ந்த அவருக்கு வாழ்வில் மன நிறைவில்லை. பிற உயிர்களை தன்னுயிர் போல எண்ணி வாழ்ந்த அவர், மருத்துவம் பயின்று தேர்ந்த மருத்துவர் ஆனார். ஆப்பிரிக்கா சென்று ஆதரவற்ற பழங்குடி மக்களுக்கு அரிய மருத்துவ சேவை செய்தார். முதலாம் உலகப் போர் மூண்டதால் தாய்நாடு திரும்பினார். அவரது அருந்தொண்டை கௌரவிக்கும் முகத்தான் 'நோபல் பரிசு' அவருக்கு வழங்கப்பட்டது. அந்த தொகையை அப்படியே ஆப்பிரிக்க தேசத்து தொழு நோயாளிகளின் நலனுக்காக வழங்கினார்.

மனிதநேயமும், சகோதரத்துவமும் வளர ஐரோப்பா முழுவதும் அற்புதமான சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். அவரின் மெய்ஞானம் இழைந்தோடும் தத்துவ மற்றும் மனிதநேய கருத்துக்களை செவி மடுக்க ஐரோப்பா முழுவதும் மக்கள் திரண்டு வந்தனர். உலகப் புகழ்பெற்ற ஆளுமையாக வளர்ந்த அவரை அகிலமே கொண்டாடியது.

இன்று மனித குலத்திற்காக பெருந்தீங்கு செய்து கொண்டும், முதல் மனிதனை உருவாக்கிய ஆப்பிரிக்க கண்டம் வறுமையிலும், சொல்ல முடியாத துயர இருளில் மூழ்கிக் கிடக்கவும் காரணமான ஏகாதிபத்திய நாடுகள் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுபவை தான். அதனால் என்ன பயன்? மார்க்ஸ் பிறந்த மண்ணில் தான் கிறிஸ்தவத்தின் நடைமுறையில் இருந்த குறைகளை எதிர்த்து மார்ட்டின் தூதர் போர் கொடி உயர்த்தினார்.

அந்த மண்ணில் உதித்த ஆல்பர்ட் வெட்சர் மதச் சடங்குகளை அச்சு பிசகாமல் கடைபிடிப்பது மட்டும் மத நீதி அல்ல. அன்பு நெறியும், தொண்டு நெறியும் தான் உண்மையான கிறிஸ்துவம் என மக்களிடையே போதித்தார்கள். அவர் பாதையை பின்பற்றிய அன்னை தெரசாவும் சமய நெறியை பரப்பும் யாந்திரகமான செயலில் இருந்து துண்டித்துக் கொண்டு தொண்டு நெறி எனும் ராஜபாட்டையில் பயணித்தார். நோபல் பரிசு பெற்றார். உலகம் முழுவதும் அவரது தொண்டு அமைப்புகள் உருவானது. தேசம், மதம், இனம், என அனைத்து எல்லைகளையும் கடந்த செயல் பாராட்டப்படுகிறது.

கத்தோலிக்க மதத்தின் உலகத் தலைவர்களாக விளங்கிய போப்பாண்டவர்கள்கூட பெற முடியாத 'புனிதர்' பட்டம் அன்னை தெரசாவுக்கு கிடைத்தது. சமயத் தொண்டிலிருந்து சமூகத் தொண்டிற்கு மாறியவர் அன்னை தெரசா.

பிரான்ஸ் நைட்டிங்கேல் இத்தாலியின் பினாரன்ஸ் நகரில் சிறந்த மகாகவியாவார். அவரின் பெற்றோர்கள் அவரை திருமணம் செய்து கொள்ள வலியுறுத்தினர்கள். அவர் மனித குலத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்ற லட்சிய நோக்கில் வாழ்ந்தார். அவர் மிகச் சிறந்த சமூக சீர்திருத்தவாதியாக, பெண்களின் உரிமைக்கான பெண்ணியவாதி. சிறந்த சிந்தனையாளர் மற்றும் எழுத்தாளர் என பன்முகத் தன்மை கொண்ட ஆளுமையாக திகழ்ந்தார்.

நவீன நர்சிங்கின் நிறுவனர். கிரிமியன் போரின் போது மேலாளராகவும் பயிற்சியாளராகவும் பணியாற்றினார். கான்ஸ்டான்டி நோபிளில் காயமடைந்த வீரர்களுக்கு சிகிச்சை அளித்து அருந்தொண்டாற்றினார். இறப்பு விகிதத்தை குறைத்தார். இரவு பகல் பாராமல் பணியாற்றியதால் 'தி லேடி வித் லாம்ப்' என்று உலகப் புகழ் பெற்றார்.

லண்டன் மாநகரில் வெயின்ட் தாமஸ் மருத்துவமனையில் தனது நர்சிங் பயிற்சி பள்ளியை நிறுவினார்! இன்றும் நர்சிங் கல்லூரியின் அங்கமாக அது திகழ்கிறது. ஏராளமான கௌரவ விருதுகளை வாங்கிக் குவித்தார். பெண்கள் செவிலியர் பணியை எப்படி தன்னலமில்லாமல் அர்ப்பண உணர்வோடு பணியாற்ற வேண்டும் என்ற நெறிமுறைகளை மேதா விலாசத்தோடு வடிவமைத்தார். அவர் பிறந்த நாள் சர்வதேச செவிலியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்தியாவில் ஒரு வலுவான இடதுசாரி அரசை நிறுவி, முதலாளித்துவ வளர்ச்சி பாதையை முறித்து, சோசலிசத்தின் தடத்தில் பயணிக்கும் போது தான் விலைமதிப்பற்ற உயிர்களைக் காக்கும் மருத்துவம் மக்களுக்கான மருத்துவமாக மாறும். இதனை ரஷ்ய புரட்சிக்கு பின்னர் அந்த தேசம் உலகிற்கு நிரூபித்து காட்டியது.

தொடர்புக்கு: 96007 23726

## கொரோனா காலத்தில் பணி செய்த

# செவிலியர்களை பணி நீக்கம் செய்யும் முடிவை கைவிடுக

### சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தமிழ்நாடு அரசிற்கு வேண்டுகோள்



சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க பொதுச் செயலாளர் டாக்டர் ஜி. ஆர். இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

உலகையே கொரோனா அச்சுறுத்திய காலக் கட்டத்தில், கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்களை தமிழ்நாடு அரசு நியமித்தது.

2020 மார்ச் மாத உத்தரவு மூலம், 3700 செவிலியர்களை ஓரிரு மாதத்திலேயே அரசு நியமித்தது.

எம்.ஆர்.பி. தேர்வில் வெற்றி பெற்றிருந்த செவிலியர்களை, கட்டாயமாக பணியில் சேர்ந்தே ஆக வேண்டும் என வற்புறுத்தி, அரசு, இச்செவிலியர்களை அப்போது பணியில் சேர்த்தது.

அவர்களுக்கு மாதத் தொகுப்பூதியமாக வெறும் ரூ 14,000 மட்டுமே வழங்கப்படும் என அரசு அறிவித்தது. அதன்படி தொடர்ந்து இரண்டரை ஆண்டுகளாக, தொடர்ச்சியாக அவர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

கொரோனா முதல் அலை ,இரண்டாவது அலை மற்றும் மூன்றாவது அலை என மூன்று அலைகளிலும் கொரோனா நோயாளிகளுக்கு, அர்ப்பணிப்போடு இச் செவிலியர்கள் சேவை செய்தனர். ஏராளமான நோயாளிகளை காப்பாற்றினர். அதே 14,000 ரூபாய் தொகுப்பூதியத்தில் தான் இன்று வரை அவர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

கொரோனா காலத்தில் தங்கள் உயிரையும் துச்சமென கருதி பணிபுரிந்த, இச்செவிலியர்களை 31.12.2022 அன்று (GO (D) NO 1412) பணி நீக்கம் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

இது மிகுந்த அதிர்ச்சியையும், வருத்தத்தையும், மன வேதனையையும் தருகிறது. புத்தாண்டு பிறக்கும் நிலையில், புத்தாண்டு பரிசாக பணி நீக்கமா? என செவிலியர்கள் துயரத்தில் மூழ்கியுள்ளனர்.

எனவே, பணி நீக்க உத்தரவை தமிழ்நாடு அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டின் அரசு மருத்துவமனை களில் செவிலியர்களை, இதுவரை, டிஎன்பிஎஸ்சி / எம்ஆர்பி ( TNPSC/ MRB) மூலம் தற்காலிகமாக (contract basis-CB)நியமனம் செய்து, பின் காலிப் பணியிடங்கள் வரும் பொழுது, அவர்களை சில ஆண்டுகளுக்குள் பணி நிரந்தரம் செய்கின்ற நடைமுறை பின்பற்றப் பட்டு வருகிறது. இத்தகைய ஒப்பந்த முறையே கூடாது. ஆரம்பம் முதலே நிரந்தர முறையில் தான் நியமிக்க வேண்டும் என தொடர்ந்து கோரப்பட்டு வருகிறது.

ஆனால், தற்பொழுது கொரோனா காலத்தில் நியமிக்கப்பட்ட 3700 செவிலியர்களில், 800 செவிலியர்கள் கடந்த மார்ச் மாதம் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

அவர்களில், 2015ல் எம்.ஆர்.பி. தேர்வு எழுதிவிட்டு கோவிட் வேலையும் செய்து கொண்டிருந்த 420 செவிலியர்கள் மட்டும், 2021 ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர். மீதமுள்ள 2,472 செவிலியர்கள் திடீரென்று இன்று பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 2019 ம் ஆண்டில் MRB தேர்வு எழுதி, தேர்ச்சி பெற்று, இட ஒதுக்கீடு அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டவர்கள் ஆவர்.

மேலும், மாவட்ட நோயாளிகள் நலச் சங்கத்தின் மூலமாக, தேசிய சுகாதார இயக்கம் மூலமாக, அரசு மருத்துவமனை களில் உள்ள செவிலியர்களுக்கான காலிப் பணி இடங்களில், பணி நீக்கம் செய்யப்பட்ட கோவிட் செவிலியர்களில் விருப்பமுள்ளவர்கள் சேர்ந்து கொள்ளலாம், அப்பணி முற்றிலும் தற்காலிகமானது என்ற அறிவிப்பையும் 31.12.2022 அன்று தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இது கடந்த இரண்டரை ஆண்டு காலம் பணிபுரிந்த செவிலியர்களுக்கு தண்டனை வழங்குவது போலுள்ளது.

மேலும் "ஒன்றிய அரசுடைய கொள்கை, ஒன்றிய அரசுடைய திட்டம்" என்ற காரணங்களை கூறி, தமிழக அரசு, தனது செவிலியர் பணி நியமனக் கொள்கையை முற்றிலும் கைவிடுவது ஏற்புடையது அல்ல. மாநில உரிமையை பறிகொடுப்பது சரியல்ல.

எனவே, தமிழக அரசு, மருத்துவத்துறை பணியாளர்கள் விரோத நடவடிக்கையை உடனடியாக கைவிட வேண்டும்.

செவிலியர்கள் பணி நீக்க உத்தரவை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

கொரானா காலத்தில் பணியில் சேர்ந்த, அனைத்து செவிலியர்களுக்கும் பணி நீட்டிப்பு வழங்க வேண்டும். பணி பாதுகாப்பு வழங்க வேண்டும். படிப்படியாக பணி நிரந்தரமும் வழங்க வேண்டும்.

கடந்த 6 மாதகாலமாக அவர்களில் பெரும் பாலோருக்கு ஊதியமும் வழங்கப்படவில்லை. ஆறு மாதங்களாக வழங்கப்படாத ஊதியத்தையும் உடனடியாக அவர்களுக்கு வழங்கிட வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் முடுக்கிவிட வேண்டும்

### சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம், பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கம் கோரிக்கை

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் மற்றும் பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர் பி.காளிதாசன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

"பூஜ்ய கொரானா கொள்கையை (Xero Covid Policy) "இது வரை பின்பற்றி வந்த சீனா, அக்கொள்கையை பொதுமக்களின் போராட்டங்களின் காரணமாக திடீரென கை விட்டதும், தடுப்பூசியால் பெறப்பட்ட எதிர்ப்பாற்றலையும் மீறி உருமாறிய கொரோனா வைரஸ்கள் பரவுவதால் அந்நாடு பாதிக்கப்பட்டுள்ளது.மேலும் சீனாவில் 80 வயதிற்கும் மேற்பட்டோரில் 65 விழுக்காட்டினர் மட்டுமே தடுப்பூசியை முழுமையாகப் பெற்றுள்ளனர். இதுவும் பிரச்சனையை சிக்கலாக்கியுள்ளது.

அதே நேரத்தில் தடுப்பூசி அதிகம் வழங்கப்பட்ட ஜப்பான், அமெரிக்கா, தென்கொரியா, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் கொரோனா தொற்று பரவல் அதிகரித்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது. இது கவலை அளிக்கிறது.

பி.எஃப் 7 ,பி.ஏ 5 போன்ற ஒமிக்ரான் வகை உருமாறிய கொரானா வைரஸ் அதிக அளவில் தொற்றுக்களை உருவாக்குகிறது. பி.எஃப் 7வகை உருமாறிய கொரோனா தொற்றுக்கு ஆளானவர் மூலம் 12 முதல் 18 நபர்களுக்கு தொற்று பரவும் நிலை உள்ளது.

ஏற்கனவே, தடுப்பூசிகள் மூலமும்,இயற்கையான தொற்று மூலமும் பெறப்பட்ட எதிர்ப்பாற்றலையும் தகர்த்து, புதிய உருமாறிய கொரோனா வைரஸ் பரவுகிறது. கொரோனா வைரஸ் தொற்றிற்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை, இந்தியாவிலும் அடுத்த 40 நாட்களுக்குப் பிறகு அதிகரிக்கக் கூடும் என ஒன்றிய அரசு கூறியுள்ளது.

எனவே, ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட வேண்டும்.

கடந்த கால அனுபவங்களிலிருந்து பெற்ற படிப்பினைகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும். பொது சுகாதார துறையை வலுப்படுத்த வேண்டும். மருத்துவ ஆராய்ச்சிகளை அதிகரிக்க வேண்டும். கொரோனா முதல் பூஸ்டர் தடுப்பூசிகளை பெற தகுதி பெற்றவர்களில் வெறும் 26 விழுக்காட்டினரே ,அதை இந்தியாவில் பெற்றுள்ளனர் என ஒன்றிய அரசு கூறியுள்ளது.

இரண்டாவது தவணை தடுப்பூசி பெற்ற ஏராளமானோர், அதைப் பெற்று ஓராண்டுக்கும் மேலாகியுள்ளது . எனவே, தடுப்பூசியால் பெற்ற எதிர்ப்பாற்றல் குறைந்திருக்க வாய்ப்புள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். தடுப்பூசி வழங்குவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். கொரோனா தடுப்பூசிகளை மீண்டும் இலவசமாக வழங்கிட வேண்டும்.

மருத்துவர்கள்,செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கு கூடுதல் ஊக்கத் தவணை தடுப்பூசி வழங்கிட வேண்டும். இது வரை ஊக்கத் தவணை (Booster ) தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களுக்கு உடனடியாக அதை செலுத்த நடவடிக்கை எடுத்திட வேண்டும். கொரோனா பரிசோதனைகளையும், மரபணு ஆய்வு பரிசோதனைகளையும் அதிகரிக்க வேண்டும்.

முகக் கவசம் அணிதல், கைகளை அவ்வப் பொழுது நன்றாக சோப்புப் போட்டுக் கழுவுதல், சானிட்டைசர் பயன்படுத்துதல், தனிநபர் இடைவெளியை பராமரித்தல் போன்ற ,கொரோனா தடுப்பிற்கு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடை முறைகள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் மீண்டும் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

மருத்துவப் படுக்கைகளை அதிகரித்தல் உட்பட அனைத்து மருத்துவக் கட்டமைப்புகளையும் மேம்படுத்துவதோடு, அத்தியாவசிய மருந்துகள் மற்றும் ஆக்சிஜன் இருப்புகளை உறுதி செய்வதோடு அதிகரிக்கும் தேவைகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

தமிழக அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் சிகிச்சைப் பெற மருத்துவக் காப்பீட்டு முறை கூடாது. அனைத்து சிகிச்சைகளையும்,பரிசோதனைகளையும் இலவசமாக்கிட வேண்டும். மருத்துவக் கழிவுகள் அகற்றும் கட்டணத்தை அரசு முறைப்படுத்திட வேண்டும். பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு வகையான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. இதனால் சிறிய ரத்தப் பரிசோதனைக் கூடங்கள் பாதிக்கப்படுகின்றன.

எனவே , தமிழக அரசு மருத்துவக் கழிவுகள் அகற்றும் கட்டணத்தை சிறிய ரத்த பரிசோதனை கூடங்களுக்கு மாதம் ரூபாய் 500 ஆக நிர்ணயம் செய்ய வேண்டும். தமிழக அரசே மருத்துவக் கழிவுகள் அகற்றும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.இத்துறையில் தனியார் நிறுவனங்கள் கோலோச்ச அனுமதிக்கக் கூடாது. மருந்துக் கடைகளில் ரத்த பரிசோதனை மேற்கொள்வதை அரசு தடுத்திட வேண்டும்.


மலேரியா தடுப்புப் பணியில் உள்ள ஆய்வக நுட்புனர்கள் தொடர்ந்து பழிவாங்கப்படுகின்றனர். பழிவாங்கும் நோக்குடன் சிலர் இடம் மாறுதல் செய்யப்பட்டுள்ளனர்.இந்த பழிவாங்கும் நடவடிக்கைகளை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்களை உடனடியாக போதிய அளவில் நியமிப்பதோடு, அனைத்து காலிப்பணியிடங்களையும் உடனடியாக நிரப்பிட வேண்டும்.

ஒன்றிய அரசு, தேசிய மருத்துவ ஆணையம் மூலம், மருத்துவ மாணவர்களுக்கு நெக்ஸ்ட் (NEXT) தேர்வை புகுத்துவதை கைவிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு, முதுநிலை மருத்துவ மாணவர்களின் விடுதிகளை தனியார்மயமாக்குவதை கைவிட வேண்டும். சென்னை அரசு பல் மருத்துவ மாணவர்களுக்கு தங்குவதற்கு மாற்றிடம் வழங்காமல்,கோட்டை ரயில் நிலையம் எதிரில் தற்போதுள்ள விடுதியை இடித்திடக் கூடாது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.



# இந்துத்வா: முகமூடிக்குப்

◆ என்.இ.பலராமன்

**நமது விவாதங்களில் ஒரு புதிய சொல் இடம் பெற்றிருக்கிறது. இது எழுத்திலும், பேச்சிலும் அடிக்கடி பயன்படுத்தப் படுகிறது. அதுதான் "இந்துத்வா" என்பது. இது ஒரு புதிய செய்தியை அளிக்கும் ஒரு முயற்சி என்று சிலரும், நமது வழக்காற்றில் மத அடிப்படைவாதத்தின் பங்களிப்பு என்று சிலரும் இதனைக் கருதுகின்றனர். எதுவாக இருந்தாலும் இதற்கு ஒரு பிரத்தியேக மூலமும், சொற்பிறப்பியலும் உள்ளது.**

இன்றைக்கு உள்ள சொற்கட்டுமானத்தின் மூலம் அவர்களது கருத்தினை விளக்க சிலரால் முடியவில்லை என்பதை இது காட்டுகிறது. இந்து கலாச்சாரத்தையும், மதத்தினையும் விளக்க முற்படும் ஒரு செயல் என்றும், இந்து லட்சியங்களுக்கு ஒரு தெளிவான உருவத்தைக் கொடுக்கும் முயற்சி என்றும் முதலில் இது தோன்றலாம். இதன் பொருளை மிக நுணுக்கமாக ஆராய வேண்டியுள்ளது.

இது தத்துவ அல்லது மத சம்பந்தமான விவாதங்களுடன் தொடர்புடையது என்பது நமக்குக் கிடைக்கும் முதல் மதிப்பீடு ஆகும். இது தவறானதாகும். இந்தச் சொல் அரசியல் அரங்கிலிருந்து தோன்றியது ஆகும். இந்து தர்மம் அல்லது ஆரிய தர்மம் அல்லது பாரதிய தர்மம் ஆகியவற்றால் வெளிப்படுத்த முடியாததைக் கூற இந்தப் புதிய சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்று இதனை உருவாக்கியவர்கள் கண்டார்கள்.

இந்த முயற்சியை மேற்கொள்வதற்குக் காரணம், வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், புத்த, சைன நூல்கள், சாங்கியம், வைசேடிகம், நியாயம் ஆகிய தரிசனங்கள், சூபி–பக்தி இயக்கங்கள் ஆகியவற்றில் உள்ள இந்தியத்தன்மை அல்லது பாரதியம் என்பது காலாவதியாகி விட்டது என்று இவர்கள் நினைத்தார்கள். இந்தச் சொல்லை உருவாக்கும் பொழுது சில முக்கியமான இந்தியப் பாரம்பரியத்தை மறுக்க வேண்டியிருந்தது. இந்திய சிந்தனைக்கு சிலவற்றைப் பொருத்தமானது என்று முன்னிறுத்த, அவற்றைத் தெரிவு செய்து காட்ட வேண்டியிருந்தது. இதனை பாரபட்சமின்றி நாம் ஆராய்வோம்.

### ஒரே மதம் உண்டா?

இந்திய வரலாறு, பாரம்பரியம் ஆகியன பற்றிய விவாதங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு அடிப்படை உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த நாட்டிற்கு 4000 ஆண்டுகள் உள்ள ஒரு பண்பாட்டு வரலாறு இருக்கிறது. இதனை எல்லா வரலாற்று ஆசிரியர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இங்கு கேள்வி என்னவென்றால் இந்த 4000 ஆண்டுகளில் இந்தியா ஒரே மதம் உள்ள நாடா? என்பதாகும். இதற்கு விடை உறுதியாகஇல்லை என்பதாகும்.

**சமஸ்கிருதத்தைப் பேசிய ஆரியர்கள் இங்கு வந்த பொழுது, "முண்டா" மொழி பேசியவர்களும், திராவிட மொழி பேசியவர்களும் இங்கு இருந்தனர். அவர்களது மத நம்பிக்கைகள் வேறானவை. மொகஞ்சதாரோ, ஹரப்பாப் பகுதியில் வசித்த மக்கள் புதியதாக வந்தவர்களிடமிருந்து வேறுபட்ட நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். பிற்காலத்தில் வேதகாலப் பிராமணர்களது ஆதிக்கம் தோன்றிய பிறகு, அதிலிருந்து வேறுபட்டவர்கள் இருந்தனர். அவர்கள் ஸ்ரமணர்கள் என்று அழைக்கப்பட்டனர்.**

இதில் பௌத்தர்கள், சைனர்கள் மிகவும் பழமையான ஆசிவகர்கள், (இவர்கள் அசோக மரத்தை வணங்கும் தேசாந்திரிகள் ஆவர்) பிராத்திரியர்கள், ஜடிலர்கள் போன்றவர்கள் இடம் பெற்றனர். இவர்களைப் பொதுவாக ஸ்ரமணர்கள் என்று அழைத்தனர். இதே காலத்தில் ஒரு மூன்றாவது பிரிவும் இருந்தது. அது சாங்கியம், வைசேடிகம், நியாயம், பாஞ்சராத்திரம் ஆகிய தத்துவ தரிசனங்களை நம்பியது. இவை இந்திய அல்லது பாரதியம் என்று சங்கரர் மறுத்ததை நாம் நினைவுகூர வேண்டும்.

அசோகர், சந்திரகுப்தர் ஆகியோர் காலத்தில் நாட்டின் மலைப்பகுதிகளில் இனக் குழு மக்கள் இருந்தனர். இவர்கள் பௌத்தத்தையோ அல்லது பிராமணிய மதத்தையோ ஏற்றுக் கொள்ளவில்லை. லிச்சாவி இனக் குடிமக்கள் ஆயிரம் ஆண்டுகளாக அவர்களது பண்பாட்டையும் சமுதாயத்தையும் பாதுகாத்தனர் என்று வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளனர். பௌத்தர்கள், சைனர்கள் ஆகியோரைப் போன்று இந்த இனக் குழுமக்களும் சதுர் வர்ணக் கலாச்சாரத்தின் எல்லைக்கு வெளியே உள்ளவர்கள் ஆவர்.

இம் மக்களின் மத நம்பிக்கைகளில் ஒரே சீரான தன்மை இல்லை. இவர்களது மதங்கள் வெவ்வேறானவை. ஸ்ரமண – பிராமண பிரச்சினை பற்றி பாணினி தொடங்கி ராமானுஜர் வரையுள்ள அறிஞர்களும், முனிவர்களும் விவாதித்துள்ளனர். இது கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. இது இந்திய வரலாற்றின் முக்கியமான அத்தியாயங்களில் ஒன்றாக விளங்கியது.

இதற்கிடையில் இஸ்லாம், கிறித்தவம் ஆகியவற்றின் வருகை இடம் பெற்றது. குருநானக்கின் முயற்சியால் 10ஆம் நூற்றாண்டில் சீக்கியம் தோன்றியது. இதே காலகட்டத்தில் கபீரின் மார்க்கம் உட்பட நமது நாட்டில் 16 மார்க்கங்கள் இருந்தன. இந்தியாவானது ஒரே மதம் உள்ள நாடு அல்ல என்பதைக் காட்டுவதற்கு இந்த வரலாற்று உண்மைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மேலும், அசோகர், சந்திரகுப்தர், கனிஷ்கர் ஆகியோர் காலத்தில் இனக் குழுமக்களின் எண்ணிக்கையானது, புத்தரைப் பின்பற்றுபவர்கள் அல்லது பிராமணிய மதத்தினர் ஆகியோரை விட அதிகமாக இருந்தது. ஒரு காலத்தில் இந்த இனக் குழுமக்களின் ஆதிக்கம் இந்திய வரலாற்றில் அதிகமாக இருந்தது. வசதிக்காக இவர்களை நாம் இந்துக்கள் அல்லாதவர்கள் என்று அழைக்கலாம். இந்தியாவில் ஒரே மாதிரியான மதம் பின்பற்றப்படவில்லை என்பதை வரலாற்று ஆதாரம் உறுதியாகக் காட்டுகிறது.

### ஒரே மொழி உண்டா?

இரண்டாவது முக்கியமான பிரச்சினை என்னவென்றால், இந்திய மக்கள் ஒரே மொழியைப் பேசிய காலம் ஒன்று உண்டா என்றால் அதற்கும் பதில் இல்லை என்பதாகும். இங்கு உள்ள மக்கள் முண்டா அல்லது நன்கு வளர்ந்த திராவிட மொழிகளைப் பேசிக் கொண்டிருந்த பொழுது, வளர்ச்சி பெறாத சமஸ்கிருதத்துடன் ஆரியர்கள் இங்கு வந்தார்கள். முண்டா மொழியிலிருந்து கங்கா, வங்கா, கலிங்கா போன்ற எத்தனை சொற்களை சமஸ்கிருதம் பெற்றுக் கொண்டது என்பது தெரியாது.

வேத நூல்களில் 20க்கும் மேற்பட்ட திராவிடச் சொற்கள் உள்ளன என்று அறியப்பட்டுள்ளது. மத்திய காலத்தில், இந்தியாவில் பல வட்டார மொழிகளும், பெரிய மொழிகளும் ஏக காலத்தில் இருந்தன. பலர் நினைப்பது போல அவை சமஸ்கிருதத்திலிருந்து வந்தவை அல்ல. பெரும்பாலானவை முண்டா அல்லது திராவிடம் அல்லது மங்கோலிய மொழியைச் சேர்ந்தவை. எனவே இந்தியா என்றுமே ஒரே மதம் அல்லது மொழி உள்ள நாடு அல்ல. ஒருமைப்பாடு அர்த்தமற்றது என்பது இதன் பொருள் அல்ல.

நமது நாட்டில் ஒரு பரவலான ஒருமைப்பாடு இருந்து வந்துள்ளது. இது இலக்கியம், தத்துவம், கலை, சிற்பம், யாத்திரை, வணிகம் ஆகிய பல துறைகளில் இருந்து வந்துள்ளது. இந்த ஒற்றுமையானது கூட்டு வாழ்க்கை, பரஸ்பர பரிமாற்றம் ஆகியவற்றின் விளைவு என்பதை மறுக்க முடியாது. இதேபோன்று பௌத்த, சைன, சாங்கிய, திராவிட, பிராமணிய கருத்துக்கள் இந்த ஒற்றுமையை உருவாக்க உதவின.

### வரலாறு பற்றிய இந்து கண்ணோட்டம்

ஆரம்ப காலம் பாரசீக மொழியில் எழுதப்பட்ட புகழ் பெற்ற ஆக்கிமெனிட் கல்வெட்டுக்களில் "அல் இந்" என்பது முதன்முதலாகக் குறிப்பிடப்படுகிறது. சிந்து நதிப் பிரதேசத்தை இவை குறிப்பிடுகின்றன. இவர்களைப் பின்பற்றி அரேபியர்களும் இதே சொல்லைப் பயன்படுத்தினர். கிரேக்க வரலாற்று ஆசிரியர் ஹெரோடாட்டஸ்ஸின் "இந்" என்பதும், பாரசீகரான டேரியஸ் குறிப்பிடும் 'இந்' என்பதும் இந்தியாவைக் குறிப்பிடுகின்றன என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். நமது நாட்டிற்கு 'இந்' என்று வெளிநாட்டவர்கள் அளித்த பெயரிலிருந்து மேலைநாட்டவர்கள் இந்தியா என்ற சொல்லை உருவாக்கினர்.

**அசோகரது கல்வெட்டுக்கள் பழைய இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பரவிக் கிடந்தன. இதில் தற்காலத்திய பாகிஸ்தானும் அடங்கியிருந்தது. இவை பெரும்பாலும் பிராமி மொழியில் இருந்தன. இவற்றை விளக்க பல நூற்றாண்டுகள் பிடித்தன. அசோகர் புராண காலத்து மனிதரல்ல. எனவே இந்து வரலாற்றாசிரியர்கள் அவரைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் அவரைப் பற்றிய குறிப்புகள் பௌத்த இலக்கியங்களில் உள்ளன. 1837 ஆம் ஆண்டில் தான் கீழை தேச இயல் அறிஞர் ஜேம்ஸ் பிரின்செப் என்பவர் இவற்றை விளக்கினார். அதன்பிறகு தான் அசோகரின் பெருமை உலகிற்குத் தெரிய வந்தது.**

நாடு முழுவதும் பரவிக் கிடந்த அசோகரின் கல்வெட்டுக்களில் ஒரே நாடு என்ற கருத்தாக்கம் காணப்படவில்லை. அவற்றில் இந்த நாட்டின் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அவற்றில் தர்மம் பற்றிய செய்தி இருந்தது. அதற்கான பொருத்தமான சூழல் அப்பொழுது இருந்திருக்க வேண்டும். இங்கு தர்மம் என்ற சொல் பௌத்தக் கண்ணோட்டத்தில் பயன்படுத்தப்பட்டது. இது ஒரு வாழ்க்கை முறை எனலாம். மனுஸ்மிருதியின் தர்ம கீர்த்தி கூறும் தர்மம் போன்ற ஆன்மீக அல்லது தெய்வீகப் பொருள் இதற்குக் கிடையாது.

**அவர்கள் ஆக்கிரமித்த இடங்களுக்கு ஆரியர்கள் சில பெயர்களைக் கொடுத்தனர். பஞ்சாப் பகுதியை சப்த சிந்து என்றனர். இது இன்றைய பாரதம் என்பதற்கு இணையானது அல்ல. உண்மையில் பாரதம் என்ற நாட்டின் பெயரே வேதங்களில் இல்லை. காத்யாயனிரிடம் தான் நாம் விந்தியமலைக்குத் தெற்கே உள்ள பகுதி குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம். மனுஸ்மிருதி அல்லது மானவ தர்ம சாஸ்திரம் இரு பூகோளப்பகுதிகளைக் குறிப்பிடுகிறது. ஒன்று பிரம்மவர்த்தம். மற்றொன்று ஆரிய வர்த்தம். மற்றவை சரஸ்வதி, த்ரஸ்வதி (பஞ்சாப்பில் பாதி, உத்திரப்பிரதேசம்) ஆகிய நதிகளால் சூழப்பட்டவை. இது வேத அறிவின் பூமி என்று கருதப்பட்டது.**

இரண்டாவது பகுதி கங்கை, யமுனை ஆகிய ஆறுகளுக்கு இடைப்பட்டது. இது பிரம்மரிஷி அல்லது பெரிய முனிவர்களின் தேசம் எனப்பட்டது. அவரது தென்னாட்டு அண்டைய தேசத்தவர்களாக அசோகரது கல்வெட்டுக்கள் சோழர்கள், பாண்டியர்கள், கேரள புத்திரர்கள் சத்திய புத்திரர்கள் ஆகியோரைக் குறிப்பிடுகின்றன.



# பின்னால் உள்ள உண்மைகள்

இந்த பூகோள விவரங்களில் விந்தியமலைக்கு தெற்கே அல்லது கிழக்கே உள்ள தென்னிந்தியாவைப் பற்றிய இடங்கள் எதுவும் இல்லை.

வேத அறிஞர்கள், சமஸ்கிருதம் தெரியாதவர்களை மிலேச்சர்கள் என்று அழைத்தனர். சமஸ்கிருதம் பேசாதவர்களை அல்லது அதனை மதிக்காதவர்களை மட்டும் இது குறிக்கவில்லை. ஆந்திரத்தை அரசாண்ட அரசர்களும் மிலேச்சர்கள் என்று கருதப்பட்டனர். கிரேக்கர்கள், சகர்கள், விந்தியத்தின் கிரதர்கள், ஷபரர்கள், புலிந்தர்கள், வேறு பல இனக் குழுமக்கள் அனைவருமே அவ்வாறு கருதப்பட்டனர். இமயமலைப் பள்ளத்தாக்கில் வசித்த மங்கோலிய இன மக்களும் மிலேச்சர்கள் எனப்பட்டனர்.

சிறிது காலத்திற்கு தென்னிந்தியா மிலேச்ச தேசம் என்று கருதப்பட்டது. வங்காளம், அஸ்ஸாம் ஆகியனவும் அவ்வாறே கருதப்பட்டன. நான்கு வர்ணத்திற்கு உட்படாத எல்லோருமே அவ்வாறு அழைக்கப்பட்டனர். அவர்களது மொழி, உணவுப் பழக்கவழக்கங்கள் ஆகியன எல்லாமே இதே பெயரில் அழைக்கப்பட்டன.

ஆரியர்களால் ஏற்றுக்கொள்ளப்படாத மற்றொரு பிரிவினர் விராத்தியர்கள் ஆவர். இதன் பொருள் தாழ்ந்த பிறப்பு உள்ளவர்கள் என்பதாகும். இவர்கள் சிறிதளவு பலம் வாய்ந்தவர்கள் என்பதால் விராத்திய ஸ்தோமம் என்ற சடங்கினைச் செய்த பிறகு ஆரியர்களுடன் இணைக்கப்பட்டனர். விராத்தியர்களில் இருந்து வந்த சத்திரிய அரசர்கள் இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டவர்களே ஆவர்.

உள்ளூர்வாசிகள் மட்டுமல்லாமல், அயல் நாட்டவர்களும் மிலேச்சர்கள் என்று அழைக்கப்பட்டனர். கிரேக்கர்கள், காம்போஜர்கள், துருக்கியர்கள், அரேபியர்கள் ஆகியோரும் அவ்வாறு அழைக்கப்பட்டனர். பிராமணியக் கருத்தினை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அனைவருமே மிலேச்சர்கள் எனப்பட்டனர்.

### சமஸ்கிருதத்தின் தனித்தன்மை காக்க:

அவர்களது மொழியான சமஸ்கிருதத்தின் தனித் தன்மையைப் பாதுகாக்க ஆரியர்கள் விரும்பினர். உத்தரகுரு அத்தகைய இடங்களில் ஒன்று. அங்கு ஆரியர்கள் சென்று தங்கள் மொழி அறிவை வளர்த்துக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டார்கள். இது ஆரியர் என்ற அடையாளத்தைப் பாதுகாக்கும் ஒரு வழி ஆகும்.

வேதங்கள், உபநிடதங்கள், பிரம்மாணங்கள் ஆகியவற்றின் காலத்தில், இன்று நாம் புரிந்து கொள்வது போன்ற இந்து மதம் இல்லை. இதனை வரலாற்று ஆசிரியர்கள், மொழி இயலாளர்கள், மத அறிஞர்கள் ஆகியோர் ஏற்றுக் கொண்டுள்ளனர். உண்மையில் கி.மு. 8வது நூற்றாண்டிலிருந்து கி.மு. 6வது நூற்றாண்டு வரை நாம் அழைப்பது போன்ற தாய் நாடு அல்லது ஒரே நாடு என்பது இருந்ததில்லை.

மக்கள் வசித்து சாகுபடி செய்த பகுதிகள் ஜனபதங்கள் எனப்பட்டன. பூகோளப் பிரிவுகள் அங்கு வசித்த இனக்குழு மக்களின் பெயர்களால் அழைக்கப்பட்டன. இவ்விதமாக காந்தாரம், குரு, பாஞ்சாலம், மத்ஸ்யம், சேதி, காசி, கோசலம், மகதம் போன்ற ஜனபதங்கள் இருந்தன.

பிற்காலத்தில்தான் ஆரியர்கள் கிழக்கு, தெற்கு ஆகிய திசையில் பரவினர். 'ஜனனி ஜன்ம பூமிஸ்ச்ச ஸ்வர்க்காதபி கரியசி' என்ற பாடலில் கூறப்படும் ஒரே தேசம் என்ற உணர்வு வளர்க்கப்பட்டது. இந்த வரலாற்று உண்மையைப் புரிந்து கொள்ளாமல் இந்தியாவின் பாரம்பரியம் பற்றிப் பேசுவது அர்த்தமற்றது.

### பரத வர்ஷம்:



பரத வர்ஷம் என்பது பற்றிய விரிவான தகவல் வாயு புராணத்தில் உள்ளது. முற்றுப் பெறாமலும், பல பிழைகள் உள்ளதாகவும் இருந்தாலும் இன்றைய இந்தியாவின் பல பகுதிகள் அதில் இடம் பெறுகின்றன. மகாபாரதம், ராமாயணம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டிலும் அவற்றிலுள்ள பூகோள விவரங்கள் எப்பொழுது சேர்க்கப்பட்டன என்பது உறுதியற்றது ஆகும். எனவே அவற்றை முற்றிலுமாக நம்ப முடியாது. இருப்பினும் பாரதம் என்ற பூகோளக் கருத்தாக்கம் குப்த சாம்ராஜ்ய காலத்தில் தோன்றியிருக்கலாம். புகழ் பெற்ற வானவியல் அறிஞர்களான பாஸ்கரர், ஆரியபட்டர் ஆகியோர் சில குறிப்புகளே தந்துள்ளனர். வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால் புராணங்களைத் தொகுத்தவர்கள் இவை பற்றிக் கண்டுகொள்ளவே இல்லை.

நாம் ஏற்கனவே கண்டபடி இந்து என்ற சொல்லை வெளிநாட்டவர்களே பயன்படுத்தினர். அதனால் தான் இச்சொல் மகாபாரதம், ராமாயணம் போன்ற இதிகாசங்களிலும், வேத உபநிடதங்களிலும் காணப்படவில்லை. வேதங்களையும் உபநிடதங்களையும் இயற்றிய ரிஷிகள், ஆச்சாரியர்கள். வால்மீகி, வியாசர் ஆகியோர் எங்கணுமே நாம் இந்துக்கள். நமது மதம் இந்து மதம் என்று கூறவில்லை.

**கி.பி. 8வது நூற்றாண்டில் வாழ்ந்த சங்கராச்சாரியார் கி.பி. 10வது நூற்றாண்டில் வாழ்ந்த ராமானுஜர் ஆகியோர் இந்து மதம் பற்றி ஒன்றும் கூறவில்லை. பிராமணிய சிந்தனைப் பிரிவிற்கும், ஸ்ரமண சிந்தனைப் பள்ளிக்கும் இடையே உள்ள விவாதம் கி.பி.600லிருந்து கி.பி.1100 வரை தொடர்ந்தது. இந்த விவாத நாட்களில் இந்துயிசம் என்பது பற்றி எதுவும் இல்லை.**

வேதங்களை ஏற்றுக் கொண்டவர்கள் வேதாந்திகள். ஏற்றுக் கொள்ளாதவர்கள் பௌத்தர்கள், சாங்கியர்கள். இவர்களுக்கு இடையே தான் விவாதங்கள் இருந்தன. சிலசமயங்களில் ஆத்திகர்கள், நாத்திகர்கள் (ஆஸ்திக, நாஸ்திகர்) ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

### 13ஆம் நூற்றாண்டு வரை 'இந்து' இல்லை

சமஸ்கிருதம், பாலி ஆகியவற்றிலிருந்து அதிகமான இலக்கியங்களை நாம் பெற்றிருந்தாலும், இலக்கண ஆசிரியர்களான பாணினி, பதஞ்சலி இதிகாசங்களை உருவாக்கிய ரிஷிகளான வியாசர், வால்மீகி, புகழ் பெற்ற கவிஞர்களான பாஷர், காளிதாசர், பவபூதி, நாகர்ஜுனர் நாடு முழுவதும் சென்று பேசிய தத்துவவாதிகளான கபிலர், கஹாதர், கௌதமர், வசுபந்து, தர்மகீர்த்தி சங்கரர், ராமானுஜர் ஆகியோர் இந்து அல்லது இந்து தர்மம் என்பதைப் பயன்படுத்தவில்லை. விஜயநகர சாம்ராஜ்யத்தின் மந்திரியாக இருந்தவரும், வேதங்களுக்கு விரிவான விளக்கம் எழுதியவரும் ஆன சங்கராச்சாரியார் கூட இச் சொல்லைப் பயன்படுத்தவில்லை. அக்காலத்தில் முஸ்லிம் அரசர்கள் இருந்த போதிலும், சாயனரோ அல்லது சைதன்யரோ இந்துக்கள் என்ற மதப் பிரிவு பற்றிப் பேசவில்லை. இது இன்று நமக்கு வினோதமாகப்படலாம். ஆனால் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை எந்தவொரு இந்திய அறிஞரும், பிராமணியக் கருத்தை இந்துயிசம் என்று காணவில்லை. இதுபற்றிப் பேசவும் இல்லை.

### இஸ்லாமின் கதை

துருக்கியர்கள், அரேபியர்கள், பாரசீகர்கள், மங்கோலியர்கள் போன்ற பல அயல் நாட்டவர்களை இந்தியா ஈர்த்தது. வந்தவர்களில் பலர் திரும்பவே இல்லை. இங்கேயே தங்கினர். இந்தியாவில் உருவான இஸ்லாமியப் பேரரசுகள் வேறுவிதமானவை. கி.பி. 8ஆம் நூற்றாண்டில் சிந்துவில் அரேபியர்கள் ஆட்சி செலுத்தினர். 11ஆம் நூற்றாண்டில் துருக்கியர்கள் பஞ்சாபை ஆண்டனர். இந்த வரிசையில் முகலாயர்கள் கடைசியானவர்கள். அவர்களும் ஆங்கிலேயர்களிடம் தோற்றனர்.

ஏற்கனவே கூறியபடி, அரேபியர்கள், துருக்கியர்கள், பாரசீகர்கள் ஆகியோர் மிலேச்சர்கள் என்று அழைக்கப்பட்டனர். சமஸ்கிருதம் பேசாதவர்கள் என்ற பொருளில் இது இருந்தது. இச்சொல் வேதத்திலிருந்து வந்தது. தற்கால வரலாற்று ஆசிரியர்களின் படைப்புகளில் உள்ளது போன்று அல்லாமல், இவர்கள் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படவில்லை. துருக்கியர்கள் துருக்ஷாக்கள் எனப்பட்டனர். அரேபியர்களும், பத்தான்களும் யவனர்கள் எனப்பட்டனர்.

இச்சொல் பிராகிருத மொழியில் யோனா என்பதிலிருந்து வந்தது. இம் மொழியில் உள்ள இச்சொல் அயோனிய கிரேக்கர்களைக் குறித்தது. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை இந்து முஸ்லீம் என்ற அடையாளமே இருந்ததில்லை என்பதை நுணுக்கமான ஆய்வு காட்டுகிறது. இவர்கள் வெவ்வேறு மதப் பிரிவினர். இவர்கள் சண்டையிடவில்லை.

**ஜமீன்தார்களையும், நிலக்கிழார்களையும், பிராமண பூசாரிகளையும் குறிக்க இந்து என்ற சொல்லை முஸ்லீம் அரசர்கள் பயன்படுத்தினர். பொது மக்கள் இந்துக்கள் என்று அழைக்கப்படவில்லை. 14 ஆவது நூற்றாண்டில் டில்லி சுல்தானின் அதிகாரிகள் ஜமீன்தார்களை இந்துக்கள் என்று அழைத்தனர். இது மதத்தினை விட அவர்களது பிரபுத்துவ அந்தஸ்தினைக் குறித்து இருந்தது.**

அந்தக் கால வரலாற்று ஆசிரியர்களில் ஒருவரான பத்வா–இ–ஜகன்ந்தரி என்ற நூலின் ஆசிரியரான ஜியா பரணி என்பவர் இந்து என்ற சொல்லை பல இடங்களில் பயன்படுத்துகிறார். இவை பெரும்பாலும் ஜமீன்தார்களைக் குறிப்பதாக இருந்தன. இந்து, முஸ்லிம் அடையாளம் படிப்படியாகவே வந்தது.

முஸ்லீம்கள் ஆட்சிக் காலத்தில், ஆரம்ப கட்டத்தில், ஏராளமான மத மாற்றங்கள் இடம் பெற்றன. இந்த மத மாற்றங்களின் மூலமாகத்தான் இந்தியாவில் முஸ்லீம் சமுதாயம் உருவாயிற்று. பல இந்து பிரபுக்கள் உயர் பதவிக்காகவும், பணத்திற்காகவும் இஸ்லாமிற்கு மாறினர். இவர்களில் பலர் முஸ்லீம் ஆட்சியில் மந்திரிகளாகவும், இராணுவ அதிகாரிகளாகவும், ஆலோசகர்களாகவும் பணியாற்றினர்.

### ஒடுக்கப்பட்டோர் மதமாற்றம்

**ஒடுக்கப்பட்ட சாதிகளைப் பொறுத்தமட்டிலும், ஏற்றத்தாழ்விலிருந்து தப்பிக்கும் ஒரு வடிகாலாக அது இருந்தது. பலர் இந்தப் பாதையைத் தேர்வு செய்தனர். கேரளத்தில் கிறித்துவத்திற்கும், இஸ்லாமிற்கும் மத மாற்றம் எவ்வாறு இடம் பெற்றது என்பது நமக்குத் தெரியும். சமீப காலத்தில் டாக்டர். அம்பேத்கர் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஹரிசனங்களை புத்த மதத்தில் இணைத்தார். எனவே, எவ்வாறு இருப்பினும் இந்தியாவிலுள்ள சிறுபான்மையோர் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் அல்லர். நால் வர்ண அமைப்பின் சாபக் கேட்டிலிருந்து தப்பிக்க இவர்கள் தங்களது மதத்தை மாற்றினர். இவர்கள் இங்கே பிறந்தவர்கள். அவர்களுக்குரிய சொந்தக்காரர்களுக்காக இவர்கள் மாறினர்.**

ஒரு சில முஸ்லிம் அரசர்கள் இந்தியாவையும் சில அதிகாரிகள் இந்தியர்களையும் கேவலப்படுத்த சில சமயங்களில் முயற்சித்தனர். இதற்கான உதாரணங்கள் அவர்களது எழுத்துக்கள் ஆகும். ஆனால் மத வெறுப்பினைத் தூண்ட திட்டமிட்ட எந்த முயற்சியையும் யாரும் மேற்கொள்ளவில்லை. இந்து மதத்தையும், இஸ்லாமையும் இணைக்கும் சில முயற்சிகள் இடம் பெற்றன.

### பக்தி இயக்கமும், சூபி இயக்கமும்

மத்திய கால இந்தியாவின் இந்துக்கள் வைணவம், அல்லது சைவ வணக்கத்தின் தாக்கத்திற்கு உள்ளானவர்களாக இருந்தனர். ஒரு சில பக்தி மார்க்கக் கவிஞர்களே பிராமண சமூகத்திலிருந்து வந்தார்கள். பெரும்பாலோர் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த கைவினைஞர்கள். காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை எல்லா இடங்களிலும் இந்த இயக்கம் பரவியிருந்தது.

இதனுடன் இஸ்லாமைப் பின்பற்றுபவர்களிடையே சூபி இயக்கமும் இருந்தது. சூபி இயக்கத்தினை இஸ்லாமின் பக்தி இயக்கம் என்று அழைக்கலாம். இவை இரண்டும் ஒன்றின் மீது ஒன்று தாக்கம் புரிந்தன என்பதில் ஐயமில்லை. இவை ஒன்றில் ஒன்று எத்துணை தாக்கம் புரிந்தன என்பது வரலாறு. இவர்களில் மீராபாய், ஜானாபாய், கன்ஹோட்தரா, ஆண்டாள், லல்லா போன்ற பெயர்களும் இருந்தன.

முதலாவதாக, பக்தி இயக்கம், சூபி இயக்கம் ஆகியன வட்டார மொழிகளை வளர்ப்பதில் பெரும் பங்காற்றின. டில்லியை அரசாண்ட சுல்தான்களது அரசாங்க மொழி பாரசீகமாக இருந்தாலும், அவர்கள் வட்டார மொழிகளை ஒடுக்கவில்லை. பக்தி மார்க்கக் கவிஞர்கள் இந்த மொழிகளுக்கு பெரும் ஆதரவு அளித்தனர்.

வங்காளத்தில் சைத்தன்யர், தமிழில் ராமானுஜர் கர்நாடகத்தில் சைலராஜர், பஞ்சாபில் நானக், காஷ்மீரில் ராஜஸ்தானில் மீராபாய், இந்தியில் துளசிதாசர், சூர்தாசர், கபீர், ராமானந்தர், அஸ்ஸாமியில் சங்கர தேவர், குஜராத்தியில் நரசிம்ம மேத்தா, மராத்தியில் நாமதேவர் ஞானேஸ்வரர் மலையாளத்தில் எழுத்தச்சன் ஆகியோர் உதாரணங்கள் ஆவர்.

தமிழில்: எஸ்.தோதாத்ரி

நன்றி: திணை, மார்ச் – ஆகஸ்ட் 2019

தொடரும்...

# செவிலியர் பணி நீக்கத்தை ரத்து செய்க

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

சம வேலைக்கு சம ஊதியம் கோரி போராடிய வந்த ஆசிரியர்கள் உணர்வை மதித்து, அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றும் வழிவகைகளை ஆராய்ந்து, அரசுக்கு பரிந்துரைகள் வழங்க நிதித்துறை செயலாளர் தலைமையில் குழு அமைத்தும், ஆசிரியர், அரசுப் பணியாளர்களுக்கான அகவிலைப்படி நான்கு சதவீதம் உயர்த்தியும் உத்தரவிட்ட முதலமைச்சர் நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் வரவேற்பதுடன் கொரோனா கால நெருக்கடியில் தற்காலிக பணியாக நியமனம் செய்யப்பட்ட செவிலியர்களை பணி நீக்கம் செய்யப்பட்டிருப்பது ஏற்கத்தக்கது அல்ல.

இது தொடர்பாக முதலமைச்சர் நேரடியாகத் தலையிட்டு, பெருந்தொற்றுப் பரவல் காலத்தில் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணிபுரிந்த செவலியர்களின் பணி, பெருந்தொற்று உருமாறிய வடிவங்களில் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சூழலில் மிக, மிகத் தேவை என்பதை கருத்தில் கொண்டு செவிலியர்கள் பணி நீக்கம் உத்தரவை ரத்து செய்து, அவர்களை மீண்டும் பணியமர்த்துமாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு, தமிழ்நாடு அரசையும், முதலமைச்சரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# பிரதமரின் தாயார் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

ஒன்றிய அரசின் பிரதமர் திரு.நரேந்திர மோடியின் தாயார் திருமதி ஹீரா பென் மோடி (100) 30.12.2022 அன்று அதிகாலை, அகமதாபாத் மருத்துவமனையில் காலமானார் என்ற செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையுற்றோம்.

மனித வாழ்வில் நிறைவாழ்வு கண்ட ஹீராபென் அம்மையார் ஐந்து ஆண் குழந்தைகள் மற்றும் ஒரு பெண் குழந்தையும் பெற்ற, பெருமைக்குரிய தாயார். இவர்களில் நரேந்திர மோடி, அரசை வழி நடத்தும் அரசியலமைப்பு அதிகாரத்தில் பிரதமர் நிலைக்கு உயர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. நிறைவாழ்வு வாழ்ந்து மறைந்த ஹீராபென் மோடி மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரை பிரிந்து வாடும் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

அரசினர் மேல்நிலைப்பள்ளியில்

# கழிவறை வசதிகளை மேம்படுத்த வேண்டும்

## மாணவர் பெருமன்ற மாநாட்டில் தீர்மானம்

அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், சோளிங்கர் ஒன்றியம், அரசினர் மேல்நிலைப்பள்ளி கூடலூர் கிளை மாநாடு அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சோளிங்கர் ஒன்றிய செயலாளர் ஆ.பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது. அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் கொடியேற்றப்பட்டது.

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில துணைத்தலைவர் ஆ.பிரகாஷ், மாவட்ட துணை செயலாளர் இரா.கார்த்திக், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சோளிங்கர் ஒன்றிய தலைவர்வெ.புருஷோத்தமன், ஒன்றிய துணைத் தலைவர் டே.காட்சன் மற்றும் கிளை பொறுப்பாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு பேசினர்.

தலைவராக எபினேசர், துணைத் தலைவர்களாக மதன், மௌனிகா, செயலாளராக பிருந்தா, துணைச் செயலாளர்களாக கோபிகா, ஜீவா, பொருளாளராக பூபதி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். அரசினர் மேல்நிலைப்பள்ளியில் கழிவறைகளை மேம்படுத்தி தரவேண்டும், குடிநீர் வசதி ஏற்படுத்த தர வேண்டும், விளையாட்டு நேரத்தில் விளையாட அனுமதிக்க வேண்டும், நூலகம் அமைத்து தர வேண்டும், ஒவ்வொரு பாடப்பிரிவைக்கும் ஒவ்வொரு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மெத்த வாடி கிளை செயலாளர்மு.புஷ்பராஜ் அவர்கள் நன்றி கூறினார்.

# குடிநீரில் மனித மலம் கலந்தவர்களை கைது செய்திடுக!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்




புதுக்கோட்டை மாவட்டம் காவேரி நகரில் குடிநீரில் மனித மலம் கலந்தவர்களை கைது செய்யக்கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கட்சியின் மாவட்ட செயலாளர் த. செங்கோடன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளரும், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளருமான மு. வீரபாண்டியன், கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம் எக்ஸ். எம்எல்ஏ, மாநில நிர்வாக குழு உறுப்பினர் க.மாரிமுத்து எம்.எல்.ஏ., தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர் முத்து. உத்திராபதி, வி.தொ.ச மாநில செயலாளர் அ.பாஸ்கர், ஆகியோர் பங்கேற்று உரை நிகழ்த்தினர்.

புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராமத்தில் ஆதிதிராவிட மக்கள் பயன்படுத்தும் குடிநீரில் மனித மலம் கலந்த நபர்களை அவர்கள் எந்த சமூகத்தைச் சார்ந்தவர் ஆனாலும் உடனடியாக கைது செய்ய வேண்டும், அந்த தொட்டியை அப்புறப்படுத்தி விட்டு புதிய தொட்டி, புதிய பைப் லைன்கள் அமைத்துத் தர வேண்டும். தொடர்ந்து அந்தப் பகுதியில் அனைத்து சமூக மக்களும் பதற்றம் இன்றி இயல்பாக வாழும் சூழலை மாவட்ட நிர்வாகம் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்துக்களை தலைவர்கள் உரையாற்றும்போது வலியுறுத்தினர்.

மாவட்ட துணைச் செயலாளர்கள் கே.ஆர். தர்மராஜன், ஏ.ராஜேந்திரன், பொருளாளர் என்.ஆர். ஜீவானந்தம், வி.தொ.ச.மாவட்ட செயலாளர் ஏனாதி ஏ.எல்.ராஜு, விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் எஸ்.சி.சோமையா, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் ப.ஜீவானந்தம் மற்றும் கட்சியின் அனைத்து ஒன்றிய செயலாளர்களும் நிர்வாகிகளும் தோழர்களும் பங்கேற்றனர்.

# 2023 ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள்




நடப்பு 2022 ஆண்டு நிறைவு பெற்று, 2023 ஆம் ஆண்டு பிறக்கிறது. அடுத்து வரும் புத்தாண்டை நாம் நம்பிக்கையோடு வரவேற்போம்.

கௌரவக் கொலைகள் என்ற பெயரில், சாதி வெறி ஆதிக்கத்தின் ஆணவக் கொலைகள் அரங்கேறும் கொடூரங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. ஏழாண்டு சட்டப் போராட்டத்தில் கோகுல்ராஜ் கொலை வழக்குக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். இவ் வழக்கில், சாதிவெறி நிர்பந்தத்தில் உருவான பிறழ் சாட்சியத்தின் மனச்சாட்சியை எந்தச் சட்டத்தாலும் உண்மை பேச வைக்க முடியவில்லை. அந்த அளவில் சாதி செருக்கு செறிவாகி நிற்கிறது.

அண்மையில் புதுக்கோட்டை மாவட்டம், இறையூர் வேங்கை வயல் கிராமத்தில் பட்டியலின மக்களின் குடிநீர் மேல்நிலைத் தொட்டியில் மனிதக் கழிவை கலந்த சம்பவத்தால் ஒட்டு மொத்த சமூகமும் தலை கவிழ்ந்து நிற்கிறது.

மனிதனை மனிதன் நேசிக்கும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தொன்மை நல் மரபுகளுக்கு எதிராக வெறுப்பு அரசியல் விதைக்கும் விபரீதம் நடந்து கொண்டிருக்கிறது. இயற்கை பேரிடராக வந்த மாண்டோஸ் புயலை எதிர் கொள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கை சாத்தியமானது.

சமூகத்தில் தொடர் கொந்தளிப்பை உருவாக்கி, பெரும் மனித உயிர் சேதாரங்களை ஏற்படுத்தி வரும் கேடு நிறைந்த சூழல் அழிந்து, அனைவரும் கூடி வாழும் நல்லிணக்க சூழலை உருவாக்க, ஜனநாயக இடதுசாரி, மதச்சார்பற்ற, மனித நேய சக்திகள் ஒருங்கிணைந்து பணியாற்றுவதில் வெற்றி பெறும் ஆண்டாக 2023 ஆம் ஆண்டை அமைத்துக் கொள்ள அனைவரும் ஒன்றுபடுவோம் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, அனைவருக்கும் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# தமிழ் மொழியை வஞ்சிக்கும் மோடி அரசு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

ஒன்றிய அரசின் பிரதமர் மோடியும், பாஜகவும் தமிழ்நாட்டின் அரசியல் ஆதாயம் தேட பல்வேறு சாகசங்களை மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்நாட்டுக்கு வந்தால் தமிழில் இரண்டொரு வார்த்தைகள் பேசுவது, மகாகவி பாரதியார் கவிதைகள், திருக்குறள் உள்ளிட்ட தலைசிறந்த படைப்புகளில் சிலவற்றை மேற்கோள் காட்டி பேசுவது, அண்மையில் காசியில் தமிழ் சங்கம விழா எடுத்தது என்ற பல நிகழ்ச்சிகளை நடத்தி, ஆரவார வாய்ச்சவடால் அடித்து வருகின்றனர் ஆனால் தமிழ் மொழியை அழித்தொழிக்கும் வஞ்சகச் செயலில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டின் அரசியல் அமைப்பு சட்டம் அங்கீகரிக்கபட்ட 22 மொழிகளை சமமாக அணுக வேண்டிய ஒன்றிய அரசு, தமிழ்மொழி உட்பட பல மாநில மொழிகளை புறக்கணித்து, சமஸ்கிருத மொழியை திணித்து, ஏற்குமாறு நிர்பந்தித்து வருகிறது.

குறிப்பாக தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஒதுக்கப்படும் நிதியை வெட்டி குறைத்து, சமஸ்கிருத மொழிக்கு அதீத நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தமிழ் மொழி வளர்ச்சி தொடர்பாக நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு ஒன்றிய அரசின் கல்வித் துறை இணையமைச்சர் அளித்த எழுத்து மூலமான பதிலில் சமஸ்கிருதத்துக்கு ரூ.199 கோடி ஒதுக்கியுள்ள நிலையில், தமிழ் மொழி வளர்ச்சிக்கு ரூ.12 கோடிக்கும் குறைவாக நிதி ஒதுக்கியிருக்கும் தகவலை தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு வளர்ச்சி, மக்கள் நலன் குறித்து நீலிக் கண்ணீர் வடித்து வரும் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை இது குறித்து வாய் திறந்து பேசுவாரா? எட்டுக் கோடிக்கும் அதிகமான மக்கள் பேசும் மொழியான தமிழுக்கு, தொன்மை சிறப்பும், இலக்கிய செறிவும் கொண்ட செம்மொழியாம் தமிழ் மொழியை அழித்தொழிக்கும் செயலை வாய் பொத்தி, கைகட்டி, முதுகை வளைத்து பணிந்து ஏற்பாரா? என தமிழக மக்கள் வினா எழுப்பி வருகின்றனர்.

தமிழ்மொழிக்கு வஞ்சகம் செய்யும், மோடியின் ஒன்றிய அரசை, அதிகாரத்தில் இருந்து நீக்குவது மட்டுமே தமிழ்மொழிக்கு பாதுகாப்பாக அமையும் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



# சங்கே முழங்கு!

## கள்ளக்குறிச்சி அருகே அதிகாரிகளின் அலட்சியத்தால் பட்டியலின அருந்ததியர்களின் சுடுகாடு பறிபோகும் அவலம்



கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் தாலுகா, வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட கச்சிராயபாளையம் கிராமத்தில், பட்டியல் இன அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு என பிணம் புதைக்க சுடுகாடு, சுடுகாட்டுக்கு பாதை இல்லாமல் இருந்தது. இதனால், விவசாய வயல் வழியாக பிணத்தை சுமந்து சென்று அடக்கம் செய்யும் அவல நிலை இருந்தது. பல ஆண்டுகளாக போராடியதன் விளைவாக கடந்த 1990ம் ஆண்டு வருவாய் துறையினர் நடவடிக்கையை மேற்கொண்டு சர்வே எண் 250–ல் கச்சிராபாளையத்தில் இருந்து கள்ளக்குறிச்சி செல்லும் சாலையில் இடது பக்கம் மயான பாதை அமைத்து, தென்கரையில் இறப்பவர்களின் சடலத்தை அடக்கம் செய்ய நிலம் ஒதுக்கி தந்துள்ளனர். அந்த இடத்தை 32 ஆண்டுகளாக அந்த மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் பக்கத்து நிலத்தை சேர்ந்த தனிநபர், அத்து கற்களை பிடுங்கி எறிந்து விட்டு, பயிர் செய்ய டிராக்டரை விட்டு நிலத்தை உழுதுள்ளார். மேலும் பொக்லைன் இயந்திரத்தின் மூலம் தகன மேடையை சேதப்படுத்தியும், அங்கே புதைக்கப்பட்டிருந்த சவக் குழி மேடுகளை அழித்தும் விட்டார். இதனால் பாதிக்கப்பட்ட அருந்ததியர்கள் கச்சராபாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும், சின்னசேலம் தாசில்தாரிடம் மனு கொடுத்தும் அலைகின்றனர்.

ஆக்கிரப்பு செய்துள்ள தனிநபர் பலம் மிக்கவர் என்பதால், அருந்ததியர்களை சாதியின் பெயரைச் சொல்லி இழிவாக திட்டியும், மிரட்டியும், தாக்கவும் முயற்சித்து வருகிறார். இப்பிரச்சினையில் அதிகாரிகள் அலட்சியம் காட்டி வருவதால் சாதி மோதல் உருவாகும் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதை தடுக்கவும், அருந்ததியர் மயானத்தை ஆக்கிரமித்து விவசாயம் செய்யும் தனி நபர் மீது சட்ட பூர்வ நடவடிக்கை எடுத்து, சுமுக தீர்வு ஏற்படுத்தி தரவும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன்குமார் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என பாதிக்கப்பட்ட பட்டியலின அருந்ததியர் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

செய்தி: கு.கபில்தேவ்

## இராமநாதபுரம் மாவட்ட ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க அமைப்பு கூட்டம்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் ராமநாதபுரம் மாவட்ட அமைப்பு கூட்டம், பரமக்குடியில் ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் என்.கே.ராஜன் தலைமையில் நடை பெற்றது.

பேரவையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளரும், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கதின் மாநில பொது செயலாளருமான மு.வீரபாண்டியன் தொடக்க உரையாற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் என்.எஸ்.பெருமாள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆர்.கருணாநிதி, கே.ஜீவா, எஸ்.முருகானந்தம், சிபிஐ பரமக்குடி நகர் செயலாளர் கே.ஆர்.சுப்பிரமணியன், இளைஞர் பெருமன்ற மாவட்ட அமைப்பாளர் பி.சண்முகராஜன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்டத் தலைவராக ஜி.பார்த்திபன், மாவட்ட செயலாளராக சி.ஆர்.செந்தில்வேல், பொருளாளர் நாகராஜன் மற்றும் 24 பேர் கொண்ட மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் ஏகமானதாக தேர்வு செய்யப்பட்டனர்.

# “பூ விரி புது நீர் காவிரியாறு” நூல் வெளியீட்டு விழா

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன் எழுதிய “பூவிரி புதுநீர் காவிரியாறு” என்னும் நூல் வெளியீட்டு விழா டிச. 26 அன்று தோழர் இரா.நல்லகண்ணுவின் 98வது அகவை தினத்தன்று, சென்னையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இரா.நல்லகண்ணு நூலை வெளியிட, திரைப்பட தயாரிப்பாளர் கலைப் புலி தானு பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கினார். திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினரும், முன்னாள் சபாநாயகர் முனு ஆதியின் மகனுமான தாம்பரம் ஆதிமாறன், டிஸ்கவரி புக் பேலஸ் உரிமையாளர் வேடியப்பன், பச்சை தமிழகம் யா.அருள், இந்திய கலாச்சார நட்புறவுக் கழகத்தின் தேசிய துணைத் தலைவர் எல்.அசோக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

இரா.நல்லகண்ணு பேசும்போது, கட்சியின் 98 ஆம் ஆண்டு அமைப்பு தினத்தில் இந்திய ஜனநாயகத்தின் இறையாண்மையை, அதனை உறுதிப்படுத்தி உள்ள இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாத்திட வேண்டும் என நாம் எல்லோரும் உறுதி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தியாவின் இயற்கை வளங்கள் அழிக்கப்படாமல் பாதுகாக்க வேண்டும், அதற்கு ஆதாரமான நதிகளை, நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும். நமது சங்க இலக்கியங்கள் முதற் கொண்டு அனைத்து இலக்கியங் களும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையையே வலியுறுத்துவதாக இருந்து வந்துள்ளது.

அந்த இயற்கை வளங்களை நதிநீர் நிலைகளை பாதுகாக்க வேண்டிய விழிப்புணர்வை உண்டாக்கிடும் “ஒரு வண்ணத்துப்பூச்சியின் மரண சாசனம்”, “பூவிரி புது நீர் காவிரியாறு” உள்ளிட்ட மகேந்திரனின் நூல்கள் காலத்தின் கட்டாயம் கருதி எழுதப்பட்டவையாக இருக்கிறது. அதனை அனைவரும் படித்து உணர வேண்டும் என பேசினார்.




ஏற்புரை வழங்கி நூலாசிரியர் சி. மகேந்திரன் பேசியதாவது: தோழர் இரா.நல்லகண்ணு நீர் நிலைகள் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்கள் மேம்பாடு குறித்து எங்களையெல்லாம் ஆற்றுப்படுத்தி இருக்கிறார். தாமிரபரணி நதி தீரத்து மணற் கொள்ளையை தடுக்க வேண்டி உயர் நீதிமன்றம் வரை சென்று தனி மனிதராக போராடி இருக்கிறார். அதுவே இயற்கை வள பாதுகாப்பு குறித்த கட்டுரைகளை புத்தகங்களை எழுத தூண்டுகோலாக இருந்தது.

அவ்வகையிலேயே “ஒரு வண்ணத்து ப்பூச்சியின் மரண சாசனம்” நூலை எழுதியிருந்தேன். இப்போது பொன்னி நதியின் பாதிப்பை உணர்த்தும் “பூ விரி புது நீர் காவிரியாறு” நூலை எழுதி உள்ளேன். அழிந்து வருகின்ற நீர்நிலை பற்றிய விழிப்புணர்வு ஏற் படுத்தப்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், ஆகவே இந்த நூல்களை எழுதி உள்ளேன்.

காவிரி ஆறு உற்பத்தியாகி 25 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இருக்கலாம். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளின் வரலாற்றை பற்றிய கண்ணோட்டத்தில் எப்படியெல்லாம் அந்த பொன்னியாறு மாற்றத்திற்கு உள்ளாகி இருக்கிறது என்பதை அறிய வேண்டியுள்ளது.

குடகு மலையில் இருந்து புறப்பட்டு வரும் அந்த நீரோட்ட போக்கு தடுப்பணைகளாக தடுக்கப்பட்டு விவசாய பயன்பாட்டுக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளது. கரிகால்வளவன் கல்லணையை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டி தந்துள்ளான். ஆனாலும் கடந்த காலங்களின் பயன்பாடுகளை விட வெள்ள பாதிப்பால், கடலில் கலந்து வீணாகிப் போன நீரின் அளவு கூடுதலாக இருக்கும்.

தமிழகத்தின் மண்வளத்தை பாதுகாத்து வரும் தாமிரபரணி, வைகை, பெண்ணை, பாலாறு உள்ளிட்ட ஆறுகளை பற்றியும், முன்னொரு காலத்தில் நன்னீராக இருந்த கூவம் ஆறு பற்றியும் நூல்களாக எழுத திட்டமிட்டு இருக்கிறேன் என பேசினார்.

## தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் விரிவடைந்த பேரவைக் கூட்டங்கள்

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் தேதி 7 மையங்களில் விரிவடைந்த பேரவைக் கூட்டங்கள் நடைபெற இருக்கிறது. இதில் பங்கேற்கும் தலைவர்கள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| வடக்கு மண்டலம் (1) | வட சென்னை, தென் சென்னை, மத்திய சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு |
| இடம் | ஏஐடியூசி அலுவலகம், சிந்தாதரிப் பேட்டை, காலை 10.00 மணி |
| பங்கேற்பு | இரா.முத்தரசன் சிபிஐ மாநில செயலாளர் |
| வடக்கு மண்டலம் (2) | விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், திருச்சி மாநகர், புறநகர், கடலூர். |
| இடம் | விழுப்புரம், |
| பங்கேற்பு | புதுவை அ.ராமமூர்த்தி தேசிய தலைவர், தலித் உரிமைகள் இயக்கம், க.மாரிமுத்து எம்.எல்.ஏ., நேரம்: காலை 10.00 மணி |
| வடக்கு மண்டலம் (3) | தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி, வேலூர், திருப்பத்தூர், நாமக்கல், கரூர், திருவண்ணாமலை |
| இடம் | சேலம், பங்கேற்பு: கே.சுப்பராயன் எம்.பி., நேரம்: மாலை 5.00 மணி |
| மத்திய மண்டலம் | திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், கும்பகோணம், புதுக்கோட்டை |
| இடம் | வேதாரண்யம், நேரம்: காலை 10.00 மணி |
| பங்கேற்பு | மு.வீரபாண்டியன், மாநில பொதுச் செயலாளர் |
| தென் மண்டலம் (1) | தேனி, மதுரை மாநகர், புறநகர், சிவகங்கை, ராமநாதபுரம், திண்டுக்கல் |
| இடம் | மதுரை மாநகர், நேரம்: காலை 10.00 மணி |
| பங்கேற்பு: | க.சந்தானம், சிபிஐ தேசியக்குழு உறுப்பினர் |
| தென் மண்டலம் (2) | நெல்லை, விருதுநகர், குமரி, தூத்துக்குடி, தென்காசி, |
| இடம் | விருதுநகர், காலை 10.00 மணி |
| பங்கேற்பு | பொ.லிங்கம் எக்ஸ்.எம்.பி., தேசிய துணைத் தலைவர் |
| மேற்கு மண்டலம் | கோவை, திருப்பூர், ஈரோடு வடக்கு, தெற்கு, நீலகிரி |
| இடம் | கோவை, காலை 10.00 மணி |
| பங்கேற்பு | ந.பெரியசாமி, சிபிஐ மாநில துணைச் செயலாளர், இரா. நல்லகண்ணு மு.வீரபாண்டியன், மாநில தலைவர் மாநில பொதுச் செயலர் |

வடக்குத்தோப்பு புளியக்குடியில்

# பகுதிநேர ரேஷன் கடை திறக்க வலியுறுத்தி

திருவோடு ஏந்தி தஞ்சை மாவட்ட ஆட்சியரிடம் மனு



தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், புளியக்குடி ஊராட்சியில், வடக்கு தோப்பு புளியக்குடியில் 300க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். தற்போதுள்ள அங்காடியில் ரேஷன் பொருட்கள் வாங்க 3 கிலோ மீட்டர் தூரம் ரயில்வே இருப்புப் பாதையை கடந்து நடந்து செல்ல வேண்டி உள்ளது. இருசக்கர வாகனத்தில் செல்ல வேண்டுமென்றால் 5 கிலோ மீட்டர் தூரம் சுற்றி செல்ல வேண்டியுள்ளது. வடக்கு தோப்பு புளியக்குடியில் பகுதி நேர அங்காடி அமைத்து தர வேண்டும் என கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக கோரிக்கை வைத்து வருகின்ற நிலையில் இன்று வரை மேற்படி கோரிக்கை நிறைவேற்றப்படாமல் உள்ளது. பொதுமக்கள் நலன் கருதி பகுதி நேர அங்காடி அமைத்து தர மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புளியக்குடி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பி.சுசீந்திரன் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனுவை வழங்கினார். இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.செந்தில்குமார், ஒன்றிய செயலாளர் எம்.வெங்கடேசன், ஒன்றியக்குழு உறுப்பினர் சி.மணிகண்டன் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் திருவோடு ஏந்தி, போராட்டம் நடத்தி மனு அளிக்கப்பட்டது.

# விஸ்வநாததாஸ் நினைவு நாள் கடைபிடிப்பு

சுதந்திரப் போராட்ட தியாகி விஸ்வநாததாஸின் 83வது நினைவு நாள், திருவாரூர் மருத்துவ சங்க கட்டிடத்தில் சங்கத் தலைவர் வி.மதிபழகன் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் மாவட்ட செயலர் ஆர்.முருகானந்தம், காந்தியன் அறகட்டளை தலைவர் சக்தி.செல்வகணபதி, முன்னிலை வகித்தார்கள். விஸ்வநாததாஸின் வீர வரலாற்றை தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற செயலர் வீ.தர்மதாஸ் விளக்கி பேசினார். சங்க நிர்வாகிகள் ஆர்.அண்ணாதுரை, சுதாகர், கார்த்தி, கே.ஆறுமுகம், முரளி முத்தமிழ் பண்பாட்டு பாசறை நிர்வாகி கமலவேந்தன் பேசினார்கள். சங்க துணை செயலாளர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

# உடலுழைப்பு தொழிலாளர் சங்கம் கொடியேற்று விழா

க.பல்லாவரம், சர்ச் ரோடு, ஆச்சாரிய துளசி சாலை சந்திப்பில் காஞ்சிபுரம் மாவட்ட ஏஐடியூசி உடலுழைப்பு தொழிலாளர் சங்கத்தின் க.பல்லாவரம் கிளையின் பெயர் பலகை திறப்பு விழாவும், கொடியேற்று விழாவும் நடைபெற்றது.

மேற்படி நிகழ்சசிக்கு சங்கத்தின் தலைவர், பொ. பாண்டியன் தலைமை தாங்கினார். கு.அழகப்பன், எஸ்.சிவநேசன், எஸ்.சந்தோஷ், பொ.அழகம்மாள், சேக் அப்துல்லா, க.ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சங்க கொடியை வி.ஆதிமூலம், மாநில செயலாளர் ஏஐடியூசி ஏற்றினார். ஏ.மூர்த்தி,மாவட்ட செயலாளர் ஏஐடியூசி பெயர் பலகையை திறந்து வைத்தார்.

ஜா.பூபாலன் மாவட்ட தலைவர், கா.மா. ஏஐடியூசி உ.உ தொ சங்கம், பா.கார்த்திக் ஏஐடியூசி மாவட்ட துணை தலைவர், பி.சிங்காரவேலு சங்க ஒருங்கிணைப்பாளர், கே.ரவி இணை ஒருங்கிணைப்பாளர், செல்வரா, பொழிச்சலூர் கட்டட தொழிலாளர் சங்கம், கே.முனுசாமி சிபிஐ ஆலந்தூர் தொகுதி குழுவின் முன்னாள் செயலாளர், எஸ்.வெங்கடேசன், சிபிஐ ஆலந்தூர் தொகுதி குழு செயலாளர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். எஸ்.சந்தோஷ் நன்றியுரையாற்றினார்.

# வீட்டுமனை பட்டா கேட்டு ஆர்ப்பாட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருநாவலூர் ஒன்றியம், திருநாவலூர் ஊராட்சியில் ஆதிதிராவிடர் மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கிட கோரி கிளை தலைவர் பாலையா தலைமையில் வருவாய் அலுவலகம் முன்பு, 100 பேர் ஊர்வலமாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒன்றிய பொருளாளர் கே.மணிகண்டன், வட்ட துணை தலைவர் ந.ஏழுமலை, சுமதி, விஜியா, மகேஷ்வரி, நீலா, ஒன்றியக்குழு உறுப்பினர் நாகப்பன், சுப்ராமணியன், தனபால், வட்டதலைவர் மீசை ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கோரிக்கை விளக்கி மாவட்ட செயலாளர் எம்.வெங்கடேசன் பேசினார். ஆறுமுகம் நன்றி கூறினார்.

# தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க போராட்டம் வெற்றி!


நிறுத்தப்பட்ட பேருந்து மீண்டும் இயக்கம்



திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம் ஞாயிறு கிராமம் முதல் சென்னை உயர்நீதிமன்ற வரை இயக்கப்பட்ட 57 ஜெ, பேருந்து சாலை சரியில்லை என்ற காரணத்தை கூறி கடந்த நான்கு மாத காலமாக நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்ட பேருந்தை உடனடியாக ஞாயிறு கிராமம் வரை இயக்க வேண்டும். ஞாயிறு முதல் கன்னியம்பாளையம் வரை உள்ள சாலையை சீரமைக்க வேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்து, தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் மாவட்ட செயலாளர் என். எஸ். பிரதாப் சந்திரன் தலைமையில் சாலை மறியல் போராட்டம் அறிவிக்கப்பட்டது.

நெடுஞ்சாலைத்துறை கோட்ட உதவி செயற்பொறியாளர்,மாநகரப் போக்குவரத்து துறை அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்படாததால் போராட்டம் உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் சோழவரம் காவல்துறை ஆய்வாளர் ஜெகநாதன் தலைமையில், மாநகரப் போக்குவரத்து கழக உதவி பொது மேலாளர், பாடியநல்லூர் கிளை மேலாளர், செங்குன்றம் ஏரியா மேலாளர் உள்ளிட்ட மாநகரப் போக்குவரத்து துறை உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, நிறுத்தப்பட்ட பேருந்து மீண்டும் வழக்கம்போல் இயக்கப்படும் என்ற உறுதியின் பெயரில் பேருந்து இயக்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ் மாநில விவசாய தொழில் சங்க திருவள்ளூர் மாவட்ட செயலாளர் என் .எஸ். பிரதாப் சந்திரன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட துணை செயலாளர் எஸ். தெய்வசிகாமணி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட துணைத் தலைவர் எஸ்.பி. சுரேஷ், சோழவரம் ஒன்றிய செயலாளர் எம். சபாபதி மோகன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஞாயிறு கிளை செயலாளர் என் தேவா, ஞாயிறு ஊராட்சி மன்ற தலைவர் ஜி.வி. எல்லையன், துணைத் தலைவர் கே. ஜனார்த்தனன் உள்ளிட்ட திரளான கிராம பொதுமக்கள் பங்கேற்று பேருந்தை வழி அனுப்பி வைத்தனர்.



ஜனவரி 8

## சின்னியம்பாளையம் தியாகிகள் தினம்!

தூக்குக் கயிறுகள்
குரல்வளை நெரிக்கும்
கொண்டக் கொள்கையை – எக்
கயிறு இறுக்கும்?

நால்வர் உயிர்கள்
நடுங்கியா மடிந்தது? – இல்லை
நாட்டை ஆண்ட – முதலாளி
நடுங்கிட மாண்டது!

சின்னியம்பாளையம் – தீரர்
சிலிர்ப்பின் உச்சம்
சிங்க ஏறுகள் – வெற்றி
சிறப்பின் அம்சம்!

உயிர்கள் மாளலாம்
உணர்வுகள் மாளுமா?
சின்னியம்பாளையம் – தியாகிகள்
சிறப்புகள் போகுமோ?

ராமையன், சின்னையன்
ரங்கன், வெங்கடாச்சலம்
வெற்றி முழக்கங்கள்
வீதியை நிறைக்கட்டும்!
விடியலை திறக்கட்டும்!

பாசிச கரங்களை
முறித்துத்தான் எறியவே
சின்னியம்பாளையம்
சிப்பாயாய் சேருவோம்!

சிங்க ஏறுகள்
செங்கொடி புதல்வர்கள்!
வீழ்ந்தனர் விதையாய்!!
வீர வணக்கங்கள்!!!

– என்.எஸ்.பிரதாப் சந்திரன்

# புண்ணீஸ்வரன் முதலாம் ஆண்டு நினைவுநாள்

ஏஐடியூசி சுமை தூக்கும் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய என்.புண்ணீஸ்வரன் முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி தஞ்சாவூர் மாவட்ட ஏஐடியூசி அலுவலகத்தில் மாவட்ட பொருளாளர் எஸ்.தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது.

வங்கி ஊழியர் சங்க மாவட்ட செயலாளர், க.அன்பழகன், வருவாய் துறை ஓய்வு பெற்றோர் சங்க தலைவர் ந.பாலசுப்பிரமணியன், மூத்த தலைவர் ஜி.கிருஷ்ணன், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன், உடலுழைப்பு சங்க மாவட்ட துணை தலைவர் க.கல்யாணி, பொருளாளர் பி.சுதா, நுகர்பொருள் சங்க நிர்வாகிகள் எஸ். செல்வம், பி.மாரியப்பன், வெ.சந்தான கிருஷ்ணன், துரை.நாடியப்பன், கட்டுமான சங்க தலைவர் பி.செல்வராஜ், குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

என்.புண்ணீஸ்வரன் முதலாமாண்டு நினைவு நாள் நிகழ்ச்சி மன்னார்குடி,திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் நடைபெற்றது.

# பெரம்பலூர் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் தேசிய விவசாயிகள் தினம் கொண்டாட்டம்

பெரம்பலூர் மாவட்டம் தந்தை ரோவர் வேளாண்மை கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்கள் எம்.எஸ். மணி பாரதி, மோனிஷ் குமார் ஆகியோர்கள் தலைமையில் 10 மாணவர்கள் திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், மதுராபுரி கிராமத்தில் விவசாயப் பணிகள் நடைபெறும் பகுதிகளில் ஊரக வேளாண் பணி அனுபவப் பயிற்சியை மேற்கொள்வதற்காக "ஊரக வேளாண் பணி சிறப்பு முகாம் துவக்க விழா " நிகழ்ச்சி தேசிய விவசாயிகள் தினத்தில் மதுராபுரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி அருகில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் துறையூர் வட்ட வேளாண்மை உதவி இயக்குனர் . மு.ரவி, வேளாண் அலுவலர் சி. கமல், வேளாண் உதவி அலுவலர் மனோகரன், தோட்டக்கலை அலுவலர் து.ராஜேந்திரன் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் தந்தைரோவர் வேளாண்மை கல்லூரி பேராசிரியர்கள் சதுரகிரி, ராம்தாஸ், மதுராபுரி ஊராட்சி மன்ற தலைவர் திருமதி தனலட்சுமி, மற்றும் விவசாய முன்னோடிகள், ஊர் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு வாழ்த்தி உரையாற்றினர். விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் மாணவர் மா.சிசாந்த் வரவேற்றும் கலந்து கொண்ட அனைவருக்கும் மாணவர் மோ. மணிவேல் முகிலன் நன்றி கூறியும் பேசினர். "தேசிய விவசாயிகள் தினம் 2022"இதனை போற்றி கொண்டாடுகிற வகையில் ஊரின் மையப் பகுதியில் 60 மரக்கன்றுகள் நடப்பட்டும் கலந்து கொண்ட விவசாய பெருமக்கள் அனைவருக்கும் மரக்கன்றுகளும் இனிப்புகளும் வழங்கி கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை கல்லூரி மாணவர்கள் கிஷோர் முத்து, மௌனி, கிருஷ்ண குமார், கவி முருகன், நிலவினியன், விஜய் ஆகியோர் செய்திருந்தனர்.

# பால் கொள்முதல் விலையை உயர்த்த கோரி ஜன.25ல் சட்டசபை முன்பு பால் ஊற்றும் போராட்டம்

**புதுச்சேரி பால் உற்பத்தியாளர்கள் சங்கம் தீர்மானம்**



புதுச்சேரி பால் உற்பத்தியாளர் சங்க மாநில குழு கூட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சங்கத்தின் சிறப்பு தலைவர் து. கீதநாதன் தலைமையில் நடைபெற்றது.

புதுச்சேரி பால் உற்பத்தியாளர் சங்க பொதுச்செயலாளர் அ.பெருமாள் நடைபெற்ற வேலைகள் குறித்து விளக்க உரையாற்றினார்.

விவாதத்தில் பலர் பங்கு கொண்டு சங்க செயல்பாடுகள் பற்றி பேசினர். கூட்டத்தில் புதுச்சேரி விவசாய சங்க பொதுச் செயலாளர் டி.பி.ரவி சங்க எதிர்கால நடவடிக்கைகள் குறித்து பேசினார்.

புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் பால் ஊற்றும் உறுப்பினர்களுக்கு விலை இல்லா கறவை பசுவும், விலையில்லா கால்நடை தீவனமும் வழங்குவதன் மூலமாக பால் உற்பத்தியை பெருக்க முடியும். மேலும் பால் கொள்முதல் விலையை ரூ.45 ஆக உயர்த்த வேண்டும்.

கூட்டுறவு சங்கத்தில் பால் ஊற்றும் உறுப்பினர்களுக்கு ஊக்கத்தொகையாக லிட்டர் ஒன்றுக்கு ரூ.5 வழங்க வேண்டும். கால்நடை மருத்துவமனைகளில் டாக்டர் பற்றாக்குறையை போக்க வேண்டும். கால்நடை மருத்துவமனைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டை போக்க வேண்டும். அரசு புறம்போக்கு கோவில் நிலம் உள்ளிட்ட தரிசு நிலங்களில் பசும்புல்தீவனம் வளர்த்து கூட்டுறவு சங்கங்களில் பால் ஊற்றும் உறுப்பினர்களுக்கு 75 சதவீதம் மானியத்தில் வழங்க வேண்டும். கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்த வேண்டும். கூட்டுறவு சங்கங்களில் தொடர்ந்து பால் ஊற்றும் உறுப்பினர்களை சங்க உறுப்பினர்களாக பதிவு செய்யாமல் இருக்கின்ற செயலாளர்களை பணி நீக்கம் செய்ய வேண்டும். கால்நடைத்துறை மூலம் அனைத்து கறவை பசுக்களுக்கும் இலவச இன்சூரன்ஸ் செய்து கொடுக்க வேண்டும்.

பால் கொள்முதல் விலை உயர்த்த கோரியும் பான்லேவில் நடைபெறும் நிர்வாக சீர்கேட்டைக் கண்டித்தும் ஜனவரி 25 அன்று சட்டமன்றம் முன்பு பால் ஊற்றும் போராட்டம் நடத்தப்படும். பால் உற்பத்தியாளர் சங்க மாநில மாநாட்டை மார்ச் 18 வில்லியனூரில் நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தரங்கம்பாடி டேனிஷ் கோட்டையை பாதுகாக்க வேண்டும்

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் கி.பி.1620 ஆம் ஆண்டு டென்மார்க் படைதளபதி ஓவ்கிட் என்பவரால் கடற்கரையில் உலகப் புகழ்பெற்ற டேனிஷ் கோட்டை கட்டப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் 1978ம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வு துறையின் கட்டுபாட்டுக்கு மாறியது. 2002ல் டென்மார்க் அரசு ஒத்துழைப்புடன் டென்மார்க் நாட்டில் உள்ள தரங்கம்பாடி நல சங்கம் தமிழக அரசின் தொல்லியல் துறையுடன் இனைந்து டேனிஷ் கோட்டை புதுப்பிக்கப்பட்டது. 2011ம் ஆண்டு தமிழக அரசால் பழமை மாறாமல் 2வது முறையாக புதுப்பிக்கப்பட்டது.

கோட்டையின் உள்ளே அருங்காட்சியகமும் உள்ளது. டேனிஷ் காலத்தில் கோட்டைக்குள் கடல் நீர் புகாத வண்ணம் செங்கல் சுண்ணாம்பால் தடுப்பு சுவர்களை எழுப்பி இருந்தனர். அந்த சுவர் பேரிடர் காலங்களில் கடல் அரிப்பால் அடித்து செல்லப்பட்டும் மண்ணிலும் புதைந்து போனது. இந்நிலையில் மாண்டஸ் புயல் கடல் சீற்றம் காரணமாக கோட்டை அருகே கடல் அரிப்பு ஏற்பட்டு வருகிறது. மண்ணில் புதைந்திருந்த சுண்ணாம்பால் ஆன தடுப்பு சுவர் தற்போது வெளியில் தெரிய ஆரம்பித்துள்ளது. கடலில் இறங்கி குளிக்க வேண்டாம் என்று வைக்கபட்டிருந்த எச்சரிக்கை பலகை சேதமடைந்துள்ளது.

கடந்த ஆண்டுகளில் பேரிடர் காலத்தில் கடல் அரிப்பால் கோட்டை பிரதான மதில் சுவரை சுற்றி அமைக்கப்பட்டிருந்த முள்வேலி தடுப்புசுவர் இடிந்து விழுந்தது. இந்நிலையில் தற்போது கோட்டையின் பிரதான சுற்றுசுவர் பகுதியில் தொடாந்து மண் அரிப்பு ஏற்பட்டுள்ளதால் கடல் அலைகள் கோட்டையின் பிரதான மதிற்சுவரை நெருங்கியுள்ளது. உடனடியாக கோட்டையை பாதுகாக்க கருங்கற்கலால் ஆன அலைதடுப்பு சுவர் அமைத்து புகழ்வாய்ந்த டேனிஸ் கோட்டை சேதமடையாமல் தடுக்க வேண்டும் என்று பொதுமக்களும் சுற்றுலா பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மெட்ரோ ரயில் திட்டத்தை காரணம் காட்டி மேம்பாலப் பணிகளை கைவிடக் கூடாது

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு கூட்டம் கோவை ஜீவா இல்லத்தில் எஸ். மோகன் தலைமையில் நடைபெற்றது.

மாநில பொருளாளர் எம். ஆறுமுகம் முன்னாள் எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் மெட்ரோ ரயில் திட்டத்தை காரணம் காட்டி மேம்பால பணிகளை கைவிடக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேசிய நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் சிங்காநல்லூர், சரவணம்பட்டி, கணபதி, துடியலூர், சாய்பாபா கோவில் பகுதிகளில் சாலை மேம்பாலங்கள் கட்டுவதற்கு ஏற்கனவே திட்டமிட்டு அறிவிக்கப்பட்டுள்ளபடி அதற்கான பணிகளை தமிழ்நாடு அரசு உடனடியாகத் துவக்க வேண்டும்.

கோவையில் திருச்சி சாலை, சத்தி சாலை, மேட்டுப்பாளையம் சாலைகளில் நிலவுகிற போக்குவரத்து நெரிசலை கவனத்திற்கொண்டு, அதை தவிர்ப்பதற்கான முறையில் தேவையான இடங்களில் பாலங்கள் கட்டப்பட வேண்டிய அவசியமாகிறது.

மேலும், மெட்ரோ ரயில் திட்டம் அமைத்து செயல்படுவதற்கு ஆகக்கூடிய காலத்தைத் தமிழ்நாடு அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே அதுவரை சாலை மேம்பாலப் பணிகளை நிறுத்தி வைப்பது என்பது மிகப்பெரும் இடையூறாக அமையும்.

எனவே, எக்காரணம் கொண்டும் மேம்பால பணிகளை நிறுத்தக்கூடாது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட நிர்வாகக்குழு தமிழ்நாடு அரசை கேட்டுக்கொள்கிறது. எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# சேலம் பனைமரத்துப்பட்டி சரஸ்வதி கண்ணுபையன் ஏ.தங்கவேல் ஆகியோருக்கு அஞ்சலி

சேலம் மாவட்டம், பனைமரத்துப்பட்டிவீரபாண்டி ஒன்றியம், காட்டுர் கிராமத்தைச் சேர்ந்த மூத்த கட்சி உறுப்பினரும், கட்சியின் முன்னாள் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினருமான கே.கே.கணேசன் மற்றும் கே.கே.தங்கவேல் ஆகியோரின் தாயார் சரஸ்வதி கண்ணுபையன் (வயது 92) 14–12–2022ஆம் தேதியும், நீண்டகால கட்சி உறுப்பினர் ஏ.தங்கவேல் (வயது 77) 13–12–2022ஆம் தேதியும் காலமானார்கள். இவர்கள் இருவருக்கும் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் சிறப்புத் தலைவர் ந.நஞ்சப்பன், கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.மோகன், மாவட்ட துணைச்செயலாளர்கள் எம்.ராமன், ஏ.கந்தன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் டி.வி.கருணைதாஸ், ப.பரமசிவம், சங்கீதா பாலதண்டாயுதம், எஸ்.பாலன், எஸ்.தனக்கோட்டி, எம்.பாலன், பா.தினேஷ், மாவட்டக்குழு உறுப்பினர்கள் என்.கே.செல்வராஜ், எம்.கந்தசாமி உட்பட ஏராளமான கட்சி உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.

# அடிப்படை வசதிகளை நிறைவேற்றக் கோரி ஆர்ப்பாட்டம்

இந்தியக்கம்யூனிஸ்ட்கட்சியின் தொப்பம்பட்டி ஒன்றிய சார்பில் மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி கீரனூர் நால்ரோடு பகுதியில் தொப்பம்பட்டி ஒன்றிய செயலாளர் இரா.சிவராஜ் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏ.வெள்ளைச்சாமி, என்.சின்னச்சாமி, ஏ. கவுசல்யா, ஆர்.ஜெகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன் கண்டன உரையாற்றினார். பட்டா வேண்டி தாசில்தார் அலுவலகம் சென்று மனுக்கள் கொடுக்கப்பட்டன.

# விளை நிலங்களை அழிக்கும் ரியல் எஸ்டேட் நிறுவனங்களை கண்டித்து ஆர்ப்பாட்டம்

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், கல்லாங்காடுவலசு பகுதியில் விளை நிலங்களை அழிக்கும் ரியல் எஸ்டேட் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கிய பஞ்சாயத்து நிர்வாகத்தையும், ஊரக வளர்ச்சித் துறை நிர்வாகத்தையும், வருவாய் துறை அதிகாரிகளையும் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வடக்கு ஒன்றிய செயலாளர் பி.அர்த்தனாரி தலைமை தாங்கினார். ஒன்றிய துணைச் செயலாளர் சி.எஸ். சுப்பிரமணி முன்னிலை வகித்தார். மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் கண்டன உரையாற்றினார். சிபிஐ மாவட்ட செயலாளர் கே.அன்புமணி உள்ளிட்ட கட்சியின் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

# சாலை அமைக்க அதிகாரிகள் உறுதி: போராட்டம் ஒத்திவைப்பு

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், நல்லூர் ஊராட்சியில் சாலைகள் சரியில்லாததால் சாலையில் நாற்று நடும் போராட்டம் நடத்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திட்டமிட்டது. இது குறித்து சோழவரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில், சாலை அமைக்க திட்ட மதிப்பீடு உடனே தயார் செய்யப்பட்டு விரைவில் அமைத்து தரப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர். இதனால் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

# பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கம் ஆர்ப்பாட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்டம் முழுவதும் பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கம் சார்பில் சாதி சான்றிதழ் வழங்குதல், இருளர்கள் மீது போடப்பட்ட பொய் வழக்குகளை ரத்து செய், புதுச்சேரி மாநிலத்தில் 5.5 லட்சம் ரூபாய் மதிப்பில் வீடு கட்டிகொடுப்பதுபோல் தமிழ்நாடு அரசு காட்டிக்கொடுக்க வேண்டும், வீட்டுமனை பட்டா வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு பூபதி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் எம்.வெங்கடேசன், விசிக துணை செயலாளர் அறிவுக்கரசு, நகரச் செயலாளர் வசந்தம், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் முகமது அலி, ஒன்றியச் செயலாளர் லெனின், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க வட்டச் செயலாளர் கே.மீசைஆறுமுகம் உள்ளிட்ட நிர்வாகிகள் பேசினர்.

# மின்சார வசதி, குடிநீர் வசதி கேட்டு போராட்டம்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் எலச்சிபாளையம் மல்லை ஒன்றிய குழு சார்பில், எலச்சிபாளையம் ஊராட்சி அலுவலகம் முன்பு பெரிய மணலி ஊராட்சி பண்ணாரி அம்மன் நகர் பகுதியில் மின்சார வசதி, குடிநீர் வசதி, சிமெண்ட் சாலை வசதி, சுகாதார மேம்பாடு, அரசு மருத்துவமனை 24 மணி நேரமும் செயல்பட வேண்டி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றிய பொறுப்பு செயலாளர் கே.சிவகுமார் தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே.அன்புமணி கோரிக்கைகளை விளக்கி பேசினார். மாவட்ட குழு உறுப்பினர்கள் நல்லமுத்து, எம்.செங்கோட்டுவேல் கலந்து கொண்டனர். ஒன்றிய குழு உறுப்பினர்கள் என்.வெங்கடேஷ், சரவணன் டி.ஜெயராமன்,மகேஸ்வரி அமுதா, நாகரத்தினம், பாக்கியம், சாரதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 102. ஆவதும் போவதும்

**ஆவதும் போவதும் அவன் செயல் ஆஅய்ந்தால்**
**தூயதாற்றல் சொந்த செயல்**

நன்மையும் தீமையும் கடவுள் செயல் என்ற கூற்றை ஆய்ந்தால், அது கடவுள் செயல் அல்ல. நல்ல செயலை செய்வது மனிதனின் சொந்த செயலாகும்.

**அல்லாதகாலத்துநல்லாரும்பொல்லாராம்**
**கல்லார் கடைதேரார் கண்டு.**

தீமை நேரும் காலத்தில் நல்லவர்களும் கெட்டவர்களாக மாறும் சூழ்நிலை தோன்றும். இதனை நன்கு கண்டு அறிய வேண்டும். இதனை அறியாதவர்கள் மீளுதல் இயலாது.

# நூல் நயம்

## தமிழ்ச் செவ்விலக்கியங்கள் அவை தோன்றிய சூழலும் சமஸ்கிருதத்தில் அவற்றின் சாயலும்




தமிழ் செவ்விலக்கியங்கள் அவை தோன்றிய சூழலும், சமஸ்கிருதத்தில் அவற்றின் சாயலும் என்னும்இந்நூலில் ஒருமொழியின்இலக்கியத்தின் மூலத்தை தேடுதல், அந்த இலக்கியத்தின் தன்மையைப் பற்றிய ஆராய்ச்சியில் ஒரு கூறு. தமிழில் சங்க இலக்கியம் நமக்கு கிடைத்துள்ள மூல இலக்கியம். அதன் மொழி, அதன் சமகாலத்தை சேர்ந்த பிரமி அல்லது தமிழிக் கல்வெட்டுக்களின் மொழியிலிருந்து மிகவும் வேறுபட்டது. சங்க இலக்கியத்தின் பண்பட்ட, குறிப்பு பொருள் நிறைந்த அழகியல், சிறந்த மொழி நடை எப்படி உருவாகிறது என்னும் கேள்வி, இன்னும் விடை தெரியாத கேள்வியாகும்.

சங்க இலக்கிய மொழி வெளிப்படுத்தும் இலக்கியத் தன்மைகளைப் பற்றியும், அந்த இலக்கியம் சார்ந்த பண்பாட்டின் வாழ்வு முறைகள். தமிழ் இலக்கியம், பிராக்கிரத, சமஸ்கிருத இலக்கியங்கள் இந்திய துணைக்கண்டத்தில் வளர்ந்தது. இலக்கியங்களிடையே ஒத்த தன்மைகள் இருப்பது எதிர்பார்க்கக் கூடியதே. ஒத்த தன்மைகள் அவற்றின் தொடர்பு பற்றிய கேள்விகள் எழுப்புகின்றன. மொழிகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. ஒன்றின் வளத்திற்கு மற்றொன்று துணை புரியவை என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.


நூலாசிரியர் சமஸ்கிருத இலக்கியங்கள் தென்னிந்திய மரபின் தாக்கத்தை பெற்றிருக்க வேண்டும் என்னும் ஐயப்பாட்டை தனது ஆழ்ந்த அறிவின் வழி பெற்றிருந்தார். பிற்காலத்தில் இந்தோ, ஆரியம் , சமஸ்கிருதம் என்னும் தனது வரம்பைக் கடந்த அவரது கருத்துக்கள் மிகவும் மதிப்பு மிக்கவனாய் அமைந்தன.

“நெல்லும் உயிர் அன்றே, நீரும் உயிர் அன்றே மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்.” தமிழ் சமூக அமைப்பில் மன்னன் பெறும் இடம், வட இந்திய மன்னனது இடத்திலிருந்து முரண்பட்டு அமைகிறது. மன்னனது உயிரானாலும், நெல்லின் உயிரானாலும் இரண்டும் உயிரே என்பது தமிழர் மரபு. ஆனால் வட மரபில் அவ்வாறு இல்லை. அங்கு புனித ஆற்றல் பெரும்பாலும் பிராமணர்களின் பாதுகாப்பில் அமைகிறது. தமிழ் சமூகத்தில் மன்னருக்கு உள்ள இடமும், வட இந்தியாவில் மன்னருக்கு இருந்த இடமும் வெவ்வேறாக உள்ளன. இவ்வாறு தான் மொழியின் தன்மைகளும் உள்ளன. தமிழ் இலக்கியத்தின் வளமையை அறிந்து கொள்ள இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

நூலாசிரியர் : ஜார்ஜ் எல். ஹார்ட் / தமிழில்: பு. கமலக்கண்ணன்
பக்கம் : 368 விலை :460
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50

## ஆணவக் கொலைக்களம்




சமூகத்தில் கொலைகள் பணத்திற்காகவும், பொருளுக்காகவும், நிலத்திற்காகவும் நடைபெறுவதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், ஆணவத்தால் ஒரு கொலை நடக்குமா என்று நாம் சந்தேகிக்கலாம். சமூகத்தில் ஆணவ படுகொலைகள் தொடர்ச்சியாகவும், அடர்த்தியாகவும் நடைபெற்று கொண்டு இருக்கிறது.

ஆணவ கொலை சம்பவத்தில் கொலை என்ற நிகழ்வு கௌரவத்தை காப்பாற்றிக் கொள்ளும் கடைசி வாய்ப்பாக இருக்கிறது. கொலை நிறைவேறுவதற்கு முன்னால் சம்பந்தப்பட்ட இணையரும் , அவர்களின் குடும்பத்தினரும் பல்வேறு வன்கொடுமைகளுக்கு உட்படுத்தப்படுகிறனர். அவை பெரும்பாலும் சட்டத்தின் பார்வைக்கு வருவதில்லை. இதனால் துணிச்சல் கொண்ட கொலைகாரர்கள் மேலும், மேலும் வன்கொடுமைகளை செய்வதற்கும். படுகொலைகள் செய்வதற்கும் தயங்குவதில்லை.

கட்டாய திருமணங்களை ஏற்க மறுக்கும் பெண்கள், தற்கொலைக்கு தள்ளப்படுகிறார்கள். குடும்ப ஆண்களின் தலையீட்டை மறுத்து தானே மணமகனை தேடிக் கொண்டால் அவர்கள் குடும்ப கட்டுப்பாட்டையும், கௌரவத்தையும் மீறியதாக கருதி அத்தகைய காதல் திருமணங்கள் தடை செய்யப்படுகின்றன. மீறுபவர்கள் மீது ஆணவ குற்றங்கள் பாய்கிறது. காதல் திருமணங்கள் நடந்து விடக்கூடாது என்பதற்காகவே. ராஜஸ்தான், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பிஹார் போன்ற வட மாநிலங்களில் 8, 10, 12 வயதுக்குள்ளாகவே குழந்தை திருமணங்கள் நடைபெறுகின்றது. இந்தியா ஒரு சாதிய கட்டமைப்பு உள்ள நாடாக இருக்கிறது. இதில் ஒரு சாதியை சேர்ந்த குடும்ப உறுப்பினர், மற்றொரு சாதியை சேர்ந்த குடும்பத்தோடு திருமணம் செய்வதை ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக இவ்வாறு திருமணம் செய்பவர்கள் ஆணவக் கொலைக்கு ஆளாகிறார்கள். இவற்றை தடுப்பதற்கு உரிய சட்டத்தை இயற்ற இந்திய அரசு முன்வரவில்லை. இந்த ஆணவப் படுகொலைகள் 21ம் நூற்றாண்டின் அவல நிலை அல்லவா? இவற்றை போக்க வேண்டியது ஒவ்வொரு இந்திய குடிமகனின் கடமை அல்லவா? இதைத்தான் இந்த நூல் வலியுறுத்துகிறது.

வழக்கறிஞர் கீ. சு.குமார் எழுதிய ஆணவக் கொலைக் களம் என்கிற இந்த நூல். இந்திய சமூகத்தை சீர்படுத்தும் முயற்சியின் ஒரு தொடக்கமாகும். இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

–சமரன்

நூலாசிரியர் : கீ.சு. குமார்
பக்கம் : 80 நன்கொடை: 90
வெளியீடு : தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், 15 , செவாலியே சிவாஜி கணேசன் சாலை, தியாகராய நகர், சென்னை 17

சுழலும் உலகம்

### கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் 22வது சர்வதேச கூட்டம்:

# உக்ரைன் நிலவரம் குறித்து ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு

**கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் 22 வது சர்வதேச கூட்டம் கியூபா நாட்டின் தலைநகரான ஹவானாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ரஷ்ய கூட்டமைப்பு கம்யூனிஸ்ட் கட்சியின் (CPRF) பிரதி நிதி பங்கேற்றுப் பேசியதன் சுருக்கம் பின்வருமாறு:**

அன்பார்ந்த தோழர்களே,

முதலில், இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் உங்கள் அனைவருக்கும் ரஷ்ய கூட்டமைப்பு கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவினுடைய சகோதர வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கும் கியூப கம்யூனிஸ்ட் கட்சிக்கு ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உக்ரைனில் நடைபெற்று வரும் சம்பவங்கள் குறித்து முழுமையான தகவலைப் பங்கேற்பாளர்களுக்கு வழங்கிடவும், அது குறித்து அவர்கள் சீரான மதிப்பீட்டை மேற்கொள்ளவும் கூடுதல் நேரம் ஒதுக்குமாறு ரஷ்ய கூட்டமைப்பு கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது. உக்ரைனில் நடைபெற்று வரும் சிறப்பு இராணுவ நடவடிக்கையை (Special Military Action) ரஷ்ய கூட்டமைப்பு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிப்பதற்கான காரணங்களை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

முன்னெப்போதும் இல்லாத ஓர் உலக நெருக்கடி 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தைக் குறித்துக் கொண்டது. சில காலம் கழித்து, சர்வதேச மற்றும் உள்நாட்டு போக்குகளின் வர்க்கத் தன்மை, முன்பிருந்ததைக் காட்டிலும் அதனைத் தானே ஆற்றல்வாய்ந்ததாக, கவனத்திற்குரியதாக மாற்றிக்கொண்டே இருந்தது. இந்தப் பின்னணியில், சமூகப் பிளவுகள் வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருந்தன.

உலக நிதி மூலதனத்தின் கோரப் பசி உலகின் பல்வேறு பகுதிகளில் உள்நாட்டு மோதல்களைத் தூண்டுகிறது. தனது குறிக்கோளை அடைந்திட மூலதனமானது, இராணுவத்தையும், தொழில்நுட்பத்தையும், பயங்கரவாதிகளையும், நவீன பாசிஸ்டுகளையும் பயன்படுத்துகிறது. இந்தப் போக்கு அதிகரித்து வருகிறது. இப்போது நாம், புவிசார் அரசியல் பேரழிவுகளைக் கண்ணுற்று வரும் சமகால சாட்சிகளாவோம்.

உலகில் அமெரிக்க ஏகாதிபத்தியம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை யூகோஸ்லாவியா, ஈராக், லிபியா, சிரியா நாடுகளின் அனுபவங்களும், இதர நாடுகளைச் சூழ்ந்துள்ள கண்ணுக்குப் புலப்படாத அச்சுறுத்தல்கள் ஆகியவை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன.

சுதந்திரமான அயல்நாட்டு கொள்கையைப் பின்பற்றும் நாடுகளின் மீதும், அமெரிக்காவின் உத்தரவுக்கு அடிபணியாத நாடுகளின் மீதும் பயங்கரவாதத்தை வளர்க்கும் நாடுகள் என்று முத்திரை குத்தப்படுகிறது. கியூபா மற்றும் வெனிசூலா ஆகிய நாடுகள் மீது இவ்வாறு முத்திரை குத்தப்பட்டது.

உக்ரைனில் உள்ள முதலாளித்துவ சக்திகள், பிளவுபட்டு மோதிக்கொண்டிருக்கும் செல்வாக்குமிக்க பல்வேறு தேசிய இன குழுக்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட சூழல் ஆகியவற்றை அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள ஏகாதிபத்திய முகமைகள் பயன்படுத்திக் கொண்டு டான்பாஸ் பிராந்தியத்தில் ஒரு போரை நடத்தி வருகிறார்கள். டான்பாஸ் பிராந்திய மக்கள் கொல்லப்படுகிறார்கள். அங்கே போரைத் தூண்டிவிட பாசிசம் பயன்படுத்தப்படுகிறது.

புதியதொரு பனிப்போரின் தொடக்கம், ரஷ்யாவுடனான வெளிப்படையான மோதல் போக்கு, உக்ரைனுக்கு ஆதரவாக நின்று ரஷ்யாவுக்கு எதிராக செயல்படுவது ஆகியவை குறித்து மேற்குலக தலைவர்கள் வெளிப்படையாகப் பேசுகிறார்கள். ரஷ்யாவை இராணுவ மோதலுக்குள் சிக்க வைத்து, பலவீனப்படுத்தி, முடிவில் அடிமைப்படுத்துவது மற்றொரு பணி ஆகும்.

பொருளாதார தடைகள், இராணுவ அச்சுறுத்தல்கள் என்று பலமுனைகளில் இருந்தும் தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன. இதில், தகவல் தொழில்நுட்ப மற்றும் தத்துவார்த்த தாக்குதல் முக்கிய பங்காற்றுகின்றன.

உக்ரைன் பிரச்சனை குறித்து சொல்வதென்றால், ரஷ்யா மேற்கொண்டிருக்கும் சிறப்பு இராணுவ நடவடிக்கையை ரஷ்ய கூட்டமைப்பு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கும் நிலைப்பாடு குறித்து கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளிடையே துரதிர்ஷ்டவசமாகப் பலவிதமான கருத்துகள் நிலவுகின்றன. ரஷ்ய அரசாங்கத்திற்கு ஆதரவாக, அதாவது, ஏகாதிபத்திய




ஆதரவு நிலைப்பாட்டை மேற்கொள்வதாக ரஷ்ய கூட்டமைப்பு கம்யூனிஸ்ட் கட்சியின் மீது பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

உக்ரைன் போர் – ரஷ்ய முதலாளிகளின் நலன்களுக்காக நடைபெறும் ஏகாதிபத்திய போர் என்றும், சிறப்பு இராணுவ நடவடிக்கையை ஆதரிப்பதன் மூலம் ரஷ்ய கூட்டமைப்பு கம்யூனிஸ்ட் கட்சி அதிபர் புடின் மற்றும் ரஷ்ய ஆளும் கட்சியை ஆதரிக்கிறது என்ற கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களின் நிலைப்பாட்டிற்கு சில கட்சிகள் ஆதரவு தெரிவிக்கின்றன. இந்த அணுகுமுறையை நாங்கள் திட்டவட்டமாக மறுக்கிறோம்.

உக்ரைன் அரசாங்கத்திற்கு எதிரான டான்பாஸ் பிராந்திய மக்களின் போராட்டத்தில், நாங்கள் ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் தன்மையைக் காண்கிறோம். அடிப்படையில், அந்தப் போராட்டம், பாசிச ஆட்சியில் இருந்து விடுதலை பெறுவதற்கான ஒரு போர் ஆகும். ரஷ்ய கூட்டமைப்பு கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், தேசப் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்கும் அந்நிய அச்சுறுத்தலுக்கு எதிரான, பாசிசத்திற்கு எதிரான போராட்டம் ஆகும்.

வேறு எவ்வழியிலும் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு சாத்தியப்பாடுகள் இல்லை என்பதால், ரஷ்ய கூட்டமைப்பின் அரசியலமைப்புக்கு இணங்க, சட்டப்படியான நடவடிக்கையை ரஷ்ய அதிபர் மேற்கொள்கிறார். தேசப் பாதுகாப்பை உறுதிப்படுத்திட, வேறு வழியின்றி, ரஷ்யா இராணுவத் தாக்குதலில் ஈடுபடுகிறது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவுடன் இயங்கும் உக்ரைன், மின்ஸ்க் ஒப்பந்தத்தின் அடிப்படையிலான பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகளைத் திட்டமிட்டு அழித்து வருகிறது.

மக்கள் நலன் புறக்கணிக்கப்படுவதையும், ரஷ்ய ஆளும் கட்சியின் கொள்கைகளையும் நாங்கள் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம்.

டோனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மக்கள் குடியரசுகளை ரஷ்யா அங்கீகரிக்க வேண்டும் என்று ரஷ்ய கூட்டமைப்பு கம்யூனிஸ்ட் கட்சி 2014 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ரஷ்யாவில் உள்ள வேறு எந்தவொரு அரசியல் கட்சியும் டான்பாஸ் பிராந்திய மக்களை இந்த அளவிற்கு ஆதரித்தது இல்லை.

ரஷ்ய அதிபர் மற்றும் ஆளும் கட்சியை ரஷ்ய கூட்டமைப்பு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது என்பதில்லை. மாறாக, வரலாற்று ரீதியிலான கட்டாயத்தின் காரணமாக ரஷ்ய ஆளும் தரப்பு தான், கடந்த 30 ஆண்டுகளாக ரஷ்ய கூட்டமைப்பு கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வரும் பாதையைப் பின்பற்ற வேண்டியுள்ளது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடி வரும் கியூபா, வெனிசூலா மற்றும் இதர நாடுகளுக்கும், மக்களுக்கும் ரஷ்ய கூட்டமைப்பு கம்யூனிஸ்ட் கட்சி அதன் ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது.

சோவியத் ஒன்றியம் நிறுவப்பட்டதன் நூற்றாண்டைக் குறிக்கும் நிகழ்வுகளுக்கான தேதி விரைவில் அறிவிக்கப்படவுள்ளது.

பாட்டாளிவர்க்க சர்வதேசியம் நீடூழி வாழ்க!

கியூபா நீடூழி வாழ்க!

# புதியதொரு சமுதாயம் படைக்க உறுதி ஏற்போம்



## திருப்பூரில் இரா.முத்தரசன் பேச்சு



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு தினத்தை முன்னிட்டு திருப்பூர் குமரன் சிலை அருகில் இருந்து மாபெரும் செந்தொண்டர் பேரணி மற்றும் அணிவகுப்பு நடைபெற்றது.

பேரணிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணை செயலாளர் நா. பெரியசாமி ஆகியோர் தலைமை ஏற்றனர்.

பேரணியில் மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, திருப்பூர் மாமன்ற துணை மேயர் எம். கே.எம். பாலு என்ற பாலசுப்பிரமணியம் மற்றும் கட்சியின் மாநகர், புறநகர் மாவட்ட செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் இடைக்குழு செயலாளர்கள் அணிவகுத்து வந்தனர்.

பேரணி அரிசி கடை மைதானம் வந்தடைந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக் கூட்ட நிகழ்ச்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். புறநகர் மாவட்ட செயலாளர் கே. எம்.இசாக் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி.ன் பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன், மாநிலத் தலைவர் எஸ்.எஸ்.காசிவிசுவநாதன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

பொதுக்கூட்டம் தொடங்கியதிலிருந்து கனமழை கொட்டியது. மழையையும் பொருட்படுத்தாமல் தலைவர்கள் உரை நிகழ்த்தினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் பேசும்போது, "இந்த பேரணி பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நா. பெரியசாமி குறிப்பிட்டதை போல திருப்பூரில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் இதுபோன்ற பேரணிகள் தொடர்ந்து நடைபெற இருக்கிறது.

இந்தப் பேரணி நம்முடைய வலிமையை காட்டுவதற்காக அல்ல, மாறாக நாட்டின் அரசியலை, நாட்டு மக்களுக்கு தோலுரித்துக் காட்டுவதற்காக, நாட்டு மக்களிடத்திலே அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக கம்யூனிஸ்ட் கட்சி இத்தகைய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.

இந்தப் பேரணி பொதுக்கூட்டத்தில் பங்கேற்க வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் சென்னையில் ஜவஹர்லால் நேரு குறித்து ஒரு புத்தக வெளியீட்டு விழா நடைபெறுகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதில் கலந்து கொண்டு புத்தகத்தை வெளியிடுகிறார். அந்த புத்தகத்தை காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான கோபண்ணா எழுதியிருக்கிறார். அந்த நூலை பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்ற வேண்டி இருப்பதால் கே.சுப்புராயன் சென்னையில் இருக்க வேண்டி உள்ளது. எனவே, அவர் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள இயலவில்லை.





நாடாளுமன்றத்தில் நம்முடைய கே. சுப்பராயன் ஒரு கேள்வியை கேட்டார், ' நாட்டில் பின்தங்கிய ஏழை மாணவர்கள் வங்கிகளில் கடன் பெற்று இருக்கிறார்கள். கல்வி கடன் மிக மிகக் குறைந்த தொகை, அந்தத் தொகையை தள்ளுபடி செய்ய வேண்டும். பெரியபெரிய பணக்காரர்களுக்கு முதலாளிகளுக்கு, தேசிய முதலாளிகளுக்கு, ஆசியாவிலேயே நான்தான் பெரிய முதலாளி என்று சொல்லிக் கொண்டு இருப்பவர்களுக்கெல்லாம் இந்த அரசு ரூ.10 லட்சம் கோடியை தள்ளுபடி செய்திருக்கிறது.

அப்படிப்பட்ட அரசு, மாணவர்கள் பெற்றுள்ள கல்வி கடனை தள்ளுபடி செய்ய வேண்டும்' என்று கேட்டார்.

அதற்கு பதில் அளித்த நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், மாணவர்கள் பெற்றுள்ள கடனை அரசு தள்ளுபடி செய்வது குறித்து எதுவும் பேசவில்லை, மாறாக, 'நாங்கள் பத்து லட்சம் கோடியை தள்ளுபடி செய்யவில்லை உங்களுக்கு யார் இந்த தகவலை சொன்னது, ரூ.10 லட்சம் கோடியை ரைட் ஆப் செய்திருக்கிறோம்' என்று நாடாளுமன்றத்தில் சொன்னார்.

தி.மு.க. எம்.பி. தயாநிதி மாறன் எழுந்து, 'பொய் பொய் பொய்', என்று கூறினார். அதற்கு நிர்மலா சீதாராமன்,' நீங்கள் பொய் என்ற வார்த்தையை பயன்படுத்தக் கூடாது' என்று கூறினார். அதற்கு மாறன், 'நான் பொய் என்ற வார்த்தையை கூறவில்லை, உண்மையில்லை, உண்மையில்லை', என்று திரும்பச் சொன்னார்.

எனவே, நாடாளுமன்றம் எப்படி போய்க்கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் பார்ப்பீர்களேயானால், இந்த அரசு சாமானியர்களுக்கான அரசு அல்ல, ஏழை மக்களுக்கான அரசு அல்ல, எளிய மக்களுக்கான அரசு அல்ல, உழைப்பாளி மக்களுக்கான அரசு அல்ல, மாறாக நாட்டின் ஆகப்பெரிய முதலாளிகளான அம்பானி, அதானி போன்ற முதலாளிகளுக்கு ஆதரவான அரசு. அவர்களின் வருமானத்தை பன்மடங்காக பெருக்கிக் கொள்வதற்கு உதவும் அரசு.

இந்த அரசு இந்த நாடு ஏற்றுக் கொண்டிருக்கிற மதச் சார்பின்மை கொள்கைக்கு எதிராக, மதத்தின் பெயரால் மக்களை தூண்டி, சாதியின் பெயரால், மொழியின் பெயரால் பிளவுபடுத்தி, தங்கள் ஆட்சியை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்காக சதி செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற அரசு.

தற்போது அதிகாரத்தில் இருப்பவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றவர்கள் அல்ல, சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெறாதது மட்டுமல்ல, எதிராக செயல்பட்டவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

வெள்ளைக்காரர்களுக்கு வெண்சாமரம் வீசியவர்கள் அதிகாரத்திற்கு வந்து விட்டார்கள். இவர்கள் மனுதர்மக் கொள்கையை அமுல் படுத்துவதற்குரிய அனைத்து வேலைகளையும் செய்து வருகிறார்கள். இது நாட்டிற்கு ஆபத்து, மக்களுக்கு ஆபத்து, இதை எதிர்த்து தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போராடிக் கொண்டிருக்கிறது.

1925 ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் நாள் கான்பூரில், தனித்தனி குழுக்களாக இருந்த கம்யூனிஸ்டுகள் ஒன்று கூடி கட்சியின் முதல் மாநாட்டை நடத்தி டிசம்பர் 26 ஆம் நாள் இந்த கட்சிக்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்று பெயரிட்டார்கள்.

இந்த கட்சி 97 ஆண்டுகளை நிறைவு செய்து 98 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது.

கடந்த 97 ஆண்டுகளாக கட்சி பெற்ற அனுபவத்திலிருந்தும், சிந்திய ரத்தத்திலிருந்தும், தியாகத்தில் இருந்தும் இந்த நாட்டை மாற்றி அமைப்பதற்கு புதியதொரு சமுதாயத்தை படைக்க அனைவரும் உறுதி ஏற்போம்.

### சென்னை, கிண்டியில் உள்ள ஆளுநர் ரவி

இதுவரை தமிழ்நாட்டில் ஆன்லைன் சூதாட்டத்தில் 50 கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து கொண்டு மடிந்து இருக்கிறார்கள். ஆன்லைன் சூதாட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று அவசர சட்டம் அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டது. சட்டசபையில் சட்டம் நிறைவேற்றி சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் ரவிக்கு அனுப்பப்பட்டு பல மாதங்கள் ஆகிறது. இதுவரையில் அவர் கையெழுத்திட வில்லை, ஆன்லைன் சூதாட்ட கம்பெனிகள் நடத்தி கோடி கோடியாக கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் ஒன்பது பெரிய ஆட்களோடு இது சம்பந்தமாக பேச்சு நடத்துகிறார் என்றால் அதன் பொருள் என்ன? இந்த ஆளுநர் யாருக்காக இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்? அவர் மதச்சார்பின்மை கொள்கைக்கு எதிராக பேசுகிறார். இந்த நாடு இந்துக்கள் நாடு என்கிறார். இது போன்ற பல்வேறு தவறுகளை திரும்பத் திரும்ப செய்து கொண்டிருக்கிறார். ஆகவே ஆளுநர் ரவியை ஒன்றிய அரசு திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்," என்று பேசினார்.



JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 07.01.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## ஈஷா யோகா மைய நடவடிக்கைகள் குறித்து

# ஓய்வு பெற்ற நீதிபதியை கொண்டு முழு விசாரணை நடத்த வேண்டும்

## இரா. முத்தரசன் கோரிக்கை




இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் கோவை ஜீவா இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் ஈசா யோகா மையம், அதன் நடவடிக்கைகள் குறித்து ஓய்வு பெற்ற நீதிபதியை கொண்டு முழு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை கொடுத்தார்.

“ஜக்கி வாசுதேவ் என்கிற சாமியார் நடத்தி வருகிற கோவையில் இயங்கி வரக்கூடிய ஈஷா மையம் குறித்து தொடர்ந்து புகார்கள் வந்து கொண்டே இருக்கிறது. ஏராளமான புகார்கள் பல வருடங்களாக வந்து கொண்டிருக்கிறது. ஜக்கி வாசுதேவ் மனைவியின் சாவே மர்மமாக இருந்து கொண்டிருக்கிறது.

ஈஷா மையத்திற்கு பயிற்சி பெற வந்த பெண்கள் காணாமல் போய்விடுகிறார்கள், தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்திகள் தொடர்ந்து வந்த வண்ணம் இருக்கிறது.

அதேபோல, வனத்துறைக்கு சொந்தமான நிலங்களை ஆக்கிரமித்து தான் இந்த ஈஷா மையம் செயல்படுகிறது, பழங்குடி மக்களை அங்கிருந்து வெளியேற்றுகிறார்கள், வனவிலங்குகளை வேட்டையாடுகிறார்கள், சிறுவர் சிறுமியர்களை அடைத்து வைத்து போதை பழக்கத்தை ஏற்படுத்துகிறார்கள், வெளிநாட்டை சேர்ந்தவர்கள் அனுமதி இல்லாமல் இங்கு வந்து செல்கிறார்கள் என்பது போன்ற பல குற்றச்சாட்டுகள் தொடர்ந்து இந்த ஈஷா யோகா மையத்தின் மீது கூறப்பட்டு வருகிறது.

ஈஷா யோகா மையத்தில் சைலன்ஸ் வகுப்பு டிசம்பர் 11ம் தேதி தொடங்கி 18ம் தேதி வரை நடைபெற்றிருக்கிறது. அதில் ஏராளமான பெண்கள் பங்கேற்று பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அதில் ஒருவர் அவிநாசியை சேர்ந்த சுபஸ்ரீ அவர் ஒரு பனியன் தொழிலாளியின் மனைவி இவரும் ஒரு தொழிலாளி.

**அவர் பதினொன்றாம் தேதி பயிற்சிக்காக வருகிறார். பதினெட்டாம் தேதி பயிற்சி முடிகிறது. அவரது கணவர் மனைவியை அழைத்துச் செல்வதற்கு அன்று காலையே வந்து காத்திருக்கிறார். ஆனால், சுபஸ்ரீ வரவில்லை, அதற்கு மாறாக 18ஆம் தேதி ஈஷா மையத்தில் அவர் கொண்டு வந்த உடைகள் எவற்றையும் எடுக்காமல் அப்படியே விட்டு விட்டு ஈஷா மையத்தில் பயிற்சிக்கு கொடுத்த உடையோடு தப்பி ஓடியதாக சிசிடிவி கேமராவில் பதிவாகி இருக்கிறது.**

18ஆம் தேதி அவரது கணவர் சுபஸ்ரீ வரவில்லை என்று காவல் நிலையத்தில் புகார் அளித்திருக்கிறார். எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் 18ஆம் தேதியிலிருந்து என்ன கதிக்கு ஆளானார் என்று தெரியவில்லை.

ஒன்றாம் தேதி புத்தாண்டு தினத்தன்று, ஈஷா யோகா மையத்திற்கு அருகில் ஒரு கிணற்றில் துர்வாடை வீசி அதை பொதுமக்கள் பார்த்து சொல்லி, அதன் பிறகு காவல்துறையினர் தீயணைப்பு துறையினர் சென்று அழுகிய நிலையில் ஒரு சடலம் எடுக்கப்பட்டு, அவரது கணவரை அழைத்து அது சுபஸ்ரீ தான் என்று அடையாளம் காட்டப்பட்டிருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை வருடத்தின் துவக்க நாள் அரசு மருத்துவமனைகளில் பொதுவாக போஸ்ட் மாடம் செய்ய மாட்டார்கள்.

சுபஸ்ரீயின் சடலம் அவசர அவசரமாக போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட்டு உடல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 18 ம் தேதிக்கும் ஜனவரி 1ம் தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில் 24 ஆம் தேதி சுபஸ்ரீயின் கணவர் பழனிகுமாரை அழைத்து சாமியார் அவரோடு உரையாடி ஆறுதல் சொல்லி, உத்திராட்ச மாலை கொடுத்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அங்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. ஆசிரியர் மரணம் என்பது சந்தேகத்திற்குரியது, கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. யோகா மையம், அதை நடத்தி வருகிற ஜக்கி வாசுதேவ் செல்வாக்கு மிக்கவர் பிரதமரே அவரிடத்திற்கு வருகிறார். ஆதியோகி சிலை திறப்பு விழாவில் நாட்டின் பிரதமரே நேரில் கலந்து கொள்கிறார். மதச்சார்பற்ற ஒரு நாட்டின் பிரதமர் இதுபோன்ற ஒரு மாதம் சார்ந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடாது. ஆனால் பிரதமர் நேராக கலந்து கொள்கிறார்.

பண்டித ஜவஹர்லால் நேரு இது போன்ற எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டதில்லை. அண்மையில் பாரதிய ஜனதா கட்சியினுடைய தேசிய தலைவர் நட்டா கடந்த 27 ஆம் தேதி ஈஷா மையத்திற்கு செல்கிறார், ஜாக்கி தானே அவரது ஜிப்பிலே அவரை அழைத்துச் செல்கிறார். ஒன்றிய அரசாங்கத்தினுடைய மிகுந்த செல்வாக்கு பெற்ற நிறுவனமாக அந்த நிறுவனம் இருக்கிறது. ஒன்றிய அரசின் அமைச்சர்களின் ஆதரவு பிரதமரினுடைய ஆதரவு, உயர் அதிகாரிகளுடைய ஆதரவு என்று அனைவருடைய ஆதரவையும் அந்த நிறுவனம் தேடி வைத்திருக்கிறது.

அது ஒரு செல்வாக்கு பெற்ற நிறுவனமாக இருக்கிற காரணத்தினால், சுபஸ்ரீனுடைய மரணம் மறைக்கப்படுகிறது என்று பொதுமக்கள் மத்தியிலே ஒரு ஐயம் நிலவுகிறது. இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்த வழக்கில் காவல்துறை மிகுந்த மென்மை போக்கை கையாளுகிறது. அமைதி காக்கிறது. ஏன் இப்படி அமைதி காக்கிறார்கள் என்பது புரியாத புதிராக இருக்கிறது. இந்த பிரச்சினையில் ஜக்கி வாசுதேவை நேரடியாக விசாரிக்கப்பட வேண்டும். ஏனென்றால் இதுபோன்ற சம்பவங்கள் அங்கு தொடர்ந்து நடைபெறுவதாக ஊடகங்களில் செய்திகள் பல ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கிறது.

ஜக்கி வாசுதேவ் அவருடைய மனைவியின் மரணத்தில் காவல் நிலையத்தில் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது இதுவரை தெரியவில்லை.

செல்வாக்கு பெற்ற ஒரு நபர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற ஒரு நிலை ஏற்பட்டால் அது மிக, மிக ஆபத்தானது. சாதாரண மக்களுடைய வாழ்க்கை கேள்விக்குறியாகி விடும். ஏற்கனவே, கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு விரிவான அறிக்கை வெளியிடப்படப்பட்டுள்ளது. எனவே,

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு கூறுவது ஓய்வு பெற்ற ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியை கொண்டு விசாரணை நடத்தப்பட வேண்டும்.**

**அந்த நீதிபதி ஒரு சமூக அக்கறை உள்ளவராக, நேர்மை உள்ளவராக இருக்க வேண்டும் அப்படிப்பட்ட ஒருவரை மாநில அரசு தேர்வு செய்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும்.**

இந்த ஈஷா மையத்தின் நடவடிக்கைகள், வாசுதேவ் நடவடிக்கைகள் குறித்து ஒரு முழு விசாரணை நடத்தப்பட்டு, நடவடிக்கை எடுப்பதன் மூலம் தான் இத்தகைய படுகொலைகளை தடுக்க முடியும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

பொதுமக்களிடமிருந்தும், அரசியல் கட்சிகளிடமிருந்தும் இந்த ஈஷா மையத்தை உடனடியாக மூட வேண்டும் என்ற கோரிக்கை வருகிறது. ஏற்கனவே, இந்த பிரச்சனைகளை மையப்படுத்தி ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்று இருக்கின்றன. வருகிற 6 ம் தேதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாநில பொருளாளர் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் எம்.ஆறுமுகம் தலைமையில் விசாரணை கோரி, கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகில், ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஒரு முக்கியமான பிரச்சனை இந்த மாதிரியான இடங்களில் விரும்பத்தகாத சம்பவங்கள், படுகொலைகள், பெண்களை சீரழித்தல், மூளை சலவை செய்தல், பயிற்சிக்கு வந்தவர்களை தாய் தந்தையரைகூட சந்திக்க விடாமல் இருக்க வைக்கக்கூடிய நிலைமை, இந்த நிறுவனம் இது போன்ற பல நிறுவனங்களிலும் இருக்கின்றன என்ற அடிப்படையில் இந்த நிறுவனத்தின் மீது முழு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாடு அரசாங்கம் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி கேட்டுக் கொள்வதோடு, இது தொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கோவை மாவட்டத்தில் உள்ள பிற ஜனநாயக அமைப்புகளும், இயக்கங்களும், அரசியல் கட்சிகளும் தாங்கள் தங்களுடைய கருத்தை வெளிப்படுத்த வேண்டும். மௌனம் காக்க கூடாது.

இந்த நிறுவனம் பல செல்வாக்கு மிக்க நபர்களின் பினாமியாக செயல்படுகிறது என்ற ஒரு கருத்தும் இருக்கிறது.

எனவே, ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள, இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறக்கூடாது என்று கருதுகிற அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் தங்களுடைய கருத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

2016 ஆம் ஆண்டு உயர் மதிப்பு ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று பிரதமர் மோடி அவர்கள் திடீரென்று எந்த விதமான முன் அறிவிப்பும் இல்லாமல் அறிவித்தார்.

1000 ரூபாய் 500 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அவர் அறிவித்ததன் நோக்கம், நாட்டையும், நாட்டு மக்களையும், அரசாங்கத்தையும் ஏமாற்றி பதுக்கி வைத்திருக்கிற கருப்பு பணத்தை வெளிக்கொண்டுவருவது, ஊழலை கட்டுப்படுத்த, கள்ள நோட்டுகளை தடுக்க, பயங்கரவாதிகளுக்கு செல்லுகின்ற நிதி உதவிகளை தடுத்து நிறுத்த என்ற இந்த பிரச்சனைகளுக்காக செல்லாது என்று அறிவிப்பதாக மோடி அறிவித்தார்.

இவை அனைத்தையும் மோடியே சொல்லி இருக்கிறார். இது நல்ல விஷயம் தான். ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவித்ததால் அதனுடைய நோக்கம் நிறைவேறியதா ? என்றால் இல்லை. கருப்பு பணம் ஒரு ரூபாய் கூட பிடிபடவில்லை. ரிசர்வ் வங்கியில் இருந்து அச்சிடப்பட்ட அனைத்து நோட்டுகளும் மீண்டும் ரிசர்வ் வங்கிக்கு வந்து விட்டது. செல்லாது என்று அறிவித்தது கருப்பு பணத்தை வெள்ளையாக்கிக் கொள்வதற்கு உதவி இருக்கிறது. கள்ள நோட்டு இன்றும் புழக்கத்தில் இருக்கிறது.

கோடி கோடியாக கருப்பு பணம் வைத்திருந்தவர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை. அதே நேரத்தில் சாதாரண ஏழை எளிய மக்கள், சிறு குறு தொழில் செய்யக்கூடியவர்கள், வணிகர்கள் இவர்கள்தான் மிகப்பெரும் அளவிற்கு பாதிப்பிற்கு உள்ளானார்கள்.

பல பேர் உயிரிழந்தார்கள். பல பேர் நாட்கணக்கில் வரிசையில் நின்று மயங்கி கீழே விழுந்தார்கள். வங்கி ஊழியர்கள் மன உளைச்சலுக்கு ஆளானார்கள். இதுகுறித்து உச்ச நீதிமன்றம் அரசியல் சாசன அமைப்பு விசாரித்து ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. நான்கு பேர் அரசாங்கத்திற்கு சாதகமான தீர்ப்பை சொல்லி இருக்கிறார்கள். ஒருவர் நாகரத்தினம் மிகக் கடுமையாக ஆட்சேபனை செய்திருக்கிறார்.

நான்கு நீதிபதிகள் ஒன்றிய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்று சொல்லி இருக்கிறார்கள். அதுவா பிரச்சனை? ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவித்ததால் ஏற்பட்ட பலன் என்ன? நோக்கம் நிறைவேறியதா? எள் முனையளவு கூட நோக்கம் நிறைவேறவில்லை. அது குறித்து நீதிமன்றம் என்ன சொல்லி இருக்கிறது என்றும் முத்தரசன் கேள்வி எழுப்பினார்.

இந்த பேட்டியின் போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா. பெரியசாமி, மாநில பொருளாளர் எம். ஆறுமுகம், கோவை மாவட்ட செயலாளர் சி. சிவசாமி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஜே. ஜேம்ஸ், எம். குணசேகர் ஆகியோர் உடன் இருந்தனர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.